கல்கி



KALKI ஜூலை 11, 1954 4 அணா




"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின்
நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது."
என்கிறார்
பி.எஸ். ஸரோஜா
LUX
LUX TOILET SOAP
இந்தியாவில் தயாரித்தது.
லக்ஸ் டாய்லட் சோப்பின் செழிப்பான, மிக மென்மையான நுரை உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. பி. எஸ். ஸரோஜா கூறுவதாவது: "இந்த வெண்மையான, சுத்தமான சோப்பை வழக்கமாக உபயோகிப்பது உங்கள் சருமத்திற்கு குறிப்பிடத் தக்க மாறுதலை அளிக்கிறது. அதன் ஆழப்புகுந்து சுத்தம் செய்யும் நுரை உங்கள் சருமத்தை மலரிதழ் போல் மென்மையாகவும், அழகாகவும் இருக்கச் செய்கிறது."
முக்கிய செய்தி!
தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க
புதிய பெரிய ஸைஸிலும்
இப்பொழுது கிடைக்கிறது.
இன்றே வாங்குங்கள்!
". . . அதனால் தான் என் வதனத்திற்கு எப்பொழுதும் லக்ஸ் டாய்லட் சோப்பின் பாதுகாப்பை அளிக்கிறேன்."
சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★
LTS. 423-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 13
இதழ் 50

1954 ஜூலை 11

ஜய ஆனி 27


"அதற்குச்
சிறிதும்
சந்தேகம்
கிடையாது
அவர் வெகு அழகாக
அணிந்து கொண்டிருப்பது
பின்னி மில்
துணிகளே"

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 50

வேலையோ வேலை!

துள்ளித் திரிந்து குதூகலமாக வாழ்க்கை நடத்த வேண்டிய வாலிபப் பிராயத்தினர் பலர் நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன்—ஜுலை மாதங்களில் மூன்று வித வேதனைகளுக்கு ஆளாகித் தவிக்கின்றனர்.

"ஐயோ! பரீட்சையில் தவறி விட்டேனே! இன்னும் ஒரு வருஷம் படித்ததையே படித்துக் காலத்தை ஓட்ட வேண்டுமே? பெற்றோர் மனத்தைப் புண்படுத்தி விட்டேனே? படிப்புச் செலவுக்குப் பணம் வேண்டுமே?" என்று ஆயிரக் கணக்கான வாலிபர்கள் அவதிப் படுகிறார்கள்.

"எந்தக் கலாசாலையில் இடம் கிடைக்கும்? எந்தக் 'குருப்'பில் இடம் கிடைக்கும்? எத்தனை கலாசாலைகளுக்கு விண்ணப்பம் போட வேண்டும்? சிபாரிசுக்கு யாரைப் பிடிக்க வேண்டும்?" என்று தவித்து விட்டு, பல கல்வி நிலையங்களுக்கு விண்ணப்பம் போட்டு விட்டு, பதில் என்ன வருமோ என்று ஆயிரக் கணக்கான இளைஞர்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

இந்த இரண்டுவித வேதனையைக் காட்டிலும் பெரிய வேதனை-கொடிய வேதனை-வேலை தேடும் வேதனையாகும். எஸ். எஸ். எல். சி., இண்டர்மீடியட் வகுப்புகளுடன் படிப்பை நிறுத்தி விட்டவர்களும், கலாசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து பி. ஏ., பி. எஸ்சி. அல்லது பி. ஏ. ஆனர்ஸ் பட்டங்களைப் பெற்றுக் கொண்டவர்களும் வேலை தேடும் பிரயத்தனத்தில் இறங்குகிறார்கள்.

"வேலை! வேலை!" என்று இங்குமங்கும் அலைகிறார்கள். பற்பல விண்ணப்பங்கள் போடுகிறார்கள். வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் பெயர்களைப் பதிவு செய்கிறார்கள். காரியாலயங்களைத் தேடிச் சென்று கால் நோகும் வரையில் மச்சுப்படி ஏறி இறங்குகிறார்கள்.

ஆண்டு தோறும் நாடெங்குமுள்ள உயர்தரப் பள்ளிகள் லட்சக் கணக்கான எஸ். எஸ். எல். சி.க்களையும், கல்லூரிகள் ஆயிரம் பதினாயிரக் கணக்கில் இண்டர்மீடியட் தேறியவர்களையும், பி. ஏ. பட்டதாரிகளையும் வெளியே அனுப்பி வருகின்றன.

அவ்வளவு பேரும் "வேலை! வேலை!" என்று வேதனைப்பட்டு வாடுகிறார்கள்.

பதினெட்டு முதல் இருபத்தைந்து பிராயம் வரையில் உள்ள வாலிபப் பருவத்திலே தான் மனிதனுடைய தேக மனோ சக்திகள் எல்லாம் உச்ச நிலையை அடைந்திருக்கின்றன. அந்தப் பிராயத்திலுள்ள லட்சக் கணக்கான இளைஞர்களை இத்தகைய வேதனைகளுக்கு உள்ளாக்கி, அவர்களுடைய அறிவாற்றலை விரயமாக்கும் ஒரு தேசத்தைப் பற்றியோ, சமூகத்தைப் பற்றியோ யாரும் பெருமை கொள்ள முடியாது. அத்தகைய நிலையை நீடிக்கும் படி விட்டிருக்கும் அரசாங்கம் (வேறு எந்தத் துறையில் எவ்வளவு முன்னேற்றம் காண்பித் தாலும்) தன்னுடைய கடமையைச் செய்யத் தவறி விட்டதேயாகும்.

மேற்கூறிய உண்மைகளை நம் இந்திய அரசாங்கத்தார் சிறிது உணர்ந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து நாம் ஆறுதல் கொள்கிறோம். இது எப்படி நமக்குத் தெரிந்தது என்றால், சென்ற ஜூன் மாதம் 16உ இந்திய சர்க்காரின் திட்ட மந்திரி ஸ்ரீ ஜி. எல். நந்தா அகில இந்திய ரேடியோவில் ஒரு பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்திலிருந்து தெரிய வந்தது.

"வேலையில்லாப் பிரச்னையையும் வேலை குறைவாயுள்ள பிரச்னையையும் தீர்த்து வைக்க முடியாத எந்தத் திட்டமும் இந்தத் தேசத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய திட்டமாகாது!" என்று ஸ்ரீ ஜி. எல். நந்தா தமது பிரசங்கத்தைத் தொடங்கினார். பிரசங்கத்தின் தலைப்பு "ஐந்து வருஷத் திட்டமும் வேலையில்லாப் பிரச்னையும்" என்பதுதான்.

இவ்விதம் நல்ல முறையில் பிரசங்கத்தை ஆரம்பித்த ஸ்ரீ நந்தா, பின்னால் கூறிய விவரங்கள் அவ்வளவு உற்சாகம் அளிக்கக் கூடியனவாக இல்லை. அவருடைய அபிப்பிராயங்களில் காணப்பட்ட குழப்பம் மேற்படி பிரச்னை எவ்வளவு கடினமானது என்பதை விளக்கியது. அத்துடன், இது வரையில் இந்திய சர்க்காரும் சரி, ஐந்து வருஷத் திட்டக் கமிஷனும் சரி, வேலை யில்லாமைப் பிரச்னையைத் தீர்ப்பதில் போதிய கவனம் செலுத்தித் தகுந்த நடவடிக்கை எடுக்க வில்லை என்பதையும் நிரூபித்தது.

ஸ்ரீ நந்தா தம் பிரசங்கத்தில் இந்தப் பிரச்னை சம்பந்தமான திடுக்கிடச் செய்யும் சில புள்ளி விவரங்களைக் கொடுத்தார்.

ஐந்து வருஷத் திட்டம் பாதிக் கிணறு தாண்டி யிருந்தபோது, அதாவது இரண்டரை வருடம் ஆகியிருந்த சமயத்தில், படித்தவர் களிடையே வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகமாகி வருகிறது என்பதற்குச் சில அறி குறிகள் காணப்பட்டனவாம். இதனால் வருங் காலத்தைப் பற்றிய கவலை தோன்றியதாம். கவ லைப்படுவதற்குக் காரணம் உண்டு என்பது வேலை தேடித் தரும் ஸ்தாபனங்கள் (Employment Exchanges) கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து நிரூபிக்கப்பட்டதாம். கேளுங்கள் அந்தப் புள்ளி விவரங்களை :—

1952 மார்ச்சுடன் முடிந்த மூன்று மாதங்களில் வேலைப் பதிவு ஸ்தாபனங்களில் சராசரி 3,30,000 பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண் டிருந்தார்கள்.

1953 மார்ச்சு மாதத்தில் மேற்படி தொகை 4,29,000 ஆகப் பெருகி விட்டது.

*1954-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மேற்படி ஸ்தாபனங்களில் பதிவாகி யிருந்தவர்களின் எண் ணிக்கை 5,33,000 ஆகி விட்டது!**

ஆகவே, ஐந்து வருஷத் திட்டம் அமுல் நடந்து கொண்டிருந்த இரண்டு வருஷ காலத்தில் வேலை யில்லாதவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சம் அதிகமாயிற்று என்று ஏற்பட்டது.

இதே காலத்தில் கிடைக்கக் கூடிய உத்தியோ கங்களின் தொகை குறைந்து வந்திருப்பதையும் ஸ்ரீ ஜி. எல். நந்தா குறிப்பிட்டார்.

1952-ல் 35,800 வேலைகளுக்கு ஆள் தேவை என்று பதிவாகி யிருந்தது.

1953-ல் இது 21,400 ஆகக் குறைந்தது.

1954 மார்ச்சு மாதத்தில் இது 19,000 ஆகக் குறைந்து விட்டது!

மேற்படி புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருவது என்ன!

லட்சக் கணக்கானவர்கள் வேலை தேடுகிறார்கள்!

கிடைக்கக் கூடிய வேலைகளோ ஆயிரக் கணக் கிலேதான் இருக்கின்றன!

வேலை தேடுவோரின் தொகை லட்சக் கணக்கில் பெருகி வருகின்றன!

கிடைக்கக் கூடிய வேலைகளோ ஆயிரக் கணக் கில் குறைந்து வருகின்றன!

இது திருப்திகரமான நிலைமை என்று யாரே னும் சொல்ல முடியுமா!

பத்து வருஷமும், பதினைந்து வருஷமும், இருபது வருஷமும் அரும் பாடுபட்டுப் பணம் செலவு செய்து படித்துப் பரீட்சை எழுதிவிட்டு வந்திருக் கும் வாலிபர்கள், (இருபது முதல் இருபத்தைந்து பிராயம் வரையுள்ள இளங் காளைப் பருவத்தினர்.) லட்சக் கணக்கானவர்கள் செய்வதற்கு வேலை யின்றிக் கையைப் பிசைந்து ஏங்கி நிற்கும் நிலைமை யைப் பற்றிக் கவலை கொள்ளாதிருக்க முடியுமா!

* வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் (Employment Exchanges) பதிவு செய்து கொள்வதில் பயனில்லை யென்று கருதி, அவ் விதம் பதிவு செய்து கொள்ளாமல் வேலையில்லா மல் தவித்துக் கொண்டிருப்பவர்கள் இன்னும் பல லட்சக்கணக்கில் இருக்க வேண்டும்.

தேசத்துக்கும் சமூகத்துக்கும் இது எவ்வளவு மகத்தான நஷ்டம்!

நதிகளின் உடைப்புக்கள், சூறைக் காற்றுக்கள் முதலிய இயற்கை விபரீதங்களினால் தேசம் அடை யும் நஷ்டத்தைக் காட்டிலும் லட்சக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலையின்றி உட்கார்ந்திருப் பதினால் தேசம் அதிக நஷ்டம் அடைகிறது.

ஸ்ரீ ஜி. எல். நந்தா மேற்படி புள்ளி விவரங்களைக் கொடுத்துவிட்டு, இந்த நிலைமைக்கு ஏதோ ஒரு விதச் சமாதானமும் சொல்ல முயன்றார்.

"இது ஒரு இடைவேளைக் கர்ப்ப வேதனை போன்றது. சீக்கிரத்தில் ஐந்து வருஷத் திட் டப் பிள்ளை உருவாகிப் பிறந்துவிடும். இரண்டா வது ஐந்து வருஷத் திட்டத்தில் எல்லாம் சரியாய்ப் போய்விடும்!" என்று ஆறுதல் கூறினார்.

"நாட்டில் – ஒரு பக்கம் வேலை கிடைக்கும் சாதனங்களும் அதிகமாகி வருகின்றன : மற்றொரு பக்கம் வேலையின்மையும் பெருகி வருகிறது!" என்று ஒரு பிதிர் போட்டார்.

ஸ்ரீ நந்தாவின் காரண காரிய விளக்கங்கள் அவ்வளவு திருப்திகரமாக அமையவில்லை. ஆனாலும், வேலையில்லாமை பெருகி வருகிறது என்பதையும், அதற்குப் பரிகாரம் தேட வேண் டும் என்பதையும், ஐந்து வருஷத் திட்ட மந்திரி ஒப்புக் கொண்டு அகில இந்திய ரேடியோவில் பேசிய அளவில் நாம் திருப்தி அடையலாம்.

** ** **

ஏப்ரல் 25உ "கல்கி" இதழில் "தேசமே! முன்னேறு!" "ஆள் பலமே நம் அரும் பெரும் செல்வம்" என்ற தலைப்புக்களில் எழுதியிருந் ததை நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

பாரத நாட்டின் மிக முக்கியமான செல்வம் இந் நாட்டிலுள்ள ஆள் பலந்தான்.

அந்த ஆள் பலத்தைப் பூரணமாக உபயோகப் படுத்திக் கொள்வது எப்படி என்று நன்கு யோசித்து, அந்த அடிப்படையில் தேச முன் னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

ஐந்து வருஷத் திட்டம் அந்தமாதிரி வகுக்கப் படாத படியினால்தான், மேற்படி திட்டத்துக்கா கக் கோடி கோடியாக ஒரு பக்கம் பணம் செல விட்டுக் கொண்டிருக்கையில், நாட்டில் வேலை யில்லாதவர்களின் எண்ணிக்கை இன்னொரு பக்கம் அதிகமாகிக் கொண்டு வருகிறது.


பஞ்சாப்பில் தானிய விளைவு மூன்று மடங்கு பெருகி யிருக்கும்போது, வங்காளத்தில் அறுபது லட்சம் ஜனங்கள் பஞ்சத்தினால் மடிந்தார்கள் என்றால், அத்தகைய நிலைமையில் யாரும் திருப்தி கொள்ள முடியாது.

அதுபோலவே, "சித்தரஞ்சன் தொழிற்சாலை யில் என்ஜின்கள் தயாரிக்கிறோம்" "சிந்தரி தொழிற்சாலையில் உரங்கள் உற்பத்தி செய்கி றோம்" என்று பெருமையடித்துக் கொண்டிருக் கையில், நாட்டில் படித்த இளைஞர்கள் லட்சக் கணக்கானவர்கள் வேலையின்றி வேதனைப்படும் படி விடுவது விவேகம் ஆகாது.

திட்ட மந்திரி ஸ்ரீ ஜி. எல். நந்தா இதை ஓரள வேனும் உணர்ந்திருக்கிறார் என்பதை அறிந்து நாமும் ஓரளவு திருப்தி அடையலாம்.

இந்த நிலைமைக்குப் பரிகாரம் தேடத் திறமை யான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால் பரிபூரண திருப்தி அடையலாம்.

சர்வம் ஆராய்ச்சி மயம்!!



புது டில்லியிலிருந்து ஜூலை 3உ வந்த செய்தி ஒன்றில், தேசிய திட்டக் கமிஷன் விசேஷ கமிட்டியார் முப்பத்தெட்டு வகைகளில் ஆராய்ச்சி செய்வதற்கு நியமித்திருக்கும் நிபுணர்களைப் பற்றிய விவரங்கள் வெளியாகி யிருக்கின்றன.

பரிகாரம் என்ன ?

இந்தியா சுதந்திரம் பெற்று ஏழு ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஏழு ஆண்டுகளில் பல துறைகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெரிய பெரிய அணைக்கட்டுக்கள் கட்டப்பட்டு வருகின்றன. பெரிய பெரிய மின்சார நிலையங்களும் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் நற்பயன்களை இன்னும் சில ஆண்டுகளுக்குள் தேச மக்கள் கண்டு அநுபவித்து மகிழ்வார்கள்.

ஆயினும் இப்போதைக்கு நாட்டில் வேலையின்மை அதிகரித்து வருவதைக் காண்கிறோம். மேற்கூறிய பெரிய பெரிய திட்டங்கள் பூரணமாக நிறைவேறினாலும் வேலையின்மைப் பிரச்னையை அவற்றினால் தீர்த்து வைக்க முடியாது. தற்போது மேற்படி பெரிய அணைக்கட்டுத் திட்டங்களில் நூற்றுக் கணக்கான என்ஜினியர்கள், ஆயிரக் கணக்கான குமாஸ்தாக்கள், லட்சக் கணக்கான உடலுழைப்புத் தொழிலாளிகள் வேலை செய்து வருகிறார்கள்.

அணைக்கட்டுத் திட்டங்கள் முடிந்தவுடனே, மேற்கூறியவர்களில் பலருக்கு வேலையில்லாமல் போகவும் கூடும். வேலையில்லாதார் பட்டாளங்களில் அவர்களும் சேரும்படி நேரிடக் கூடும்.

இதற்கிடையில் நமது உயர்தரப் பள்ளிகளும், கல்லூரிகளும், படித்த பட்டதாரிகளை ஆயிரம் பதினாயிரக் கணக்கில் ஆண்டுதோறும் வெளியே அனுப்பி வருகின்றன.

ஆகவே, வருஷா வருஷம் வளர்ந்து பெருகிவரப் போகிற வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைச் சமாளிப்பது எப்படி !

சர்க்கார் உத்தியோகங்கள் இனிமேல் அதிகமாகக்கூடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் சர்க்கார் இலாகாக்கள் பலப்பல துறைகளில் மிகவும் விஸ்தாரமடைந்திருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஓர் உத்தியோகஸ்தர் பார்த்த வேலையை இப்போது ஆறு உத்தியோகஸ்தர்கள் பார்க்கிறார்கள் !

சென்ற ஏழு வருஷங்களுக்குள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகமாகி யிருக்கிறது.

அப்படியிருக்கும், புதிது புதிதாக வெளி வந்து கொண்டிருக்கும் பட்டதாரிகளுக்கு வேலை கொடுத்துச் சமாளிக்க முடியவில்லை.

இனிமேல் சர்க்கார் இலாகாக்களை அதிகமாக்கவோ, உத்தியோகங்களை அதிகரிக்கவோ இடமிருப்பதாகத் தோன்றவில்லை.

சர்க்கார் உத்தியோகங்களுக்கு மக்களிடம் வரி வசூலித்துத்தான் சம்பளம் கொடுக்க வேண்டும்.

வரி வசூல் தற்போது உச்ச நிலைக்கு வந்து விட்டது. இனிமேல் ஏறுவதற்கில்லை.

மகா யுத்த காலத்தில் பல காரணங்களினால் சில வகுப்பார் அதிகமாகப் பணம் சம்பாதித்தார்கள். பல துறைகளில் வர்த்தகம் பெருகிற்று. ஆதலின் விற்பனை வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி ஆகிய இனங்களில் வரி வசூல் அதிகமாகி வந்தது.

இப்போது வர்த்தக உலகில் வளர்ச்சி நின்று மந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் வரி வசூலை அதிகரிப்பதோ, சர்க்கார் இலாகாக்களையும் உத்தியோகங்களையும் அதிகரிப்பதோ இனி மிகவும் கடினமா யிருக்கும்.

இரும்புத் தொழிற்சாலை, என்ஜின் தொழிற்சாலை, மோட்டார் தொழிற் சாலை முதலிய மிகப் பெரிய அளவிலுள்ள தொழிற் சாலைகளில், எல்லா வேலைகளும் பெரிய இயந்திரங்களின் உதவியினால் நடைபெறுவதினால் இவற்றில் அளிக்கக் கூடிய உத்தியோகங்கள் குறைவாகவே இருக்கும்.

நாட்டில் பெருகி வரும் வேலை யில்லாதார் கூட்டத்தில் மிகச் சிறிய பகுதியினருக்கே அவற்றில் வேலை கிடைக்கக் கூடும்.

பெரிய இயந்திரத் தொழிற்சாலைகள் தேசப் பாதுகாப்புக்கும் சுபிட்சத்துக்கும் மிக அவசியமானவை. ஆனால் அவற்றின் மூலம் வேலையின்மைப் பிரச்னை தீர்ந்து விடாது.

பின், வேலையின்மைக்குப் பரிகாரந்தான் என்ன !

நாடெங்கும் பரவலாகப் பற்பல சிறிய கைத் தொழில்களை ஆரம்பித்து நடத்துவதுதான் வழி.

இத்தகைய சிறிய கைத் தொழில்களைச் சிறிய பட்டணங்களிலும், பெரிய கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டும்.

அதிகம் படித்தவர்கள், சுமாராகப் படித்தவர்கள்,—எல்லாரும் தத்தம் வீட்டிலிருந்தபடி சிறிய இயந்திரங்களைக் கொண்டு செய்யக் கூடிய கைத் தொழில்களாக இருக்க வேண்டும்.

இவற்றுக்கு வேண்டிய மின்சார வசதிகளையும் மூலதனத்தையும் பிற சௌகரியங்களையும் சர்க்கார் செய்து கொடுக்க வேண்டும்.

இத் துறையில் கவனம் செலுத்தித் தீவிரமாக வேலை செய்தால் மட்டுமே நாட்டில் பெருகி வரும் வேலையின்மைப் பிரச்னையைச் சமாளிக்க முடியும்.

திட்டக் கமிஷனின் ஆலோசகராகிய ஸ்ரீ இ. பி. மூன் என்பவர் ஜூலை 6உ வானொலியில் ஒரு பிரசங்கம் செய்தார். அதில், உணவு உற்பத்தி, பருத்தி உற்பத்தி முதலிய துறைகளில் இலட்சியத்தைக் காட்டிலும் அதிக வெற்றி கிடைத்து விட்டதாகக் கூறினார்.

பெரிய ஆலைத் தொழில்களின் உற்பத்தியிலும் கணிசமான வெற்றி கிடைத்து விட்டதாகப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

அவர் கடைசி கடைசியாக வைத்திருந்து பிரசங்க முடிவில் சொல்லியதைக் கேளுங்கள் :—

"குடிசைத் தொழில்கள்—சிறிய கைத் தொழில்களின் பக்கம் திரும்பினோமானால், (நல்ல வேளை, திரும்பினாரே !) இந்தத் துறையில் மட்டும் அதிக அபிவிருத்தி ஏற்படவில்லை என்பதைக் காண்கிறோம். இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன ! முக்கியமான காரணம், தாமதித்து ஆரம்பித்திருப்பதுதான் !......"

போகட்டும்; ஏதோ தாமதித்தாவது ஆரம்பித்திருப்பது பற்றித் திருப்தி அடைவோமாக !

இனியாவது, சிறிய கைத் தொழில்கள் — குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி அடைவதற்கும், அவற்றின் மூலம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை கிடைப்பதற்கும் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நம்புகிறோம்.

• • •

குடிசைத் தொழில்கள்—சிறிய கைத் தொழில்களைப் புதிதாகத் தொடங்குவது ஒருபுற மிருக்க, ஏற்கெனவே நன்றாக நடந்து வரும் இத்தகைய சிறு தொழில்களைப் பற்றி அறிந்து கொள்வதும், அவற்றுக்கு வேண்டிய ஆதரவு அளித்து ஊக்கம் ஊட்டுவதும் அவசியமாகும்.

இதற்கு சம்மாரியன்ற சிறிய பணியைச் செய்ய விரும்பி, நமது ஜூலை 25உ இதழைக் குடிசைத் தொழில் மலராகக் கொண்டு வருகிறோம்.

நந்தாவுக்கு எழுதுங்கள்!

வேலையில்லா வேதனைக்கு ஆளாகியுள்ள படித்த வாலிபர்கள் சிலர் நமக்குக் கடிதம் எழுதினார்கள். வேலையில்லாப் பிரச்னையின் கொடுமையை எடுத்துக் காட்டுவதற்காக அக் கடிதங்களில் இரண்டொன்றை வெளியிட்டோம். அவற்றைப் பார்த்த பிறகு இன்னும் பல வாலிபர்கள் தத்தம் பரிதாப நிலைமையை விளக்கிக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் நாம் வெளியிட இயலாமலிருக்கிறது. வெளியிடுவதினால் கடிதம் எழுதியவர்களுக்குப் பயன் ஒன்றும் விளையப்போவது மில்லை.

நமக்குக் கடிதம் எழுதும் வேலையில்லா வாலிபர்கள் திட்ட மந்திரியான ஸ்ரீ ஜி. எல். நந்தாவுக்கு ஏன் எழுதக் கூடாது? அப்படி எழுதுவதினால் வேலையில்லாத வாலிபர்களின் புண்பட்ட உள்ளத்தின் வேதனையை ஸ்ரீ நந்தா நன்கறிந்து கொண்டு இன்னும் சிறிது தீவிரமாகத் திட்டங்களை வகுக்கக் கூடும் அல்லவா!

தனித்தனியாக எழுதுவோர் எழுதுங்கள். அல்லது ஒரு நகரில் அல்லது ஊரில் வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாகியிருக்கும் வாலிபர்கள் பலர் சேர்ந்து வரிசையாகக் கையெழுத்திட்டு, மகஜர் எழுதும் முறையில் எழுதலாம். "நாங்கள் இத்தனை பேர், படித்த வாலிபர்கள், இங்கே இருக்கிறோம். இன்னின்ன தகுதி உடையவர்கள் இருக்கிறோம். எங்களுக்குத் தகுந்த வேலை பார்த்துக் கொடுப்பதற்குத் திட்டம் தயாரியுங்கள்!" என்று ஸ்ரீ நந்தாவுக்கு எழுதுங்கள். அந்த மாதிரி எழுதும் மகஜரில் ஒரு பிரதியைப் பிரதம மந்திரி நேருவுக்கும் அனுப்பி வையுங்கள்.

ஆனால் "நந்தாவுக்கும், நேருவுக்கும் எழுதி விட்டோமே; தானாக்கே வேலை நம்மைத் தேடிக் கொண்டு வரும்!" என்று இருந்து விடாதீர்கள். அவர்களுக்குப் பாவம், எவ்வளவோ அலுவல்; எவ்வளவோ கவலை!

மகஜரை எழுதிப் போட்டுவிட்டு வேலை தேடிக் கொள்வதற்கு நீங்கள் செய்யக் கூடிய முயற்சிகளைச் செய்து கொண்டிருங்கள்.

வேலையில்லாப் பிரச்னையின் இயல்பைத் தலைவர்கள் தெரிந்து கொள்வதற்கேனும் உங்கள் மகஜர் ஓரளவு பயன்படலாம் அல்லவா!

ஒருவேளை ஸ்ரீ நந்தாவிடமிருந்தோ, ஸ்ரீ நேருவிடமிருந்தோ நல்ல பதில் கிடைத்தது என்றால், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகிறது!

தந்திரிகளின் மந்திரம்

ஒரு மாதத்துக்கு முன்பு உலகத்துக்கு நேர இருந்த கோரமான விபத்து நமது நேருஜியின் தலையீட்டினால் தவிர்க்கப்பட்டது என்ற உண்மை பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

சில தினங்களுக்கு முன் இந்தோ சீனாவில் உள்ள கேந்திர ஸ்தானமான தியன்பியன்பூ என்ற பிரதேசத்தைப் பிரஞ்சுக்காரர்கள் கோட்டை விட்டார்கள் அல்லவா!

அவர்கள் அந்த இடத்தைப் பறி கொடுத்து விடாமல் தடுப்பதற்காக அமெரிக்கா தன் துருப்புகளை அங்கு அனுப்பி, இந்தோ சீனப் போரில் நேரடியாகத் தலையிடத் தீர்மானித்திருந்தது.

பிரிட்டன், பிரான்ஸ், இந்தோ சீனாவிலே பிரஞ்சுக்காரர்களின் தயவில் உள்ள ராஜ்யங்கள், தாய்லந்து, பிலிப்பைன்ஸ், நியூஸீலந்து, ஆஸ்திரேலியா இந்த ஒன்பது நாடுகளையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பெயரால் அமெரிக்கா அந்தப் போரில் ஈடுபட உத்தேசித்திருந்தது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அமெரிக்கா உள்நாட்டு மந்திரி ஜான் பாஸ்டர் டல்லஸ் பிரிட்டனுக்கு விரைந்து சென்றார். பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலுடனும் வெளிநாட்டு மந்திரி ஈடனுடனும் விருந்து உண்டு அளவளாவினார். இந்தோ சீனாவில் பிரஞ்சுக்காரர்கள் தோல்வி அடையாமல் காப்பாற்ற வேண்டுமாயின், மேற்படி நாடுகள் போரில் நேரடியாக ஈடுபடத்தான் வேண்டும் என்பதை சர்ச்சிலும் ஈடனும் ஒத்துக் கொள்ளும்படி செய்தார். தாம் வந்த காரியம் வெற்றி பெற்றதைக் குறித்து மகிழ்ச்சி பொங்க டல்லஸ் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றார்.

இந்தோ சீனப் போரில் அமெரிக்கத் துருப்புகள் நேரடியாக ஈடுபடுமாயின், சீனத் துருப்புகளும் அப்போரில் பிரவேசிக்க நேரும். அதன் விளைவாக இந்தோ சீனப் போர் உக்ரமாகி, ஆசியாவின் அமைதிக்குக் குந்தகம் ஏற்படும்; உலக அமைதிக்கும் உலை வைத்ததாகும் என்று அச்சமயம் ஜவாஹர்லால்ஜி பொதுவாக எச்சரித்ததுடன் நிற்கவில்லை; சர்ச்சிலுக்கும் ஈடனுக்கும் கடிதங்களுக்கு மேல் கடிதங்கள் எழுதினார்.

ஜவாஹர்லால்ஜியின் நேர்மையிலும், ராஜதந்திரத்திலும், தீர்க்க தரிசனத்திலும் நம்பிக்கை கொண்ட சர்ச்சிலும் ஈடனும் அவரது எச்சரிக்கையை அலட்சியம் செய்யத் துணியவில்லை.

முதலில், இந்தோ சீனா பிரச்னை சம்பந்தமாக அமெரிக்க சர்க்காரின் கட்டளைப்படி நடக்கத் தயாராக இருந்த சர்ச்சிலும் ஈடனும், ஜவாஹர்லால்ஜியின் கடிதங்களைப் பார்த்தபின் தங்களுடைய அபிப்பிராயத்தை அடியோடு மாற்றிக் கொண்டு விட்டார்கள்!

சர்ச்சில், ஈடன் மனமாற்றத்தைக் கண்டு அமெரிக்கத் தலைவர்கள் திக்பிரமை அடைந்தனர்.

இவ்விவரங்களை, பிரபல அமெரிக்கப் பத்திரிகையான "டைம்" முதல் பக்கத்தில் பிரமாதமாகப் பிரசுரித்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐஸன்ஹோவரின் வார்த்தையைக் காட்டிலும் நேருஜியின் வார்த்தைக்கு சர்ச்சிலும் ஈடனும் அதிக மதிப்புக் கொடுக்கும்படி ஆகிவிட்டதே என்று அமெரிக்கப் பத்திரிகைகள் அங்கலாய்த்தன.

பல்வேறு உலகப் பிரச்னைகளை ஒட்டியும் அமெரிக்காவுடன் அபிப்பிராய பேதம் கொண்டுள்ள பிரிட்டன், இந்தோசீனா விஷயமாகவும் அமெரிக்காவின் கொள்கையைப் பின்பற்ற விரும்பவில்லை என்பது வெளியாகியது.

இதன் காரணமாக, பிரிட்டன் மீது அமெரிக்காவுக்குக் கோபம் பொங்கியது.

பிரிட்டனும் அமெரிக்காவும் பிரிய வேண்டிய காலம் வந்து விட்டது என்றுகூடச் சில அமெரிக்கப் பிரமுகர்கள் பயமுறுத்தினார்கள்.

அமெரிக்காவில் எழுந்துள்ள புயல் தம்மீது சீறப் போகிறது என்றும், அதைத் தம்மால் சமா

ளிக்க முடியாது என்றும் பலர் கூறியதாக சர்ச்சிலே இப்போது குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அமெரிக்காவின் கோபத்தைத் தணிக்க வேண்டும்; பிரிட்டனின் கொள்கைகளை விளக்கி அமெரிக்கத் தலைவர்களைச் சமாதானப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் சர்ச்சிலும் ஈடனும் அமெரிக்காவுக்குச் சென்றனர்.

* * *

ஆசியாவின் இணையற்ற தலைவர்களான நேருஜியும் சீனப் பிரதமர் சூ என் லாயும் புது டில்லியில் சந்தித்த அதே சமயத்தில் தான் அமெரிக்கா, ஐரோப்பா கண்டங்களின் தலைசிறந்த தலைவர்களான ஜெனரல் ஐசன்ஹோவரும் சர்ச்சிலும் வாஷிங்டனில் சந்தித்துப் பேசினார்கள்.

நேரு — சூ என் லாய் சந்திப்பின் நோக்கமும் ஐசன் ஹோவர் – சர்ச்சில் சந்திப்பின் நோக்கமும் ஒன்றுதான்; அதாவது உலகில் யுத்தம் நேராமல் தவிர்த்து அமைதி நிலவும்படி செய்ய வேண்டும் என்பதுதான்.

ஆனால் அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அமெரிக்கா கையாள விரும்பும் முறைகள் இந்தியாவின் கருத்துக்கும் கொள்கைகளுக்கும் நேர்மாறாக இருக்கின்றன.

அம்முறைகளைக் குறித்துப் பிரிட்டனுக்கே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறதென்றால், அமெரிக்காவின் போக்கைப் பற்றி அதிகமாக எதுவும் சொல்லத் தேவையில்லை.

ஆனால், சிலர் பயந்தது போல் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கருத்து வேற்றுமை முற்றி நெருக்கடி எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

ஐசன்ஹோவர் சர்ச்சிலின் சந்திப்பு திருப்திகரமாகவே முடிவடைந்திருக்கிறது.

உலக அமைதிக்காகவும் ஆயுத பரிகரணத்துக்காகவும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஒருமித்து முயற்சித்து வரும் என்று ஐசன்ஹோவரும் சர்ச்சிலும் கையெழுத்திட்டு விடுத்துள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது.

நியாயமான, நேர்மையான அமைதிக்காகப் பாடுபடும் எந்தத் தேசத்துடனும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஒத்துழைக்க உறுதி கொண்டிருப்பதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சுதந்திரம் பெறத் தகுதி வாய்ந்த எல்லா தேசங்களும் சுதந்திரம் அடையத் தாங்கள் முயற்சிக்கப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஆனால குறிப்பிட்ட நாட்டு மக்கள் சுதந்திரம் பெறத் தகுதி வாய்ந்தவர்களா, இல்லையா என்பதை யார் முடிவு செய்வது என்பதுதான் அவர்களுடைய அறிக்கையிலிருந்து தெளிவாகவில்லை.

* * *

இந்தோ சீனாவில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் பரவி வருகிறது; அதைத் தடுத்து, இந்தோ சீனாவைக் கம்யூனிஸ ஆபத்திலிருந்து காப்பாற்றவே அந்த நாட்டில் தலையிட்டுப் போரைத் தொடர்ந்து நடத்துவதாக அமெரிக்கத் தலைவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இப்போது பிரஞ்சு இந்தியப் பிரதேசங்கள் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் இல்லை.

இந்தியாவைச் சேர்ந்த கோவாவில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் ஏற்பட்டு விடவில்லை.

அப்பிரதேசங்களில் உள்ள மக்கள் சுதந்திரம் இழந்து, முறையே பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலும் போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கத்திலும் அல்லலுற்று வருகிறார்கள்.

மேற்படி பிரதேசங்களில் குட்டி யுத்தத்தை நடத்துவதற்கான முஸ்தீபுகளையும் பிரஞ்சுக்காரர்களும் போர்ச்சுகீசியரும் செய்து வருகிறார்கள்.

உலக அமைதிக்காகப் பாடுபட உறுதி கொண்டிருப்பதாகக் கூறும் ஜெனரல் ஐசன் ஹோவரும் வின்ஸ்டன் சர்ச்சிலும் தங்கள் நேச நாடான பிரான்சும் போர்ச்சுகலும் இந்தியாவில் செய்து வரும் அக்கிரமத்தைத் தடுக்க என்ன முறைகளைக் கைக்கொள்ள உத்தேசித்திருக்கிறார்கள்!

'உலக அமைதி' என்ற மந்திரத்தை வாயளவில் ஜபிப்பதால் உலகில் சமாதானமும் சாந்தியும் ஏற்பட்டு விடாது.

அமெரிக்க—பிரிட்டிஷ் வல்லரசுகள், பிரஞ்சு இந்திய மக்களும் கோவாப் பிரதேச மக்களும் சுதந்திர வாழ்வு பெற வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டு அதைக் காரியத்தில் நடத்தி வைக்க உடனே முன் வர வேண்டும். உலகில் எந்தப் பிரதேசத்திலும் காலனி ஆட்சி நடைபெறுவதை அவர்கள் ஆதரிக்கக் கூடாது. இல்லாத வரையில், இந்தோ-சீனாவைக் கம்யூனிஸத்திலிருந்து பாதுகாக்கப் போரிடுவதாக அவர்கள் கூறுவதை ஆசிய மக்கள் நம்ப மாட்டார்கள். ஆசியாவின் பாதுகாப்புக்காகப் பிரிட்டனும் அமெரிக்காவும் கையாளுவதாகச் சொல்லும் நடவடிக்கைகளையும் ஆதரிக்க மாட்டார்கள்.

புறக்கணிக்க வேண்டாம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை யன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் கண்ட காட்சியை எவரும் மறக்க முடியாது. அங்கு வங்காளக் குடாக் கடலுடன் தமிழ் மக்களின் உணர்ச்சி வெள்ளமும் போட்டி யிட்டது. சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்த ஆறு தமிழ்த் தாலூக்காக்களும் தமிழ் நாட்டுடன் சேரவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக அங்கு நடந்த மாபெரும் கூட்டத்துக்கு ஒரு லட்சம் மக்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியாரும் கூட்டத்தில் பேசிய பிரமுகர்களும் தங்கள் நோக்கத்தை, எவ்வித சந்தேகத்துக்கோ, ஆட்சேபணைக்கோ இடமின்றித் தெளிவாக எடுத்துரைத்தார்கள். சித்தூர் ஜில்லாவில் உள்ள மூன்றரை லட்சம் தமிழ் மக்கள் தமிழ் இராஜ்யத்தில் சேர விரும்புவது எவ்வளவு நியாயமான கோரிக்கை என்பதை விளக்கி வற்புறுத்தினார்கள். மேற்படி ஜில்லாவில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு, தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியைப் படிக்க வசதியின்றி மனம் குமுறும் சோகத்தைக் கண் கலங்கக் கூறினார்கள்.

சித்தூர் ஜில்லாவில் வாழும் தமிழ் மக்களில் பலருக்குத் தெலுங்கு பேசத் தெரியும். அது காரணமாக ஜனத் தொகைக் கணக்கு எடுப்பில் தெலுங்கு பேசத் தெரியும் என்று கூறிய தமிழர்களைத் தெலுங்கர்கள் என்றே அதிகாரிகள் குறித்துக் கொண்டதையும் அம்பலப் படுத்தினார்கள்.

அக் கூட்டத்துக்கு வந்திருந்த லட்சம் சகோதர சகோதரிகளும் இரவு ஒன்பதரை மணிக்குக் கூட்டம் முடியும் வரையில் உற்சாகத்துடன் உட்கார்ந்திருந்தார்கள் எனில், சித்தூர் ஜில்லாப்

பிரச்னையில் அவர்களுக்குள்ள உணர்ச்சியையும் அக்கறையையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆந்திர மாகாணத்தைச் சிருஷ்டிக்க வேண்டும் என்பதற்காக ஆந்திரர்கள் செய்த உக்ரமான கிளர்ச்சியை யாரும் மறந்திருக்க முடியாது. இப்பொழுதுகூட ஆந்திர காங்கிரஸ் கமிட்டி அங்கு விசால ஆந்திரத்துக்குக் கிளர்ச்சி செய்து வருவது பகிரங்க ரகசியம். அத்துடன் ஒப்பிடும்போது, சித்தூர் ஜில்லா தமிழ் மக்களின் கோரிக்கை மிகவும் சாதாரணமானது; முற்றிலும் நேர்மையானது. அதை நிறைவேற்றுவதில் அதிகத் தொல்லையோ, கஷ்டமோ ஏற்படுவதற் கில்லை.

சித்தூர் ஜில்லா தமிழ் மக்கள் தாங்கள் வசிக்கும் பிரதேசங்களை உடனடியாகத் தமிழ் நாட்டுடன் சேர்த்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டும் என்று சொல்லவில்லை. எல்லைக் கமிஷனை உடனடியாக நியமித்து, நேர்மையான விசாரணைகள் நடத்தி, இந்தப் பிரச்னையைப் பாரபட்சமின்றி முடிவு செய்ய வேண்டுமென்று தான் கூறுகிறார்கள். இந்த நியாயமான கோரிக்கையை இந்திய சர்க்கார் புறக்கணிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம். அந்தக் கோரிக்கை நிறைவேறுவதற்குச் சென்னை சர்க்கார் இயன்ற உதவி புரிவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

நமது இலங்கைக் கடிதம்

மகத்தான வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை மீ 3உ

இக் கடிதம் பிரசுரமாகும்பொழுது இலங்கைத் தோட்டங்களில் தலைமுறை தலைமுறையாக வேலை செய்து வரும் எட்டரை லட்சம் தொழிலாளர்கள் ஒரு பிரம்மாண்டமான வேலை நிறுத்தத்தை நடத்தி அரசாங்கத்தின் போக்குக்குத் தங்களுடைய அழுத்தமான கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டிருப்பார்கள். பதிவுப் பிரஜைகளுக்குத் தனித் தொகுதியை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் இயற்றும் சட்டத்தை ஆராய்வதற்காக இலங்கை ஐனநாயக காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அவசரக் கூட்ட மொன்று புதன்கிழமை இரவு நடைபெற்றது. இதற்காக ஜினிவாவுக்குப் போயிருந்த காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தொண்டைமான் எல்லா வேலைகளையும் ரத்து செய்து விட்டுப் புதன்கிழமை அதிகாலையில் கொழும்புக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

டில்லியில் இலங்கை இந்தியப் பிரதம மந்திரிகள் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்துக்குப் பின்னர் நிலைமை படிப்படியாக மோசமடைந்துள்ளதையும், இந்தியர்களை இலங்கையிலிருந்து ஒழித்துக் கட்ட மந்திரிசபை உப கமிட்டி தயாரித்துள்ள அறிக்கையையும் பதிவுப் பிரஜைகளுக்குத் தனித் தொகுதியை ஏற்படுத்த அரசாங்கம் மூன்றுவித மசோதாக்களைக் கொண்டு வந்திருப்பதையும், காரியக் கமிட்டி இரவு 11 மணியிலிருந்து விடியற்காலை 2 மணி வரை கவலையுடன் விவாதித்தது. முடிவில் தனித் தொகுதி ஏற்படுத்துவதைப் பலமாக ஆட்சேபிப்பதென்றும் தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவிக்கும் முகமாக ஜூலை 6-ந் தேதி இலங்கை முழுவதிலுமுள்ள எட்டரை லட்சம் தோட்டத் தொழிலாளர்களையும் ஒரு நாள் வேலை நிறுத்தம் அனுஷ்டிக்கச் சொல்லுவதென்றும் காரியக் கமிட்டி ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது.

சில சலுகைகளை அளித்து நல்லெண்ணமும் காட்டுவதாயிருந்தால் மட்டுமே தனித்தொகுதி முறையைத் தற்காலிகமாகப் பத்து வருட காலத்துக்கு ஏற்றுக் கொள்ளக் காங்கிரஸ் ஆரம்பத்தில் சம்மதித்தது. அந்தச் சலுகைகள் ஒன்றும் அளிக்காமலே பத்து வருட காலத்துக்குத் தனித் தொகுதியை ஏற்படுத்த டில்லி ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்தைப் புகுத்தினார்கள். அந்த ஒப்பந்தத்தின் இதர முக்கிய ஷரத்துக்களையெல்லாம் காற்றில் பறக்க விட்டு, மனிதாபிமானமற்ற முறையில் நாடற்றவர்களாக்கப் படுவோரை நடத்தத் திட்டமிட்டுக் கொண்டு, டில்லி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதாகச் சொல்லிய வண்ணம் தனித் தொகுதியை மட்டும் இந்தியர் மீது திணிப்பதைக் காங்கிரஸ் எவ்விதம் ஒப்புக் கொள்ள முடியும்! இது மட்டுமல்ல! டில்லி ஒப்பந்தப்படி 10 வருடங்களுக் கல்லாமல் 18 வருடங்களுக்குப் பதிவுப் பிரஜைகளை ஒதுக்கிவைக்கும் முறையில் மசோதா தயாரிக்கப் பட்டுள்ளபடியினால் அதை அழுத்தமாகக் கண்டிக்கும் முகமாக ஒரு நாள் வேலை நிறுத்தம் நடத்துவதென்று காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டியதாயிற்று.

ஆயினும் அரசாங்கக் கட்சிக்குப் பார்லிமெண்டில் மெஜாரிட்டி பலமிருப்பதினால் தனித் தொகுதி மசோதா நிறைவேறி விடுவது நிச்சயம். இதைக் காங்கிரஸ் ஆட்சேபித்துள்ள பொழுதிலும் தேர்தலைப் பகிஷ்கரிக்க மாட்டாதென்று நம்பிக்கையாக அறியப்படுகிறது.

டில்லி ஒப்பந்தத்தை இலங்கை மீறுவதாகப் பலமாகக் குற்றஞ் சாட்டி ஹை கமிஷனர் ஸ்ரீ தேசாய் இவ்வாரம் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு கடுமையான கடிதத்தில், இரண்டு வருடங்களுக்குள் எல்லாப் பிரஜாவுரிமை மனுக்களையும் பட்டுவாடாச் செய்து விடுவதாக இலங்கை அரசாங்கம் ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டிருந்தும் அதன்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் காணுமென்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். இப்பொழுது போகும் போக்கில் காரியங்கள் நடந்தால் எல்லாப் பிரஜாவுரிமை மனுக்களையும் பட்டுவாடாச் செய்து முடிக்க 15 ஆண்டுகளுக்கு மேல் பிடிக்குமென்பதையும் தெரிவித்திருக்கிறார். இதோடு பிரஜாவுரிமை மனு நிராகரிக்கப்பட்டவர்களின் நிலைமையைப் பத்து வருடங்களுக்குப் பிறகு புனராலோசனை செய்ய வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்க, நாடற்றவர்களாக்கப் பட்டவர்களை நாட்டை விட்டே விரட்ட அரசாங்கம் திட்டமிட்டிருப்பது டில்லி ஒப்பந்தத்தைப் புறக்கணிப்பதாகுமென்று ஸ்ரீ தேசாய் சுட்டிக் காட்டியிருக்கிறார். இதற்குப் பிரதமர் ஸர்ஜான் கொடுத்திருக்கும் பதில் இலங்கை இந்தியர்களைத் திடுக்கிடச் செய்வதாகவுள்ளது. எல்லாப் பிரஜாவுரிமை மனுக்களையும் இரண்டு வருடங்களுக்குள் பைசல் செய்து முடிக்க முயற்சிப்பதாகவே தாங்கள் ஒப்புக் கொண்டதாயும் இது உத்திரவாதமல்ல வென்றும் அவர் கூறுகிறார். பிரஜாவுரிமை மறுக்கப் பட்டவர்கள் இந்தியப் பிரஜைகளாகியே தீர வேண்டுமென்றும் நாடற்றவர்களென்று ஒரு கோஷ்டி இருக்க முடியுமென்பதை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கத் தயாரில்லை யென்றும் சொல்லியிருக்கிறார். அதோடு நாடற்றவர்களை

இந்தியாவுக்கு விரட்ட எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும் வேலை மறுப்பு, பிரஜை மறுப்பு முதலான புதிதாக எடுக்க விருக்கும் நடவடிக்கைகளுக்கும் ஸர் ஜான் நியாயம் கற்பித்திருக்கிறார்.

நாடு கடத்தல் நாடகம்

கோமதி என்ற ஒரு பெண்ணை இலங்கை அரசாங்கம் இவ்வாரம் நாடு கடத்த முயற்சித்தது ஒரு பெரிய அரசியல் கொந்தளிப்பை உண்டு பண்ணி யிருக்கிறது. இந்தப் பெண் 1946-ம் ஆண்டில் சட்டப்படி இலங்கைக்கு வந்ததாயும், பல இடங்களில் வேலை செய்து கொண்டிருந்து விட்டுச் சென்ற வருடம் முத்துவைரவன் என்ற இந்தியரை மணந்து கொண்டதாயும் கூறப்படுகிறது. இந்தியாவுக்குப் போய் வருவதற்காகக் கோமதி இந்தியா பாஸ்போர்ட் எடுத்திருந்தாள். ஆனால் இந்தியாவுக்குப் போய் வரவில்லை. போலீசார் ஒரு நாள் மாலை திடீரென்று இப் பெண்ணின் வீட்டில் நுழைந்து அவளையும் அவளுடைய கணவரையும் அடித்துத் தாக்கியதாயும் கோமதியை நாடு கடத்தக் கைது செய்து கொண்டு போய் இந்தியா ரயிலில் ஏற்றிவிட்டதாயும் புகார் செய்யப்பட்டது. கோமதியின் மீது சட்ட விரோதமாக இலங்கையில் குடியேறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு அவளை நாடுகடத்த வெளிநாட்டிலாகா மந்திரி உத்தரவு பிறப்பித்திருந்தார். தக்க சமயத்தில் கணவர் நடவடிக்கை யெடுத்து இந்திய ஹை கமிஷனரிடம் முறையிட்டுக் கொண்டார். அதன் பயனாக நாடு கடத்துவதற்காகத் தலைமன்னாருக்குக் கொண்டு போகப் பட்ட கோமதியை இந்தியாவுக்குச் சொந்தமான கப்பலில் ஏற்றுக் கொள்ளாமலிருக்கும்படி ஹை கமிஷனர் தடை செய்து விட்டார்.

கோமதி என்ற பெண் சட்டவிரோதமாக இலங்கையில் குடியேறியவளா அல்லது சட்டப்படி இங்கு வசித்து வருபவளா என்பது வேறு விஷயம். ஆனால் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு யாரை நாடு கடத்துவதா யிருந்தாலும், நாடு கடத்தப்படுவோர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இந்தியப் பிரஜைதானா என்பது ஹை கமிஷனருக்குச் சந்தேகமின்றித் தெரிய வேண்டும். இந்தியப் பிரஜைகளல்லாத மற்றவர்களை இந்தியாவில் கொண்டு போய் இறக்குவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு உரிமையில்லை. ஆகையால் இலங்கை சர்க்கார் இங்கிருந்து யாரையும் இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கு முன்னால் இந்திய ஹை கமிஷனை கலந்து கொள்ள வேண்டுமா வேண்டாமா ! என்ற அதி முக்கியமான பிரச்னை கோமதி விவகாரத்தில் அடங்கி யிருக்கிறது. கோமதி இப்பொழுது கொழும்புவுக்குத் திருப்பி அழைத்து வரப்பட்டுத் தனது கணவருடன் தங்கி இருக்கிறாள். அவள் தாக்கப்பட்டதாயும் நியாயமின்றி நாடு கடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாயும் தாக்கல் செய்துள்ள புகாரைப் பற்றி விசாரணை நடந்து வருகிறது. —ரஜனி

அட்டைப் பட விளக்கம்

பாதச் சிலம்பொலி

தமிழகத்தின் பழம் பெரும் சரித்திரத்தைப் பார்த்தால் எத்தனை எத்தனை பேரரசர்கள் தமிழகத்தை ஆண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். அவர்கள் புகழ் கடல் கடந்து புட்பகம், சாவகம், கடாரம், சீனம், யவனம் முதலிய நாடுகளில் எல்லாம் பரவி யிருந்தது என்பதும் தெரிய வரும். தமிழ் நாட்டுக் கோவில்களையும், சிலா சாஸனங்களையும், செப்பேடுகளையும் ஆராய்ந்தால் தமிழகத்தை எவ்வளவு திறம்பட, மக்கள் மகிழ்ச்சியுடன் வாழும் வகையில் ஆண்டிருக்கிறார்கள் என்பதும் புலப்படும்.

இப்படிப் பெரும் புகழுடன் தமிழகத்தையாண்ட அரசர்களில் முதற் குலோத்துங்கன் பெயரைக் குறிப்பிட வேண்டும். பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி. பி. 1078–1118) சோழ நாட்டைச் சீரும் சிறப்புடனும் ஆண்டு வந்தான். வீரர்களுள் வீரனாய், நீதி தவறா அரசர்களுள் சிறந்த நீதிமானாய், சங்கீதம் முதலிய இன்கலைகளில் மிகுந்த பற்றுடையவனாய்த் திகழ்ந்தான்.

இவனுக்குக் கப்பங் கட்டத் தவறிய கலிங்க நாட்டு மன்னன் மீது சேனாபதி கருணாகரன் படையெடுத்துச் சென்று வெற்றி வாகையுடன் திரும்பினான். இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஜெயங்கொண்டார் என்ற தமிழ்க்கவிஞர் கலிங்கத்துப் பரணி என்னும் அற்புதமான நூல் இயற்றியிருக்கிறார். அதில் முதல் குலோத்துங்கனைப் பற்றிப் பல அரிய விஷயங்களைக் கவிஞர் சுவைபடக் கூறி யிருக்கிறார்.

குலோத்துங்கனது ஆட்சியில் வாழ்ந்த மக்கள் மிகவும் அமைதியுடனும் சந்தோஷமாகவும் வாழ்ந்தார்கள். சண்டை, சச்சரவு, பூசல் ஒன்றும் மாதிரிக்குக் கூட இருந்ததில்லை. இதைக் கவிஞர் ஜெயங் கொண்டார் பின் வருமாறு கூறுகிறார்:

தோகை மயிலின் சாயலைப் பெற்ற பெண்கள் நடப்பதனால் பாதச் சிலம்புகள் கலீர் கலீர் என்று ஒலிக்கும். அந்த ஒலிதான் காதுகளுக்கும் மனத்துக்கும் எவ்வளவு மகிழ்ச்சி யூட்டும்!

மென்க லாபமட வார்கள் சீறடி
மிசைச்சி லம்பொலிவி ளைப்பதோர்
இன்க லாம்விளைவ தன்றி யெங்குமோர்
இகல்க லாம்விளைவ தில்லையே!


[கலாபம்: மயில்; இன்கலாம்: இனிய ஓசை; இகல் கலாம்: பூசல்.]

சோழ நாட்டுப் பெண்கள் சந்தனம், பன்னீர் வைத்த தட்டுக்களை ஏந்தி நடக்கும்போது ஏற்படும் பாதச் சிலம்பின் சத்தமும், தங்களை அலங்கரித்துக் கொள்ளும் போது ஏற்படும் வளைகளின் சத்தமும் தவிர வேறு எவ்வித சத்தமும் பூசலும் அந் நாட்டில் இல்லையாம்!

இப்படிப் புகழுடன் ஆண்ட குலோத்துங்கனையும், அவன் நாட்டில் குதூகலமாக வாழ்ந்த இரு பெண்களையும் நமது சித்திரக்காரர் 'சந்திரா' இவ்வாறு அட்டைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்.

பெண்ணின் சில தோற்றங்கள்!




மாலையில் ஏற்படும்
களைப்பை
தவிர்க்கவும்!
சீக்கிரமே அதிகப்படியான சக்தியை
ஒரு தேக்கரண்டி க்ளூகோவிடா தருகிறது
Glucovita
GLUCOSE-D
தினசரி வேலை செய்யும் பொழுது உங்களுடைய பிரியமான பானத்தை வலிமை தரும் க்ளூகோவிடாவுடன் கலந்து அருந்துங்கள். ஏனெனில் டெக்ஸ்ட்ரோஸ், கால்ஷியம், பாஸ்பரஸ், விடமின் டி முதலிய சத்துக்கள் அடங்கியுள்ளதும், உடலுக்குகந்ததுமான க்ளூகோவிடா நீங்கள் இழந்த சக்தியை உடனே ஈடு செய்கிறது.
க்ளூகோவிடா
உடலுக்குகந்த உணவு
கார்ன் ப்ராடக்டஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 994, பம்பாய் 1   தபால் பெட்டி நெ. 982, கல்கத்தா 1

வரியால் வாடும் மக்கள்

போத்தனூரில் புதிய பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணோம். பழைய குப்பை மேடு பழைய இடத்திலேயே இருக்கிறது. வீண் தொந்தரவுகள் தான் அதிகரித்துள்ளன. மக்களின் வரிப் பணத்தில் ரூபாய் மூவாயிரமோ, நாலாயிரமோ செலவு செய்து பழைய பஞ்சாயத்து ஒரு குழாய்க் கிணறு தோண்டி, குழாய்களையும் பொருத்தியுள்ளனர். தற்போது இவ்வூரில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாயுள்ளது. ஆனால் குழாய்களைத் திறந்து தண்ணீர் விடாமல், அதைத் தோண்டிய கண்டிராக்டர் காரில் எங்கள் தலைவரும் கண்டிராக்டரும் அடிக்கடி வந்து அழகு பார்த்துக் கொண்டு போகிறார்கள். அங்கே போய் என்ன பார்ப்பார்களோ யாருக்குத் தெரியும்! தற்போது அதில் தண்ணீர் இருக்கிறதோ அல்லது தண்ணீர் எடுக்காததால் வற்றி விட்டதோ, யார் அறிவர்!

எங்களூரில் பஞ்சாயத்து நியாயசபை கூடுவதில்லை. தலைவர் மக்கள் பிரதிநிதிகளைப் பகைத்துக்கொண்டு நிர்வாக அதிகாரியுடன் ஒன்று சேர்ந்து நிர்வாகம் நடத்தி வருகிறார். "ஏன் நியாய சபைக்கூட்டம் நடைபெறுவதில்லை" என்று தலைவரைக் கேட்டால் "நான் என்ன செய்யட்டும்! உறுப்பினர்கள்தான் வருவதில்லையே" என்கிறார். "வேண்டுமானால் உங்கள் வழக்கைத் திருப்பி எடுத்துக்கொண்டு போங்கள்" என்கிறார். பதினாறு பேர் கொண்ட பஞ்சாயத்து சபையில், நியாய சபைக் கூட்டம் நடக்க (விசாரணை செய்ய) மூவர் வருவதில்லை என்றால் (அதுவும் தலைவரும் சேர்ந்து மூவர்) வியப்பாக இல்லையா!

சபை அங்கத்தினர்கள்தான் எல்லோரும் ஒன்றாகச் சபைக் கட்டிடத்துக்குப் போவதே இல்லை. பிறகு எங்கே அவர்களின் கடமை! சேவை!! புது பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு நன்மை என்று ஒன்றும் செய்யா விட்டாலும் கூட, புதுப் புது வரிகள், உத்தரவுகள் போட்டிருக்கிறார்கள். சிறு சுவர் வைக்கவும், மழையின் காரணத்தினால் ஒழுகினால் ஓடு பிரித்து மேயவும் அதற்கு உரிய தொகையைக் கட்டி அனுமதி வாங்க வேண்டுமாம். வீட்டுக்குரியவர்கள் இரண்டு மாத வாடகையை வரியாகக் கட்ட வேண்டுமாம். புதிதாக வீடு கட்ட வேண்டுமானால் அரசாங்க அனுமதி பெற்ற கட்டிட அளவு வரை நிபுணரின் வரை படத்துடன் பணம் செலுத்த வேண்டுமாம். எங்களூரில் இம்மாதிரி படம் வரைய அனுமதி பெற்றவர்களையோ அல்லது வரைந்து கொடுத்தவர்களையோ ஒருவரையும் காணோம். அப்படிச் செய்தாலும் அனுமதி பெற ஆறு மாதங்களோ ஒரு வருடமோ ஆகும். கட்டிட பிளான் என்றால் என்ன என்றே அநேகருக்கு விளங்காத நிலையில் உள்ள பல சிற்றூர்களைக் கொண்ட எங்களூர்ப் பஞ்சாயத்தில், இம்மாதிரியான அநியாய வரிகளையும், நகரங்களில் உத்தரவிட்டு நடப்பதைப் பார்த்து இங்கேயும் அந்தமாதிரியான உத்தரவுகளைப் போட்டு மக்களைச் சர்க்காருக்கு விரோதமான எண்ணம் கொள்ளுமாறு செய்கிறார்கள். வரி வசூலித்த பணத்தை என்ன செய்கிறார்கள் என்று மக்களுக்குத் தெரியவே தெரியாது.

மாச்சம்பாளையம் என்ற சிறு ஊரும் போத்தனூர் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. இவ்வூருக்குப் போகும் பாதையில் துவிச் சக்கர வண்டியோ, மாட்டு வண்டியோ போகமுடியாது. நடந்துதான் போக வேண்டும். இக்கட்டுரை படிக்கும் ஒரு வாசகர் அப்பாதையை மட்டும் ஒரு முறை கண்டால் எங்களூர்ப் பஞ்சாயத்து எவ்வளவு திறமையாக நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்வார்! எங்களூர்ப் பஞ்சாயத்தாரிடம் எந்த விதமான திட்டமும் மக்களின் நன்மைக்காகக் கிடையாது!! அதனால் மேல் அதிகாரிகளின் தாமதமும் கிடையாது!

தலைவர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் உறுப்பினர்கள் கொண்டு வரவும் அது நிறைவேறினால், அவரை நீக்கி, மக்கள் மறுபடியும் இரகசியத் தேர்வு முறையின் மூலம் வேறு தலைவரைத் தேர்ந்தெடுக்கவும் வழி வகைகள் செய்யப்படவேண்டும். அப்போதுதான் தலைவர்களுக்கு மக்களிடம் சற்று அச்சம் இருக்கும். தற்போது குறிப்பிட்ட காலத்துக்கு அவரை யாராலும் அசைக்க முடியாது. அதனால் அக்கால அளவில் அவர் எதையும் செய்ய முடிகிறது. சிறு பண சம்பந்தமான தகராறுகளைத் தீர்க்கவே எங்க



ளூர்ப் பஞ்சாயத்து நியாய சபை கூடுவதில்லை' நிலைமை இவ்வாறு இருக்கக் குற்ற விசாரணை அதிகாரமும் கொடுக்கப்படுமானால் எங்களூர்த் தலைவர், பஞ்சாயத்து சபையின் அங்கத்தினர்களுக்குத் தான் முதலில் தண்டனை வழங்குவார்! ஆகவே அப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தைக் கொடுப்பது ஆபத்தானது. நிர்வாக அதிகாரிகளை இன்னமும் நாம், பஞ்சாயத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்கு மேற் பதவியில் வைத்திருப்பது நமது அறியாமையைத் தான் குறிக்கிறது.

இந்த ஓராண்டில் எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து ஆட்சியின் பலன்களையும் கூறி விடுகிறேன்.

எங்களூர் வரிப் பணம் வசூல் செய்யும் அதிகாரிகள் சில முறை, மக்களிடம் வரி வசூல் செய்து விட்டுச் சபை அலுவலகத்தில் கணக்குக் காட்டாது மறைந்து போயிருக்கின்றனர். புதிதாக வருபவர் வந்து பணம் கேட்டால் மக்கள் பணம் முன்பே கொடுத்தாயிற்று எனக் கூறுவர்.

ரசீதைப் போக்கடிக்காமல் வைத்திருப்பவர் அதைப் புதியவரிடம் காண்பித்துப் பிறகு பல முறை சபை அலுவலகம் சென்று அதை நிரூபித்த பிறகு தான் தப்ப முடியும். ரசீதைப் போக்கடித்தவர்கள் கதி! மறுபடியும் பணம் கட்டத்தான் வேண்டும். கண்டவர்களை நினைத்த போது வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதனால்தான் இது கடை முறையில் மக்களுக்குத் துன்பத்தைத் தருகிறது. கக்கூஸ் வரி கறாராக வாங்கப்படுகிறது. ஆனால் அதைச் சரியாகச் சுத்தம் செய்யாததால் நாற்றமடித்துக் கொண்டிருக்கிறது. குப்பை மேடுகள் கண்ட இடங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. ஒரு வீட்டை மற்றொருவர் விலைக்கு வாங்கி மூன்று வருடமானாலும் பழைய ஆள் பெயரிலேயேதான் வரிவசூல் செய்கிறார்கள். சாக்கடை நாற்றமடித்துக் கொண்டு கிடக்கும். சில வேளைகளில் குப்பைகளைக்கூட வீட்டுக்குப் பின்னால் சில நகரசுத்தி தொழிலாளர்கள் கொட்டி விடுவர். கேட்பவரோ, கவனிப்பாரோ கிடையாது.

வசூலித்த பணத்தையே மக்கள் நன்மைக்குச் செலவு செய்ய முடியாத இவர்கள் எதற்காக மறுபடியும் இரு மாத வாடகையை வீட்டு வரியாகக் கேட்டு வறுமையில் வாடும் மக்களைத் துன்பப்படுத்துகிறார்கள் என்பது விளங்கவில்லை.

போத்தனூர்
25—6—54

எஸ். பி. முருகையன்

பஞ்சாயத்தும் அதிகாரிகளும்

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையில் நடந்து வருகிறது. கிராம வாழ்க்கையில் பல முன்னேற்றங்களும் காணப்படுகின்றன. தெருக்கள் முதலிய பொது இடங்களெல்லாம் தற்போது மிகவும் சுத்தமாக இருக்கின்றன. பொதுச் சிப்பந்திகள் ஒழுங்காகத் தங்கள் கடமைகளைச் செய்து வருகிறார்கள். ஊரில் எல்லா இடங்களிலும், வாராங் கால்கள் கல்லாலும், செங்கலாலும் கட்டிவிடப் பட்டிருக்கின்றன. புது மாதிரி கக்கூசு கட்டியுள்ளது. எல்லாவற்றிலும் முக்கியமானதும், ஊருக்கே லக்ஷ்மி கடாட்சம் வந்தது போல, தலைவர் அவர்கள் அடிக்கடி மேல் அதிகாரிகளைப் பேட்டி கண்டு கேட்டுக் கொண்டதின் பலனாக, மின்சார விளக்குகள் போட ஏற்பாடாகி யுள்ளது. மேலும் ஊருக்குள் வரும் ரோடும் தார் ரோடாகவும் மாற்றப்பட்டுள்ளது.

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தின் தலைவர் கல்லூரிப் பட்டம் பெற்றவர். அவர் தலைவர் ஆகுமுன் ஊரில், பல நடுத்தர விவசாய குடும்பங்களில் அவரும் ஒருவர் என்ற அளவிலும், நல்ல உபகாரி என்றும் ஜனங்கள் மதித்து வந்தார்கள். அநேகர், அன்னாருக்கு நிர்வாகத்தில் அவ்வளவு பழக்கம் இருக்காதே என்றே கருதினார்கள். ஆனால் அவர் பஞ்சாயத்துத் தலைவர் ஆகி, அதில் பணியாற்ற ஆரம்பித்த ஆறு மாதங்களில், ஊர் ஜனங்களே திகைத்து விட்டார்கள். ''நம் தலைவர், பார்த்தால் பூனை போல் இருந்தாலும், பாய்ந்தால் புலிபோல் அல்லவா நிர்வாகம் செய்கிறார்'' என்று ஆனந்தமடைகிறார்கள்.

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து அங்கத்தினர்களும் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறுவதில்லை. மாதந்தோறும் கூடும் பஞ்சாயத்துக் கூட்டத்துக்குக் குறித்த நேரத்துக்குத் தாங்களே வந்துவிடுகிறார்கள். தலைவர் அவர்களும் முன் கூட்டியே ஆபீசுக்கு வந்து விடுவார். ஆபீசர், தலைவர், அங்கத்தினர்கள், எல்லாம் கூட்டம் கூடும் அறையில் நீதி மன்றத்தில் விசாரணை நடப்பதுபோல, அவரவர்கள் ஆசனத்தில் அமர்ந்து, ஜனங்கள் குறைகளைக் கேட்டு, அவரவர்கள் அபிப்பிராயங்களை ஒவ்வொருவராகச் சொல்லுவார்கள். இறுதியில் தலைவர் அவர்கள் சொல்லை ஒரு தகப்பனார் சொல்லைப் பிள்ளைகள் கேட்பது போல் கேட்டு எல்லோரும் அமைதியாகக் கலந்து ஆலோசித்து முடிவு கட்டி ஜனங்களுக்குத் திருப்திகரமாகக் குறைகளைப் போக்கி வருகிறார்கள்.

தற்போது எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து, ஓர் குடும்பம் போல் அன்பும், கடமை உணர்ச்சியும் நிறைந்து மாறாத ஒற்றுமையுடன் காட்சி அளிக்கிறது. சிப்பந்திகளும், மிகவும் குதூகலமாக மாதம் பிறந்த முதல் வாரத்திலே சம்பளம் பெற்று ஒழுங்காக வேலைகள் செய்து வருகிறார்கள். சிப்பந்திகளுக்கு ஆடைகளும் இனாமாகப் பஞ்சாயத்திலிருந்து கொடுக்கிறார்கள். ஊர் ஜனங்களும் தவறாது கேட்டவுடன் வரிகளைக் கொடுத்து விடுகிறார்கள். இது நாள்வரை புது வரிகள் ஒன்றும் எங்கள் ஊரில் விதிக்கவில்லை.

ஜனங்களுக்கு மிகவும் அத்தியாவசியமான பொது அறிவு பெருகும் பொருட்டு, எங்கள் ஊர்ப் பஞ்சாயத்து வாசகசாலையையும் நூல் நிலையத்தையும் மிகவும் சீர்திருத்தி யுள்ளார்கள். பல புதுப் புத்தகங்களும் அதிகமான வாரப் பத்திரிகைகளும் வாங்கி இருக்கிறார்கள். மேலும் அந்த இடத்தை ஒரு சிறு பூங்காவனம்போல், பார்ப்பதற்கு மிகவும் அழகாக அமைத்துள்ளார்கள். உல்லாசமாக உட்கார்ந்திருக்க சிமெண்டால் மேடையும், மேசை நாற்காலிகளும் புதிதாகப் போட்டுள்ளார்கள். அங்கு ரேடியோ நிலையம் ஒன்றும் இருக்கிறது. அங்குள்ள கட்டிடங்களையெல்லாம் புதுப்பித்திருக்கிறார்கள். இது தவிர கிணறுகள் எல்லாவற்றையும் நன்றாகத் தூர் வாரி, ஆழப்படுத்தி, ஜனங்களுக்குச் சுத்தமான தண்ணீர் கிடைக்கிறது. சுகாதார வசதிகள் நன்றாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

எங்கள் ஊர் சிறு ஊராக இருந்தபோதிலும், பல இடங்களிலிருந்து அரை மணிக்கொரு தரம் பெரிய மோட்டார் வண்டிகள் வந்து போய்க்கொண்டே யிருப்பதால் ஊர்க் கடைசியில் பெரிய கார் நிலையம் ஒன்று இருக்கிறது. முன்பு அந்த இடம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. தற்போது அங்கு பல சீர்திருத்தங்கள் செய்து சௌகரியப்படுத்தி யிருக்கிறார்கள். கார் நிலையத்தின் பக்கத்தில் ஒரு வாரச் சந்தையும் நடைபெறுகிறது. முக்கியமாகப் புதுப் பஞ்சாயத்து இருட்டுக் காலங்களில், கியாஸ் விளக்கை விடி விளக்காகப் போட்டுள்ளது. தெருக்கள் எப்போதும் நல்லபடி, சுத்தமாக இருக்கின்றன. பஞ்சாயத்து ஆபீசுக்கு வேண்டிய பல உபயோகமான சாமான்கள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் ஊர்ப் பஞ்சாயத்துக்கு, அதிக வருமானம் வந்தால், இதுபோன்ற பல நன்மைகள் செய்வதற்கு எங்கள் பஞ்சாயத்து தவறாது. புதுத் தலைவர் அவர்கள் முயற்சியால் சுமார் ரூ. 6000 வருஷ வருமானம் அதிகம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது கிடைத்தும் விடும். இதனால் பஞ்சாயத்துக்கு

வருமானம் பெருகும். அரசாங்கமும், ரெவினியூ அதிகாரிகளும் இவைகளை எல்லாம் கவனித்துச் சீக்கிரம் உதவி செய்தால், மேலும் எங்கள் ஊரில் தினசரி சந்தை, பஞ்சாயத்து ஆபீசுக்குச் சொந்தக் கட்டிடமும் கட்டிப் பொது ஜனங்களுக்குப் பல மாறாத நன்மைகளும் செய்வதற்குத் தவற மாட்டார்கள்.

பஞ்சாயத்து வேலை செய்வதற்கு அனுமதி உடனுக்குடன் கிடைப்பதில்லை. வீண் காலதாமதம் தான் செய்து நாட்கள் கடந்து போகின்றன. உதாரணமாக வார்கால்கள் கட்டக் கூடாது என்று சட்டமிருக்கிறது. ஆனால் வார்கால் இல்லையென்றால் கிராமங்களில் அசுத்தம் அதிகமாகும். ஆனால் வைடமுறையில் தமிழ் நாட்டில் எல்லாப் பஞ்சாயத்துக் கிராமங்களிலும் மூட்டுச் சுவர் என்று போட்டுக் கொண்டு வார்கால் கட்டுகிறார்கள். இப்படிப்பட்ட நிர்வாக இடைஞ்சல்களை மாற்றியும், சட்டங்களைத் திருத்தியும் ஆர்வமுள்ள தலைவர்கள் வேலை செய்ய அனுகூலமாக, அனுமதிகளை உடனுக்குடன் அதிகாரிகள் கொடுக்கச் சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்.

பஞ்சாயத்துத் தலைவர்கள், அல்லது அதிகாரம் பெற்றவர்கள், கஜானாவில் பணம் செலுத்தும் போதும் வாங்கும் போதும் வீண் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். இதைச் சர்க்கார் நிவர்த்தி செய்ய வேண்டும். பஞ்சாயத்துச் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரங்களும் இன்னும் லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டர் அவர்களிடமே குவிந்து இருப்பதைச் சம்பந்தப்பட்ட பிராந்திய லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டருக்கும், ஜில்லா பஞ்சாயத்து அதிகாரிகளுக்கும் பகிர்ந்து கொடுத்தால், பஞ்சாயத்து வேலைகள் துரிதமாக நடக்க ஏதுவாகும். பஞ்சாயத்துக்கு வருமானம் பெருகவும், பொது ஜனங்களுக்குப் பல நன்மைகள் செய்யவும், புறம்போக்கு இடங்களை ரெவினியூ அதிகாரிகளிடம் கேட்டால் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அல்லது நிலத்தின் மதிப்புக்குரிய பணம் சர்க்காருக்குக் கொடுத்து, பஞ்சாயத்து வாங்க வேண்டுமென்று ரெவினியூ அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் பஞ்சாயத்துக்கு இடைஞ்சல் இருந்தால் பொது ஜனங்களுக்கு நன்மை செய்ய முடியாது.

சட்டசபைத் தேர்தல்களில் நடப்பது போல், இரகசியமாக வோட்டுப் பெட்டியில் வோட்டுப் போடும் முறையைப் பஞ்சாயத்துத் தேர்தலுக்கும் உபயோகிப்பதே மேலாகும். கிராம ஜனங்களை ஒன்று கூட்டிக் கையைத் தூக்கச் செய்து பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை அடக்கு முறையாகும். தலைவர் அவர்கள் கிராமத்தில் பணக்காரராகவோ அல்லது நல்ல செல்வாக்குள்ளவராகவோ இருந்து விட்டால் ஜனங்கள் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிடும். ஜனங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் அவருக்குப் பயந்து கொண்டு அவர் முகம் கண்டு கை தூக்க நேரிடும்.

பஞ்சாயத்துகளுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் இப்போது அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் விட இன்னும் சில அதிகாரங்கள் கொடுப்பது நலமே. மேல் அனுமதியின்றி, ரூ 250-க்கு உள்ள வேலை செய்யும் அதிகாரங்களைப் பஞ்சாயத்துக்கே கொடுத்து விடலாம். அப்பொழுதுதான் கிராமங்களில் ஜனங்களுக்குப் பல நன்மைகளைத் துரிதமாகச் செய்ய ஏதுவாக இருக்கும். இது சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகள் 'சரியாகப் பணம் செலவு

செய்யப் பட்டுள்ளதா!' என்று பரிசோதனை செய்யும் அதிகாரத்தை வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளலாம்.

'பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் குற்ற விசாரணை செய்து நியாயத் தீர்ப்புச் சொல்லும் உரிமை அளிப்பது நல்லதல்ல. பஞ்சாயத்தாரிடம் நீதி மன்றத்தின் பொறுப்பையும் அளித்தால், பட்ச பாதமான தீர்ப்புக்கள் ஏற்பட ஏதுவாகும். இந்தப் பொறுப்புகள் போக, மற்ற எத்தனையோ உபயோகமான பொறுப்புக்களை அவர்களுக்குக் கொடுத்துக் கிராமங்களுக்கு நன்மை பயக்கலாம். அரசாங்கம் பஞ்சாயத்தார் செய்யும் வேலைகளுக்கு உதவித் தொகை கொடுத்து உதவ வேண்டும். தற்போது ஐந்து வருஷத் திட்டத்தின் கீழ், சர்க்காரால் கொடுக்கப்படும் உதவித் தொகைகள் பூராவும் கிராமங்களுக்கே கொடுக்கப்படவேண்டும். ஆனால் சர்க்காரின் ஐந்து வருஷ உதவித் தொகைகள் தற்போது நகர சபைக்குத்தான் அதிகமாகக் கிடைக்கின்றன. காரணம் சர்க்கார் பாதித் தொகை கொடுக்கும் போது, மீதம் பாதித் தொகை போட்டு வேலை செய்ய, நகர சபைகளுக்குப் பண வசதி இருக்கிறது. இதனால் சர்க்காரால் கொடுக்கப்படும் ஐந்தாண்டுத் திட்ட உதவித் தொகை எல்லாம் நகரங்களுக்கே பலன் கொடுக்கும். ஆகவே இதற்குச் சர்க்கார் பாதித் தொகை வாங்காமலேயே, கிராமப் பஞ்சாயத்துக்களுக்குப் பண உதவி செய்து, கிராம ஜனங்கள் நன்மை அடைவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யச் சட்டங்களை மாற்ற வேண்டும்.

பஞ்சாயத்துக் காரியாலயத்தில் இரகசியப் பெட்டி ஒன்று வைத்து, அதில் ஜனங்களின் அபிப்பிராயங்களையும் குறைகளையும் துண்டுக் காகிதங்களில் எழுதி, அப் பெட்டியில் போட ஏற்பாடு செய்ய வேண்டும். பின் தினமும் இரவில் அதிகாரிகள், அத் துண்டுக் காகிதங்களை எடுத்து விஷயங்களைப் படித்தால் ஜனங்களின் நோக்கங்கள் அவர்களுக்கு நன்கு புலனாகும்.

வத்திராயிருப்பு
2—7—54

கே. சரஸ்வதி

நீதி நிர்வாகப் பிரிவினை வேண்டும்

எங்கள் ஊரில் ஏற்பட்டுள்ள பஞ்சாயத்தார் நிர்வாகம் நடத்தி வருவது சரியில்லை. பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கும், தலைவருக்கும் ஒற்றுமை குறைவாய் இருந்து வருகிறது. பொது ஜனங்கள் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு மனுச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

புதிய முறையில் பஞ்சாயத்து ஏற்பட்ட பிறகு கிராம வாழ்க்கையில் முன்னேற்றம் உண்மையான முறையில் ஒன்றும் காணப்படவில்லை. ரஸ்தா பராமரிப்பு, ஊர்ச் சுகாதாரம் முதலியவை குறைந்து வருகின்றன.

பஞ்சாயத்தின் அங்கத்தினர்கள் தங்கள் கடமைகளைச் செய்து வருவதாகத் தெரியவில்லை. அவர்களுக்கிடையே அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. சில விஷயங்களில் தலைவர் அங்கத்தினர்களை மீறியும் நடப்பதாகத் தெரிகிறது.

புதுச் சட்டப்படி வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வீட்டு வரிகள் முதலியன நியாயமானவைதான். ஆனால் வரி வசூல் செய்ய ஒரு குமாஸ்தா அவசியமென்று நியமித்திருப்பதால், இந்த வரி வசூல் பணம் குமாஸ்தா சம்பளத்துக்குத் தான் சரியாகலாம். வசூலிக்கும் வரிப் பணத்திலிருந்து பொதுஜன நன்மைக்கு உகந்த காரியங்களுக்குச் செலவு செய்ய இயலாது.

இப்பொழுது நடப்பதை விட நல்ல முறையில் தீவிரமாகக் கிராம நலத்துக்கு உகந்த காரியங்களைச் செய்ய முடியும். அப்படிச் செய்ய, பஞ்சாயத்து அங்கத்தினர்களும் தலைவரும், கட்சி அடிப்படையில் இல்லாமல் கிராம முன்னேற்றத்துக்கு உகந்ததைச் செய்ய நினைக்க வேண்டும்.

சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் கிராம ஜனங்களை ஒன்றுகூட்டி, கையைத் தூக்கச்செய்து பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை, மோசமான முறை.

சட்டசபைத் தேர்தல்களில் நடப்பது போல, வோட்டுப் பெட்டியில் வோட்டுப் போடுவது நல்ல முறை. இதில் ஆண், பெண்கள் எல்லோரும் வோட்டுப் போடச் சௌகரியமுண்டு. ஜனங்கள் ஒன்று கூடிக் கையைத் தூக்குவதில், தலைவராய் நிற்பவர்களுக்குப் பயந்து கை தூக்குகிறவர்களும் இருக்கிறார்கள். பெட்டியில் ரகசியமாக வோட்டுப் போடச் செய்வது மிகவும் நல்லது.

கிராமப் பஞ்சாயத்தாரிடம் நீதி மன்றத்தின் பொறுப்பை அளித்தால், இப்போது கிராமங்களில் உள்ள சூழ்நிலையில், பட்சபாத மில்லாத தீர்ப்புக்கள் ஏற்படா. கிராம வாசிகளுக்கு நீதி கிடைப்பது அதிகச் சிரமமாய் இருக்கும்.

இந்த ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுத்த ஒன்றரை வருடத்தில், பஞ்சாயத்து போர்டு புஸ்தகசாலைக்குச் சர்க்கார் உதவி, வருடம் ரூபாய் நாற்பது வீதம் 1952 - 53, 1953-54 வருடங்களுக்கு உதவி உத்தரவு போட்டிருந்தும் காலா காலத்தில் நடவடிக்கை எடுத்து, புஸ்தகங்கள் வாங்காமலும் சர்க்கார் உதவித் தொகையைப் பெறாமலும் விட்டு விட்டார்கள். நூல் நிலையம் அபிவிருத்தி குறைந்து வருகிறது.

புஸ்தகங்களை ஒரு வெளிச்ச மில்லாத வீட்டில் வைத்துப் பொது ஜனங்கள் வாசிக்கச் சௌகரியமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

ரஸ்தா, நடைபாதை, குளங்கள் பராமரிப்பு வேலைகள் சரியாய்க் கவனிக்கப் படவில்லை.

பஞ்சாயத்து போர்டு வரவு செலவுக் கணக்குகளைச் சர்க்கார் அதிகாரிகள் ஆறுமாதத்துக்கு ஒரு முறையாவது பரிசோதனை செய்ய வேண்டும். பஞ்சாயத்துக் கோர்ட்டை, பஞ்சாயத்து போர்டிலிருந்து பிரித்து முன்போலவே பிரத்தியேகமாய்க் கிராமத்தில், சில தகுதி வாய்ந்த அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து, தனிப்பட்ட பஞ்சாயத்துக் கோர்ட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவர்களிடம் நீதி மன்றத்தின் பொறுப்பை அளித்தால், நீதி மன்றம் கிராமத்தில் நன்றாய் நடைபெறலாம். நம் ராஜ்யத்தில் சில ஜில்லாக்களில் நீதி நிர்வாகப் பிரிவினை அமுல் நடத்தப்பட்டு வருகிறது. அவ்விதம் செய்வதால் நலன்கள் இருப்பதால் தான் மேலும் சில ஜில்லாக்களில் அமுலுக்குக் கொண்டுவரச் சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர். அது போல் கிராமப் பஞ்சாயத்திலும் பஞ்சாயத்துக் கோர்ட்டு அலுவல்கள் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும்.

விஷ்ணம்பேட்டை
30—6—54

வி. எஸ். பொன்னுசாமி

ஜுலை 30ம் முதல்

துளி விஷம்

நரசு ஸ்டுடியோஸ்
தயாரிப்பு



நரசு நகர், கிண்டி, சென்னை...15

விநியோகஸ்தர்கள்:

● சென்னை நகரம்: எஸ். ஆர். பிக்சர்ஸ், சென்னை. ● வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு & சித்தூர்: சீதா பிக்சர்ஸ், குடியாத்தம். ● திருச்சி & தஞ்சாவூர்: மாரூர் கானி பிலிம்ஸ், திருச்சிராப்பள்ளி. ● மதுரை, ராமனாதபுரம் & திருநெல்வேலி: இந்தியா டாக்கிஸ் & டிஸ்ட்ரிபியூஷன் கோ., லிட். திருநெல்வேலி. ● கோயமுத்தூர், நீலகிரி & சேலம்: கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிட்., கோயமுத்தூர். ● மைசூர் ஸ்டேட், கூர்க் & தென் கன்னடம்: விஜயா டாக்கி டிஸ்ட்ரிபியூடர்ஸ், பெங்களூர் ஸிடி. ● மலபார்: சென்ட்ரல் பிக்சர்ஸ், கோட்டயம் & எர்ணாகுளம். ● எப். எம். எஸ்: பல்வந்த் ஸிங் & கம்பெனி, பம்பாய்.

சக்கரவர்த்தித் திருமகன்

13. பகீரதன்

யாகக் குதிரையைத் தேடிச் சென்ற தன் குமாரர்கள் திரும்பிவரவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த அரசன் சில நாட்கள் கழித்துப் பேரன் அம்சுமானை யழைத்து, "பாதாளம் போன குமாரர்களுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. நீ வீரன் அல்லவா? ஆயுதபாணியாகச் சென்று பார்த்து விட்டு வருவாய். வெற்றியோடு வருவாய்!" என்று அம்சுமானை ஆசிர்வதித்து அனுப்பினான்.

அம்சுமான் தன் சிறிய தகப்பன்மார், சகர குமாரர்கள் பூமியைத் தோண்டிக் கொண்டு போன வழியைப் பிடித்தே சென்றான். திக்குக் கஜங்களைக் கண்ட போது அவற்றை வணங்கிப் பூஜித்துத் தன் காரியத்தைச் சொல்லிக் கொண்டான். அந்த யானைகளும், "நீ காரிய சித்தியடைவாய்" என்று ராஜகுமாரனை ஆசிர்வதித்தும் தைரியப்படுத்தியும் அனுப்பி வைத்தன. அதன்பேரில் தாமதமின்றி உற்சாகமாகச் சென்றான்.

பாதாளத்தில் எல்லாப் பக்கங்களும் சுற்றிப் பார்த்தான். ஓர் இடத்தில் பெரியதொரு சாம்பல் குவியலையும் பக்கத்தில் யாகக் குதிரையையும் கண்டு திருப்தியும் திகைப்பும் அடைந்தான்.

சகர ராஜாவின் பத்தினி சுமதியின் சகோதரனாகிய கருட பகவான் அங்கே தற்செயலாக வந்தவன், அம்சுமானை நோக்கி, "திகைக்காதே! இந்தச் சாம்பற் குவியலே உன் பித்ருக்களான சகர குமாரர்களின் மிச்சம். கபில தேவரால் சபிக்கப்பட்டுச் சாம்பலானார்கள். அன்புக்குரிய குழந்தாய்! குதிரையைப் பிடித்துச் சென்று யாகத்தை முடித்துக் கொள்ளுங்கள். சபிக்கப்பட்ட ராஜகுமாரர்கள் நற்கதியடைய வேண்டுமானால் தேவலோகத்துக் கங்கையை இங்கே வர வழைத்துச் சாம்பலைக் கரைக்க வேண்டும்" என்றான் கருட பகவான்.

குதிரையுடன் அம்சுமான் வெகு வேகமாகத் திரும்பிப் போய்ப் பாட்டன் மகாராஜாவிடம் விஷயத்தைச் சொன்னான்.

தன் புத்திரர்களுடைய கதியைக் கேட்டு அரசன் துயரக் கடலில் மூழ்கினான். குதிரை திரும்பி வந்தபடியால் யாகத்தைக் கிரமமாக முடித்து விட்டு, குமாரர்களின் கதியைப் பற்றியும் கங்கையைப் பற்றியும் யோசித்தான். யோசித்து, யோசித்து இன்னது செய்வது என்று தோன்றாமல் அந்தத் துயரத்திலேயே உயிர் நீத்தான்.

ராஜாஜி

முப்பதினாயிரம் ஆண்டு வாழ்ந்து சகரன் இறந்தான் என்று ராமாயணத்தில் சொல்லப் படுகிறது. ராமாயணத்தில் முப்பதினாயிரம்

அறுபதினாயிரம் என்கிற பெரிய எண்களைப் படித்து நாம் திகைக்க வேண்டியதில்லை. முப்பது "வருஷ சஹஸ்ரம்" என்றால் அனேக வருஷங்கள் என்றாவது அல்லது முப்பது வருஷமாகவேயும் வைத்துக் கொள்ளலாம். "சஹஸ்ரம்" என்பதை "வருஷம்" என்பதற்கு ஒரு மங்கள அடைமொழியாகவே வைத்துக்கொள்ளலாம். 'ஷஷ்டி சஹஸ்ரம் மக்கள்' என்றால் அறுபது மக்களாகவே வைத்துக் கொள்ளலாம். நம்பினால் இருக்கிறபடியே வைத்துக் கொள்ளலாம்.



சகரனுக்குப் பிறகு அம்சுமானும், அம்சுமானுக்குப் பிறகு திலீபனும் திலீபனுக்குப் பிறகு பகீரதனும் அயோத்தியில் அரசாண்டார்கள். அம்சுமானும் திலீபனும் தங்கள் மூதாதையர்களுடைய நற்கதிக்கு வேண்டியதைச் செய்ய முடியவில்லையே என்று எண்ணி எண்ணி, மற்ற எல்லா விதத்தில் சம்பத்தும் புகழும் அடைந்திருந்தாலும் இந்தப் பெருங் குறையின் காரணமாகத் தலைமுறை தலைமுறையாகத் துக்கப்பட்டுக் கொண்டே காலகதி யடைந்தார்கள்.

* * *

திலீபனுக்குப் பின் அவன் குமாரன் பகீரதன் அயோத்தியாபதி யானான். அவன் மகா தீரன். பகீரதனுக்கு மக்கட் பேறு வாய்க்கவில்லை. அதைக் கருதியும், கங்கையைக் கொண்டு வருவதற்காகவும் ராஜ்யத்தை மந்திரிகள் வசம் ஒப்புவித்து விட்டுக் கோகர்ணத்தில் நீண்ட தவம் புரியப் போனான். நான்கு பக்கங்களிலும் தீ மூட்டி, தலைமேலே வெய்யிலும் காய, மாதம் ஒரு முறையே ஆகாரம் உண்டு பல்லாண்டுகள் உக்கிரமான தவம் புரிந்தான். விடா முயற்சிக்கு ஒரு பெயரே ஆயிற்று பகீரதனுடைய நாமம்.

பிரஜாபதிப் பிரம்மா பகீரதனுடைய தவத்தை அங்கீகரித்து அவனுக்குத் தரிசனம் தந்து "என்ன வேண்டும்?" என்று கேட்டான். பகீரதன் தன் இரண்டு விருப்பத்தையும் தெரிவித்தான். "என் பேரில் தாங்கள் இரக்கங் கொண்டால் எங்கள் குலம் அறுபட்டுப் போகாமல் எனக்குப் புத்திரப் பேறு தர வேண்டும். என் மூதாதைகள் சாபத்துக்கு இரையாகி ஜலக்கிரியை இல்லாமல் சாம்பலாகப் பாதாளத்தில் கிடப்பதைக் கங்கா ஜலத்தில் கரைத்து, நீர்க்கடன் செய்து முடித்து அவர்களைச் சுவர்க்கம் சேரச் செய்ய வேண்டும். அதற்காகக் கங்கை கீழே இறங்கி எங்கள் குலத்தின் பெருந் துயரத்தை



நீக்க வேண்டும். இதுவே நான் கோரும் வரம்" என்று பகீரதன் பிரம்மாவை மிக வணக்கமாகப் பிரார்த்தித்தான்.

"உன் தவம் தேவர்களுக்குத் திருப்தி தந்தது; உன் இஷ்டங்கள் நிறைவேறும். ஆனால் ஒன்று: ஹிமவானுடைய மூத்த புத்திரியான கங்கை கீழே இறங்கினால் . அந்த வேகத்தை இந்தப் பூமி தாங்காதே? அதைத் தாங்கக் கூடியவன் உமாபதி ஒருவனே. அவனைக் குறித்துத் தவஞ் செய்வாய்" என்று சொல்லி உடன் வந்த தேவ கணங்களுடன் மறைந்தான்.



மறுபடியும் பகீரதன் நீண்ட காலம் அன்ன ஆகாரமின்றிக் கடுந்தவம் செய்து உமாபதியின் அருளைப் பெற்றான். பரமசிவன் ப்ரத்யக்ஷ தரிசனம் தந்து, "உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன். மலைராஜன் மகளாகிய கங்கை இறங்கும்போது என் தலையில் அவளைத் தாங்குவேன். அவள் உனக்கு அருள்வாளாக" என்றான்.

பரமேசுவரன் பகீரதனுக்கு இந்த வரத்தைத் தந்ததும் பிரம்மன் சொல்லியிருந்தபடி கங்காதேவி இறங்கினாள். தன் முழு வேகத்துடன் ஆகாயத்திலிருந்து கீழே மகாதேவனுடைய சிரசின் மேல் விழுந்தாள். தன்னுடைய அபார வேகத்தால் சங்கரனையும் தள்ளிக் கொண்டு நேராகப் பாதாளம் போவேன் என்று அவள் எண்ணினாள். அவளுடைய கர்வத்தை யடக்க வேண்டும் என்று முக்கண்ணன் உத்தேசித்தான். அவன் அந்தப்படி நினைத்த மாத்திரத்தில் தலையில் இறங்கிய பவித்திர ஜலப் பிரவாகம் அவனுடைய பெருஞ் சடையில் அகப்பட்டுக் கொண்டு வெளியில் வரமுடியாமல் நின்று போய் விட்டது!

எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆயினும் இமய மலைச் சொரூபமான மகா தேவனுடைய சடையின் குகைகளினின்று வெளிப்பட்டு வந்து பூமியில் இறங்க முடியாமல் திகைத்துப் போனாள்.

கங்கைக்காகத் தவமிருந்து அடைந்த பகீரதன், "ஐயோ இப்படியாயிற்றே! ஜலப் பிரவாக மெல்லாம் எங்கே போயிற்று?" என்று மறுபடியும் மகா தேவனைக் குறித்துத் தவம் செய்தான்.

மகாதேவன் அவனுக்கிரங்கி பிந்து ஸரஸில் கங்கையை மெதுவாக விட்டான். அங்கிருந்து ஏழு சிறு ஆறுகளாக மிக அடக்கத்துடன் கங்கா தேவி வெளிப் பட்டாள். மூன்று ஆறுகள் கிழக்கு முகமாகவும், மூன்று ஆறுகள் மேற்கு முகமாகவும் சென்றன. ஏழாவது ஆறு பகீரதன் பின்னால் சென்றது. பகீரதன் மகிழ்ச்சிப் பரவசமானான். தலைமுறை தலைமுறையாகக் காத்திருந்த தன் மூதாதைகளுக்கு நற்கதி யுண்டாயிற்று என்று அவன் மனம் பூரித்து, வெற்றித்தேர் ஏறி முன் சென்றான். கங்கை ஆறு அவனைத் தொடர்ந்து துள்ளிக் குதித்துப் பெரும் பிரவாகமாகப்

★ ○ ★ ○ ★ ★ ○ ★ ○ ★ ○ ★ ○

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

பின் தொடர்ந்து சென்றது. ஜலத்துடன் பல ஜல ஜந்துக்களும் பறவைகளும் விளையாடிக் கொண்டு செல்ல மின்னல் பாய்வது போல் விளங்கிற்று. அந்த மகத்தான காட்சியைக் காண தேவ கந்தர்வக் கூட்டம் ஆகாயத்தில் கூடிற்று. நதியின் கதியும் சில இடங்களில் மெதுவாகவும் சில இடங்களில் மகா வேகமாகவும் சில இடங்களில் மேலிருந்து கீழே குதித்தும், சில இடங்களில் கீழிருந்து மேலே குதித்தெழுந்தும்—கங்கா தேவி மனத்தைக் கவரும் கதிகளுடன் பகீரதன் தேரைப் பின் பற்றி நர்த்தனம் செய்து கொண்டு சென்றாள். ஆகாயத்தில்தேவகந்தர்வ கூட்டங்களும் நதியின் கூடவே சென்றன.

இப்படிச் சென்ற புண்ணிய நதியானது வழியில் ஓர் இடத்தில் ஜன்ஹு ரிஷியினுடைய யாக வேதிகையைக் கலைத்துச் சேதம் செய்தது. ஒதுங்கிப் போகாமல் இப்படிச் செய்தாளே என்று ரிஷியானவர் நதியை அப்படியே கையில் எடுத்து உறிஞ்சி 'ஆசமனம்' செய்து விட்டார். கங்கை முற்றிலும் மறைந்து ஒழிந்து போயிற்று!

மறுபடியும் பகீரதன் ஐயோ என்று திகைத்தான். ஆனால் தேவ ரிஷி கணங்கள் ரிஷியை வணங்கி கங்கையின் அபராதத்தை மன்னித்து பகீரதனுடைய தவத்தைப் பயனடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ரிஷியும் அங்கீகரித்து நதியைத் தம் வலது காதின் வழியாக வெளிப்படுத்தி மேலே போக விட்டார்.

“ரிஷியின் உடலிலிருந்து வெளிப்பட்டு ரிஷியின் பெண்ணே ஆனாய். ஜான்ஹவி என்ற பெயரும் பெறுவாய்” என்று தேவர்கள் மகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்தார்கள்.

பிறகு யாதொரு இடையூறுமில்லாமல் கங்கை சாகரம் சேர்ந்தாள். அங்கிருந்து பாதாளம் புகுந்து சகர புத்திரர்கள் எரிந்து சாம்பலான இடத்தைச் சேர்ந்தாள். பகீரதனும் தன் மூதாதைகளுக்கு நீர்க் கடன் செய்து முடித்து அவர்களை உத்தம லோகம் அடையச் செய்தான்.

பகீரதன் தன் தளரா முயற்சியால் பூமிக்குக் கொண்டு வந்த புண்ணிய நதிக்குப் பாகீரதி என்றும் பெயர்.

* * *

“உன் முன்னோர்களாகிய சகர குமாரர்கள் வெட்டிய சாகர சரித்திரமும் பகீரதன் தவத்தின் பயனாக ஆகாயகங்கை பூமிக்கு இறங்கிய சரித்திரமும் கேட்டாய். உனக்கு மங்களமாகுக. மாலை ஆயிற்று. உன் மூதாதை உலகத்துக்குத் தந்த கங்கையில் இறங்கி சந்தியா வந்தனம் செய்வோம்” என்று விசுவாமித்திரர் ராமசந்திரனுக்குச் சொல்லி முடித்தார்.

கங்கைக்குப் போய் ஸ்நானம் செய்தாலும், அல்லது இந்தப் புண்ணிய கதையைப் பக்தியுடன் படித்தாலும், படிக்கச் சொல்லிக் கேட்டாலும் பாவங்கள் தீர்ந்து சுத்த உள்ளத்தை யடைந்து நல்ல சீலமும், எடுத்த காரியத்தில் தளராமுயற்சியும் மக்கள் அடைவார்கள்.

பத்திரிகை உலகில் ஒரு புதிய சாதனை

தமிழ் சினிமா

மாதமிருமுறை வெளிவரும் முதல் சினிமா செய்திப் பத்திரிகை

ஆசிரியர்: ஏ. கரீம்

ஆகஸ்டு முதல் தேதி வெளிவருகிறது!

அகில உலக நிருபர்களின் அருமையான செய்திகளுடன், பிரத்யேகப் புகைப் படங்களும், பிரமாதமான பல புதிய பகுதிகளும்—வேறு எதிலும் படித்திராத ஏராளமான ருசிகரத் தகவல்களும் சேர்ந்து, மகத்தான திட்டத்தோடு மகோன்னத முறையிலே தென் இந்தியாவிலேயே முதன் முதலாக தினப் பத்திரிகை அளவில் வெளி வரும் ஒரே சினிமாச் செய்திப் பத்திரிகை.

எட்டு பக்கங்கள்—இரண்டே அணாதான்!

ஏஜண்டுகள் டிபாசிட்டுடன் விண்ணப்பங்களை ஜுலை மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

மானேஜர் - தமிழ் சினிமா - சென்னை-5

PPY-26-TAM.

"என் தொண்டை ரணத்தினால் என்னால் விழுங்கவே முடியவில்லை"

ஆனால்

பெப்ஸ்

அதை சமனமாக்கி குணப் படுத்தியது.



பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் ஸ்வாஸத்துடன் தொண்டை, ஸ்வாசக் குழாய் மூலமாக ஸ்வாசப் பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே நேராகச் சென்று வேலை செய்கின்றன. இதனால் தான் பெப்ஸை கண்ட ஒளஷதமாயும், உலக பிரசித்திப் பெற்றும் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன், இன்ப்ளூயன்ஸா மற்றும் ப்ராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.



PEPS

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்

"பெண்" — ஒரு வெற்றிகரமான படம்

ஸோமாஸ்

சினிமா, நாடகங்களில் வரும் கதா பாத்திரங்களும் சரி, பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளில் வரும் பாத்திரங்களும் சரி, எத்தனை கஷ்டப்பட்டு எவ்வளவு வேதனைக் குள்ளானாலும், முடிவில் மேற்படி சகல வேதனைகளிலிருந்தும் விடுபட்டு, சகல சௌபாக்கியங்களும் பெற்று நல் வாழ்வு வாழ்ந்தால்தான் பெரும்பாலான ரஸிகப் பெருமக்களின் மனம் திருப்தி யடைகிறது.

மக்கள் நல்ல முடிவை விரும்புகிறார்கள் என்பதற்காக, கதா பாத்திரங்கள் கஷ்டப்படாமலே எல்லாவற்றிலும் வெற்றி யடைந்து விட்டதாகக் கதையைத் தயாரித்து விட்டால், ரஸிகர்கள் அதை ரஸிப்பதில்லை.

பரிவு, பிரிவு; கோபம், தாபம்; அமைதி, வேகம்;— இத்தகைய பல்வேறு உணர்ச்சிகளைக் கொண்டு, கவர்ச்சிகரமான காட்சி அம்சங்களையும் கொண்டிருந்தால் அந்தப் படம் ஒரு வெற்றிகரமான படம் என்பதில் ஐயமில்லை.

ஏ. வி. எம். ப்ரொடக்ஷன்ஸார் தயாரித்து வெளியிட்டிருக்கும் "பெண்" மேற்கூறிய முறைகளில் சிறந்த படம் எனக் கொள்ளத் தகுந்தது.

"பெண்" என்றாலே போதும்! அடைமொழி எதுவும் வேண்டாம்; அழகும் அலங்காரமும் அதிலேயே இருக்கின்றன. யாரே அழகுக்கு அழகு செய்வார்!

இனிப்பும் புளிப்பும் ஒன்று சேரும் போதுதான் தனி ருசி பிறக்கிறது; அதே மாதிரி துன்பமும் இன்பமும் சேரும் போதுதான் கதையில் ருசி ஏற்படுகிறது. அடக்கமும் ஆடம்பரமும் சேரும் போதுதான் கதை உருவாகிறது.

கண்மணி அடக்க ஒடுக்கமான பெண்; ராணி நவ நாகரிகத்தில் மிதக்கும் புதுமைப் பெண். இருவரும் இணைபிரியாத் தோழிகள். ராணியின் நடனத் திறமையும், சகல கலைகளிலும் அவளுக்கு உள்ள தேர்ச்சியும் கண்மணியைப் பெரிதும் கவர்ந்து அவர்கள் நட்பை வளர்க்கின்றன.

இரண்டு இளம் பெண்கள் நெருங்கிய தோழமை பூண்டு அங்கும் இங்கும் வளைய வந்தால் மட்டும் படம் பார்ப்பவர்கள் திருப்தி அடைந்து விடுவார்களா? படத்தில் ஸ்வாரஸ்யம் எப்படி ஏற்படும்! அவர்கள் அழகும் இளமையும் படவேண்டியவர்கள் கண்ணில் பட்டால்தானே வழி பிறக்கும்!

கண்மணியைக் காரில் பக்கத்தில் வைத்துக் கொண்டு ராணி மிகவும் உல்லாசமாகப் பவனி வந்தாள். அதே சமயத்தில் அதே வழியாக, ராஜா தன் நண்பன் ரகுவுடன் தன் காரில் உல்லாஸமாகப் பவனி வந்தான்.

படத்தில் இந்த இடம் வந்ததும் படம் பார்ப்பவர்களின் உள்ளங்களும் உல்லாஸமாகப் பவனி வருகின்றன; அதாவது, படத்தில் 'டக்' கென்று ஒரு புது ருசி தோன்றுகிறது. கார்கள் வேகத்தில் பறக்கின்றன; காரிகைகளின் உள்ளங்களும் பறக்கின்றன; வாலிப நண்பர்களின் இதயங்களும் துடிக்கின்றன; கார்கள் ஒன்றை யொன்று முந்தப் பார்க்கின்றன; 'சர்' ரென்று திரும்புகின்றன; 'விர்' ரென்று பாய்கின்றன; 'கர்' ரென்று நெருங்கி நின்று மோதுகின்றன; புழுதி பறக்கிறது; காதலும் பிறக்கிறது! (இவ்வளவு அமர்க்களத்துக்குப் பின்பும் காதல் பிறக்கவில்லை என்றால் அந்தக் காதல் உலகத்தில் இருந்துதான் என்ன பயன்!)

கண்மணியின் மீது ராஜா காதல் கொண்டு விடுகிறான். கதையும் ஆரம்பமாகி விடுகிறது.

நவநாகரிகப் பட்டுப் பூச்சியான ராணி சர்வதேச விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளப் பெற்றோர்களுடன் இலங்கை செல்லுகிறாள்.

சைக்கிள் சவாரி, நீச்சல் போட்டி, ஓட்டப் பந்தயம் எல்லாவற்றிலும் ராணிக்கே வெற்றி கிடைக்கிறது. அந்தக் காட்சிகள் பிரமாதமாகப் படம் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ராணிக்குக் கால்வலி ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்படுகிறாள். இதை யறிந்த கண்மணி கண்ணீர் விடுகிறாள். ராணிக்கு அவள் எழுதிய கடிதங்களை யெல்லாம் ராணியின் தாயார் அவள் கண்ணில் காட்டாமல் கிழித்தெறிந்து விடுகிறாள்.

ராஜாவின் நண்பன் ரகு உறுதுணையா யிருந்து கலப்பு மணத்தில் பிறந்த கண்மணிக்கும் ராஜாவுக்கும் மணம் முடித்துத் தாற்காலிகமாகப் படத்திலிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறான்.

ராஜாவின் தகப்பனார் சாரங்கபாணிப் பிள்ளை ஒரு பண்டைக் காலத்து மனிதர்; பெண்ணினத்தையே பேயாக நினைப்பவர்; தமது கொள்கையைக் கவிதையாகப் புனைந்தும், கதா காலக்ஷேபம் நடத்தியும் வலியுறுத்துபவர். இந்த அதியற்புதப் பாத்திரத்தை, பிரபல ஹாஸ்ய நடிகமணி ஸ்ரீ கே. சாரங்கபாணி ஏற்று நடிக்கிறார் என்று கூறினால் போதும். அதன் சிறப்பு அம்சங்களை ரஸிகர்கள் தாங்களே தெரிந்து கொள்ளுவார்கள்.


அவர் குடுமியை முடிந்திருக்கும் பாணி, உணர்ச்சி மிகுதியிலும் கோபத்திலும் நடைபோடும் லாகவம், அபிநயத்தோடு அநுபவித்துப் பாடும் சுகம், மகன் ராஜா கலப்பு விவாகம் செய்து கொண்டதை அறிந்ததும் குதிக்கும் குதிப்பு, பிறகு அவனைக் கண்டு திருத்த முயன்று, வெற்றி கண்ட போது அடைந்த பெருமிதம் எல்லாம் பிரமாதம்!

அத்தான் சுந்தரம், கடல் கடந்து சென்றிருந்தவன், நீண்ட காலத்துக்குப் பிறகு, இளமையில் ஏற்பட்ட இன்ப நினைவுடன் தாய்நாடு திரும்புகிறான். அவன் இதய வீணையே அறுந்துபோகும் படியான அதிர்ச்சி தரும் செய்தியைக் கேட்கிறான். அவன் மாமன் மகள் கண்மணிக்கு மணமாகி விட்டது என்னும் செய்திதான் அது. அடுக்குமேல் அடுக்குகளாகக் கட்டப்பட்டிருந்த அவனது கற்பனை மாளிகை தூள் தூளாக நொறுங்கி விழும் காட்சியைச் சுந்தரத்தின் முகபாவம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

ராஜாவின் தகப்பனார் சாரங்கபாணிப் பிள்ளையிட மிருந்து உடனே புறப்பட்டு வரும்படி அவனுக்குத் தந்தி வருகிறது. ராஜா தகப்பனாரைப் பார்க்கப் போகிறான். கண்மணி தனியே இருக்கிறாள். "பெண்" படத்தின் முக்கியமான பகுதி, கத்தி முனையில் நடனம் புரிவது போன்ற மிகவும் கடினமான பகுதி — இங்குதான் அமைகிறது. கதையின் திருப்புமுனையாகிய இப் பகுதியினால் படத்தின் 'டெம்போ' துரிதப்படுகிறது.

அத்தான் சுந்தரம் கண்மணியின் வீட்டுக்கு வருகிறான்; கண்மணி அன்புடன் உபசரிக்கிறாள்.

இரவு வருகிறது. சூழ் நிலைக்குச் சாதகமாக வெண்மதி தண்ணிலவை விரிக்கிறது. அத்தான் சுந்தரத்தின் உணர்வு விழித்துக் கொள்ளுகிறது. நந்த வனத்தின் இன்பம் நிறைந்த சூழ்நிலை,



விழித்தெழுச்சு விட தாகம் போன்ற உணர்வுக்கு மோடி பாடிப் படம் விசிக்கச் செய்கிறது. அத்தான் சுந்தரம் கண்மணியின் அறைக்குள் நுழைகிறான் தூங்கும் கண்மணியின் வனப்பு அவனை இயற்கை விகாரத்தின் வசப்பட வைக்கிறது.

சட்டென்று விழித்துக் கொண்ட கண்மணி அத்தான் நிலை கண்டு பதறுகிறாள். சிறிது நேரம் பதுங்கிக் கிடந்த நல்லுணர்வு, அத்தான் சுந்தரத்தைச் சமயத்தில் கைவிடவில்லை; அதுவும் சட்டென்று விழித்துக் கொள்கிறது. பாதையிலிருந்து வழுக்கிப் பாதாளத்தில் விழப் போன அவனை அந்த நல்லுணர்வு கை தூக்கி விடுகிறது.

இந்தக் கட்டத்தில் சகஸ்ரநாமம் நன்றாக நடித்திருக்கிறார். உணர்ச்சி அலைகளின் வேகத்தை அவர் முகபாவத்திலும், தள்ளாடும் தளர் நடையிலும், ததும்பும் கண்ணீரிலும் காண முடிகிறது.

இதற்குப் பிறகு திரைக் கதையே திசை மாறிக் கண்ணீர்விட ஆரம்பிக்கிறது.

ராஜாவின் தகப்பனார், மகனுடைய கலப்பு விவாகத்தை ஆதரிக்கவில்லை. கண்மணியைத் தள்ளிவைத்து வேறு விவாகம் செய்ய முயலுகிறார். அதைச் சிறிதும் விரும்பாத ராஜா தன் ஊருக்குத் திரும்பி, வீட்டுக்கு வருகிறான். அச்சமயம், கண்மணியும் அத்தானும் பேசிக்கொண்டிருந்த பாவனை அவன் மனதில் களங்கத்தை ஏற்படுத்துகிறது. அவன் உடனே, ஊருக்குப் போய், கண்மணிக்கு விடுதலைக் கடிதம் எழுதி விடுகிறான். கண்மணி மனம் உடைகிறாள்.

இந்திய நாட்டியக் கலையின் பெருமையை இலங்கையில் நிலை நாட்டி விட்டு, ஊருக்குத் திரும்பிய ராணியிடம், கண்மணி தன் கல்யாணத்தைப் பற்றியோ அதை யொட்டி நிகழ்ந்த அதிர்ச்சியைப் பற்றியோ ஒன்றும் சொல்லவில்லை.

கண்மணி மேற்படி நிகழ்ச்சிகளை ராணியிடம் கூறி யிருந்தால், படத்தில் ரகுவின் திடீர்ப் பிரவேசத்துக்கு அவசியம் ஏற்பட்டிருக்காது அல்லவா! கதையும் ராணி—ரகுவின் கலியாணத்துடன் முடிந்திராதல்லவா!

கண்மணியாக நடித்த அஞ்சலி தேவியின் நடிப்பு, படுவேகத்தில் பறக்கும் காரில் இருந்து கொண்டு மருண்டு பதைக்கும் போதும், ரேடியோவில் ராணியின் வெற்றிச் செய்தியைக் கேட்டுப் பூரிக்கும் போதும், கணவனால் கை விடப்பட்டுக் கண்ணீர் வடித்தபோதும் சிறப்பா யிருந்தது.

குமாரி வைஜயந்திமாலா பாரத நாட்டின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக மேனாட்டு நடனக்காரிக்குச் "சவால்" விட்டு, பரதநாட்டியம் – கதகளி – மணிபுரி முதலிய நடனவகைகளில் தனது ஆட்டத் திறமையை நிலைநாட்டியிருக்கிறார். ஆனால், இப்படி ஒரே மூச்சில் எல்லா ஆட்டங்களையும் ஆடித் தீர்த்திராமல் கொஞ்சம் இடை இடையே மூச்சு விட்டுக் கொண்டு ஆடியிருந்தால், ரஸிகர்கள் நிதானமாகப் பார்த்து ரஸிக்கச் சௌகரியமா யிருந்திருக்கும்.

"பெண்" படத்தின் ஆரம்பத்திலிருந்து, ரகுவாக நடிக்கும் ஸ்ரீ பாலசுந்தரின் கோமாளி ஹாஸ்யங்களை, கதையின் சிக்கல்களைப் பிரித்துக் கதையைக் கல்யாணத்தில் முடித்து வைக்கும் அவரது சிறப்புத் தன்மைக்காகச் சகித்துக் கொள்ள வேண்டியதுதான்! வேறு வழியில்லை.

ஸ்ரீ ரா. வெங்கடாசலம் எழுதிய "பெண்" கதை, சீர்திருத்தக் கொள்கையைத் தன்னகத்தே கொண்டு, கண்ணியமான முறையில் சமூகத்தை அவ்வழியில் திருப்ப முயன்றிருப்பது பாராட்டுக்குரியது. புதுமையை வரவேற்கும் உணர்ச்சிப் பெருக்கில், பழமையைக் கிளறி ஆவேசச் சொற்போர் புரியாதது பாராட்டுக்குரியதுதானே!

திரைக் கதை வசனம் திறம்பட அமைக்கப் பட்டிருக்கிறது.

எல்லோரும் "பெண்" பார்க்கப் போகலாம்; சென்னையில் ஐந்து தியேட்டர்களில் அமோகமான பொதுஜன ஆதரவுடன் காட்சி தருகிறாள்.



கண்ணனின் காதலி

ராகவனுக்கும் ராதைக்கும் கல்யாணம் நடந்ததே ஒரு விசித்திரம்தான். கல்யாணத்தன்று வரை ராகவன் ராதையைப் பார்க்கவில்லை. ராதை ராகவனைப் பார்க்கவில்லை. ராகவனுக்குப் பெற்றோர்கள் இல்லையாதலால் அவனுக்கு மாமா ஒருவர் ராதையின் புகைப் படத்தை அவனுக்கு அனுப்பிச் சம்மதம் கேட்டிருந்தார். ராதையின் படத்தைப் பார்த்தவுடனேயே ராகவனுக்கு ஏதோ ஒரு கவர்ச்சி உண்டாயிற்று. மாமாவுக்குத் தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதி விட்டான்.

கல்யாணத்தன்று மணையில் நேரில் ராதையைப் பார்த்த ராகவன் அவள் இவ்வளவு அழகாகப் பூந்தொடிபோல, ஸ்வர்ண விக்கிரகம் மாதிரி இருப்பாளென்று எதிர் பார்க்கவே இல்லை. அதனால் தன் பாக்கியத்தை எண்ணிப் பூரித்துப் போனான்.

கல்யாணம் ஆனவுடனேயே சென்னையில் ராதையுடன் தனிக் குடித்தனம் நடத்த வேண்டுமென்று பிரம்ம பிரயத்தனப்பட்டும் அவனுக்கு வீடு கிடைக்கவில்லை. திருமணமான பிறகும் பிரம்மச்சாரியாக இருக்க வேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருந்தது.

இருந்தாலும் ராகவனும் ராதையும் நாளைக்கு ஒரு கடிதமாக எழுதிக் கொண்டு தனிமையின் ஏக்கத்தை ஒருவாறு தணித்துக் கொண்டிருந்தனர்.

தீபாவளி சமயம் நெருங்கியது. ராகவனுக்கு மாமனாரிடமிருந்து தலை தீபாவளிக்கான அழைப்பு வந்தது. கூடவே ராதையின் அன்புக் கடிதமும் அவனைச் சீக்கிரம் புறப்படச் செய்யும் தூண்டுகோலாக அமைந்தது. ராதைக்கு வேண்டிய சாமான்களெல்லாம் ஒரு பெட்டி நிறைய வாங்கிக் கொண்டான். மைசூர்ப் பட்டில் ஆகாய வர்ணத்தில் ஒரு புடவையும் அதற்கேற்றாற் போல் ரவிக்கையும் வாங்கிக் கொண்டு திருச்சிக்குப் புறப்பட்டான்.

ராகவன் வண்டி புறப்படுவதற்கு வெகு நேரம் முன்னதாகவே ஸ்டேஷனுக்கு வந்து தன்னுடைய சாமான்களையெல்லாம் வண்டிக்குள் வைத்துப் படுக்கையையும் விரித்து விட்டான்.

அவனுடைய அதிர்ஷ்டம் அவன் ஏறி இருந்த பெட்டியில் அன்று ரயில் புறப்படுமளவும் அதிகக் கூட்டம் ஏறவில்லை. முதல் மணி அடித்ததும் ராகவன் வண்டியில் ஏறி உட்கார்ந்தான்.

அந்தச் சமயத்தில் அவசரம் அவசரமாக ஓடி வந்து அவன் ஏறியிருந்த பெட்டியில் சிறிய கைக் குழந்தையோடு ஒரு ஆணும் பெண்ணும் ஏறினார்கள். அவர்கள் ஏறினதும் வண்டி புறப்பட்டதும் ஒன்றாக இருந்தது.

பறக்கப் பறக்க ஓடி வந்து ஏறியதால் அந்தத் தம்பதிகளுக்கு மூச்சு வாங்கியது. குழந்தை வேறு 'வீல்' என்று கத்த ஆரம்பித்து விட்டது. குழந்தையைப் பலவிதமாகச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

"பிரயாணம் போவதென்றால் கொஞ்சம் முன்னால் வந்திருக்க வேண்டாமா, ஸார்!" என்றான் ராகவன்.

"நாங்கள் சென்னைக்கே நேற்றுத்தான் பம்பாயிலிருந்து மூன்று மாத ரஜாவில் வந்தோம். அடையாறில் என் மைத்துனி வீட்டில் தங்கியிருந்தோம். அடையாறில் பஸ் சரியானபடி கிடைக்காததால் இவ்வளவு நேரமாகிவிட்டது. இந்தப் பஸ்ஸை நம்பினாலே இப்படித்தான், ஸார்! ஏதோ இந்த மட்டும் ரயில் கிடைத்ததே! நீங்கள் எதுவரை போகிறீர்கள்!" என்று கேட்டார் அந்த மனிதர்.

"நான் திருச்சிக்குப் போகிறேன். நீங்கள்!..." என்று பதிலுக்கு வினவினான் ராகவன்.

"என் பெயர் ராமநாதன். நாங்கள் வட இந்தியாவில் வேலையாக இருப்பதால் மூன்று மாத லீவில் தென்னாட்டிலுள்ள பந்துக்கள் எல்லாரையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்திருக்கிறோம். முதலில் மதுரைக்குப் போகப் போகிறோம். அங்கு என் தாயார் இருக்கிறாள். அவளோடு ஒரு மாதம் இருந்து விட்டுத் திருச்சி வரப் போகிறோம். அங்கே என் மனைவியின் பெற்றோர்கள் இருக்கிறார்கள்!" என்றார்.

இதற்குள் ரயில் தாம்பரம் ஸ்டேஷனுக்கு வந்து விட்டது. ராமநாதனின் மனைவி சரோஜா அழும் குழந்தைக்குப் பாலூட்டி அதைத் தூங்க வைத்து விட்டு வண்டியில் இன்னும் யார் யார் இருக்கிறார்கள் என்று சுற்று முற்றும் பார்த்தாள்.

எதிர்ப் பக்கம் உட்கார்ந்து இதுவரையும் தன் கணவனுடன் பேசிக் கொண்டிருந்த ராகவனைப் பார்த்ததும் அவனை எங்கேயோ பார்த்தமாதிரி அவளுக்குத் தோன்றியது. யாராக இருக்கலாம் என்று யோசித்து யோசித்துப் பார்த்தாள். சட்டென்று நினைவுக்கு வரவில்லை.

சரோஜா மறுபடியும் யோசனை செய்தாள். தன் கணவனிடம் காதோடு காதாக யாராக இருக்கும் என்று யோசனை கேட்டுப் பார்த்தாள். ராமநாதன் தமக்குத் தெரியாது என்பது போல உதட்டைப் பிதுக்கி விட்டார்.

சரோஜாவுக்குக் கடைசியில் ராகவனின் முகம் நினைவுக்கு வந்து விட்டது. திருச்சியில் தன்னுடன் கூடவே படித்த கலாசாலைத் தோழி ராதையின் கணவர் என்று தெரிந்துகொண்டாள். ராதையின் கலியாணத்தின்போது கொஞ்ச நேரம் மட்டுமே பார்த்திருந்ததால் உடனே அவளுக்கு நினைவுக்கு வரவில்லை.

உடனே அதைத் தன் கணவரிடம் சொல்லி ராகவனை ராதையின் கணவன்தானு என்று கேட்கச் சொன்னுள். ராமநாதன் எப்படிக் கேட்பது என்று சற்றுத் தயங்கினுர். ஆனல் சரோஜா அவரை விடுபவளா யில்லை.

"திருச்சியில் நீங்கள் யார் வீட்டுக்குப் போகிறீர்கள்! உங்கள் சொந்த ஊரே திருச்சியா!" என்று நாஞுக்காக ராகவனைக் கேட்டார் ராமநாதன்.

"நான் வேலையாயிருப்பது சென்னைதான். என் மாமனுர் வீடு திருச்சி. கிருஷ்ணசாமி என்று கண்டோன்மெண்டில் இருக்கிறுர். அவருடைய மாப்பிள்ளை நான். தலை தீபாவளிக்காக அங்கு போகிறேன்!" என்று சுருக்கமாக முகத்தில் சங்கோசத்தின் சாயை படர விஷயத்தைத் தெரியப் படுத்தினுன் ராகவன்.

சரோஜா உடனே ஒரே துள்ளாகத் துள்ளினுள். "பார்த்தீர்களா! நான்தான் அப்பொழுதே சொன்னேனே, பார்த்தால் ராதையின் கணவர் மாதிரி இருக்கிறது என்று! ராதையின் கல்யாணத்தன்று என்னுடைய சகோதரியின் கலியாணமும் தற்செயலாகச் சேர்ந்து கொண்டதால் திருச்சிக்குப் பம்பாயிலிருந்து வர முடிந்தது!" என்று உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே வந்தவள் ராகவனிடமே நேரிடையாக, "ராதையை நான் ரொம்பவும் கேட்டதாகச் சொல்லுங்கள். திருச்சிக்கு நான் இன்னும் ஒரு மாதத்தில் வருவேனென்றும் சொல்லுங்கள். ராதையும் நானும் உயிர்த் தோழிகள். சரோஜா என்று சொன்னுல் போதும்!" என்று மளமளவென்று பேசினுள்.

ராகவன் சிரித்துக் கொண்டே, "அவசியம் சொல்லுகிறேன்!" என்றுன்.

"நாங்கள் சென்னைக்கு இன்னும் இரண்டு மாதங்களில் திரும்பி வருவோம். அதற்குள் ஜாகை பார்த்து விடுங்கள். ராதையுடன் நான் இருக்க ஆசைப்படுகிறேன்!" என்றுள் சரோஜா.

"எதற்கு! அவர்களுடைய தனிக் குடித்தன இன்பத்தைக் கெடுக்கவா!" என்று கேலியாகக் கேட்டார் ராமநாதன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் கட்டாயம் எங்களுடன் கொஞ்ச நாட்களாவது வந்து தங்க வேண்டும். இரண்டு மாதத்துக்குள் கட்டாயம் வீடு கிடைத்துவிடும்!" என்று உற்சாகமாகக் கூறினுன் ராகவன்.

மணி பதினென்று ஆகியது. செங்கற்பட்டு ஸ்டேஷனும் வந்தது. ராகவன் கொட்டாவி விட்டான். "நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்களேன்!" என்றுர் ராமநாதன்.

சரியென்று சொல்லிவிட்டு ராகவன் தன் படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டான். அவனுக்கு என்னவோ தூக்கம் கொஞ்சம்கூட வரவில்லை. ராதையின் முகம் எதிரேயே நின்று இன்ப நினைவுகளை உண்டாக்கிக்கொண்டிருந்தது. கண்களை வெறுமனே மூடிக் கொண்டு படுத்திருந்தான்.

சரோஜா தன் கணவனிடம், "என்ன! உங்களுக்கு ராதையை நினைவிருக்கிறதோ!" என்று மெதுவாகக் கேட்டாள்.


"உன்னுடைய சிநேகிதிகளையெல்லாம் நான் எப்படி நினைவு வைத்திருக்க முடியும்!" என்று சிரித்துக் கொண்டே கேட்டார் ராமநாதன்.

"ராதை ஒன்றும் எல்லா சிநேகிதிகளையும் போல் இல்லை. அவள் என் பிராண சிநேகிதி. கல்லூரியிலேயே அழகிலும், படிப்பிலும் சகலவிதத்திலும் முதலில் நிற்பவள். மகா கெட்டிக்காரி!" என்று புகழ்ந்து கொண்டே போனுள் சரோஜா.

"அப்படியானுல் இந்த மனுஷன் ரொம்பக் கொடுத்து வைத்தவன் என்று சொல்லு!" என்று ராகவனைச் சுட்டிக் காட்டினுர் ராமநாதன்.

"அதற்கு என்ன சந்தேகம்! ராதையை மனைவியாக அடைய இவர் எவ்வளவோ அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்!" என்றுள் சரோஜா அழுத்தந் திருத்தமாக.

அவர்கள் மெதுவாகப் பேசிக் கொண்டாலும்விழித்துக்கொண்டே படுத்திருந்த ராகவனுக்கு எல்லாம் தெளிவாகக் கேட்டன தன் அருமை மனைவியைப் பற்றி அவர்கள் வானளாவப் புகழ்வதைக் கேட்டு அவன் உள்ளம் பூரித்தான். இந்த நிமிஷமே



'நாம் நம் ராதையைச் சந்திக்க மாட்டோமா!' என்று அவன் மனம் அவசரப்பட்டது. இன்னும் அந்தத் தம்பதிகள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறியும் ஆவல் தூண்டவே, காதைத் தீட்டிக் கொண்டு தூங்குவது போல் கண்களை மூடியவாறே படுத்திருந்தான்.

மீண்டும் சரோஜா பேச்சைத் துவக்கினாள். "நீங்கள் ராதையைப் பார்த்திருக்கிறீர்கள். இப்பொழுது நினைவுக்கு வரவில்லைபோலிருக்கிறது. நம் கல்யாணம் ஆன வருஷம் எங்கள் கல்லூரி தினக் கொண்டாட்டத்துக்கு நீங்கள் வந்திருந்தீர்களே, நினைவிருக்கிறதா!" என்று கேட்டாள்.

"ஆமாம்! நீகூட எல்லாவற்றிலும் பங்கெடுத்துக் கொண்டிருந்தாயே!" என்றார் ராமநாதன்.

"பார்த்தீர்களா! இப்பொழுது ராதையை நான் நினைவுப்படுத்துகிறேன்!" என்று சொல்லி விட்டு ராமநாதனின் காதுகளில் சரோஜா ஏதோ ரகசியமாகக் கூறினாள். மேலே படுத்துக்கொண்டிருந்த ராகவனும் அதைக் கவனித்துக் கொண்டிருந்தான். சரோஜா ரொம்ப மெதுவாகத் தன் கணவரிடம் சொல்லியதால் என்னவென்று ராகவனுக்குப் புரியவில்லை தன் ராதையைப் பற்றி என்ன ரகசியம் இருக்கக்கூடும் என்று நினைத்த வாறே பலவித யோசனைகளுடன் அவர்கள் சம்பாஷணையை மீண்டும் ஆவலுடன் கேட்கலானான்.

சரோஜா சொன்னதைப் புரிந்து கொண்ட ராமநாதன் உற்சாகமாகத் தலையை ஆட்டி விட்டு, "ஓ! அந்தப் பெண்ணு! இப்போது நினைவு வந்து விட்டது. நீ அப்பொழுதே 'கண்ணனின் காதலி' என்று ஒரு வார்த்தை சொல்லி யிருந்தால் நான் புரிந்து கொண்டிருப்பேனே!" என்றார்.

மேலே இருந்த ராகவனுக்கு உலகமே சுற்றுவது போன்ற பிரமை ஏற்பட்டது. நெஞ்சும் மார்பும் படபட வென்று அடித்துக் கொண்டன. யார் அந்தக் கண்ணன்! கண்ணனின் காதலியாமே! அது யார்! ராகவனின் மூளை குழம்பிற்று.

சரோஜா, "உஸ்! இரைந்து பேசாதீர்கள். அவர் எகதேசயாவது விழித்துக் கொண்டிருக்கப் போகிறார்!" என்று கணவரை அடக்கினாள்.

"ஏன்! மனைவியைப் பற்றிக் கணவனுக்குத் தெரிந்திருக்காதா! அப்படியே அவருக்கு இது வரை தெரியாவிட்டால் இப்பொழுது நானே சொல்லி விடுகிறேன்!" என்றார் ராமநாதன்.


"உங்களுக்கு ஏன் அந்த வம்பு! நீங்கள் பேசாமல் இருந்தால் போதும்! அந்த மனுஷன் காதில் விழுந்து என்னவென்று கேட்கும் வரை நீங்கள் சொல்லிக் கொண்டே இருப்பீர்கள் போலிருக்கிறதே! மணிபன்னிரண்டு ஆகிவிட்டது. பேசாமல் படுத்துத் தூங்குங்கள்!" என்று கூறிச் சரோஜா அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தாள்.

மேலே படுத்துக் கொண்டிருந்த ராகவனுக்குப் பேயறைந்ததுபோல் ஆகிவிட்டது. "கண்ணனின் காதலி!" என்ற சொற்கள் அவன் காதைச் சுட்டுக் கருத்தையும் சுட்டன. அதே வார்த்தைகள் மறுபடியும், மறுபடியும் அவன் காதுகளில் ரீங்காரம் செய்தன.

"அந்த கண்ணன் என்பவன் யார்! ஏற்கெனவே ஒருவனின் காதலியாக இருந்தவளையா நான் கலியாணம் செய்து கொண்டேன்! அட கடவுளே! விவரம் யாரைக் கேட்பது! ராமநாதனைக் கேட்டு அவர் சொல்லியதைக் கேட்பதை விட ரசாபாசம் வேறு என்ன இருக்கிறது! ஐயோ! அந்த ராதையின் மேல் என் உயிரையே வைத்திருந்தேனே! அழகும், அறிவும் அன்பும் மட்டும் இருந்தால் போதுமா! பண்பு வேண்டாமா! மனசை மற்றொருவருக்குப் பறி கொடுத்தவள் என்று ருசுவான பிறகு அவள் முகத்தில் இனி விழிக்கலாமா! அவளை அடியோடு மறக்கத்தான் வேண்டும். ராதையை மறப்பதா! அது முடியுமா! ஏன் முடியாது! துரோகி! பசப்புக்காரி! படித்த பெண் என்று பெருமையோடிருந்தேனே! என்னால் இந்தப் பழியைக் கேட்கவே முடியவில்லையே!"

ராகவனின் இன்பக் கோட்டைகள் ஒரு நொடியில் தவிடு பொடியாயின. அவன் நினைத்து வந்த ஆசைக் கனவுகள் எங்கே! பாதிவழியில் கேட்கும் அபாண்டம் எங்கே! கொஞ்சம் கூட அவன் இதை எதிர் பார்க்கவில்லை. உடம் பெல்லாம் வியர்த்தது. அவனால் படுக்க முடியவில்லை. எழுந்து உட்கார்ந்து படுக்கையைச் சுட்டினான். சிந்தனைப் பின்னல் ஒரே சிக்கலாக இருந்தது. அதை அவனால் விடுவிக்கவே முடியவில்லை.

விழுப்புரம் ஸ்டேஷன் வந்துவிட்டது. ராகவனுக்கு அதற்குமேல் ரயிலில் இருக்க முடியவில்லை. மேலே இருந்து இறங்கினான். ஒரு கூலியைக் கூப்பிட்டுச் சாமான்களை யெல்லாம் எடுக்கச் செய்தான். ராகவன் கூடுமான வரை, நிதான



திருநெல்வேலி - வண்ணார்பேட்டை ஸ்ரீ ஆர். பிச்சுமணி அய்யரின் புதல்வரும், கல்கி உதவி ஆசிரியருமான ஸ்ரீ பி. எஸ். மணிக்கும் கோபாலசமுத்திரம் ஸ்ரீ என். மகாதேவய்யரின் புதல்வி சௌ. காமாட்சிக்கும் ஜூன் மாதம் 21ந் தேதி கோபால சமுத்திரத்தில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. விவாகத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். மணமக்களுக்குப் பத்திரிகாசிரியர்களிடமிருந்தும், எழுத்தாளர்களிடமிருந்தும், பிரமுகர்களிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. வாழ்க மணமக்கள்!

மாகவும் சத்தமில்லாமலும் அந்தக் காரியத்தைச் செய்தபோதிலும் சரோஜாவும் ராமநாதனும் எழுந்து விட்டார்கள்.

"என்ன ஸார்! விழுப்புரத்தில் ஏன் இறங்குகிறீர்கள்!" என்று ஆச்சரியத்துடன் ராமநாதன் கேட்டார்.

ஒரு கணம் ராகவன் விழித்தான். உடனேயே தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இங்கே என் சிநேகிதன் ஒருவன் இருக்கிறான். அவனையும் அழைத்துக் கொண்டு நாளை திருச்சி புறப் படலாம் என்று உத்தேசம்!" என்று கலப்பில்லாத பச்சைப் பொய்யைக் கூசாமல் அவரிடம் கூறினான்.

"தலை தீபாவளிக்கு மாப்பிள்ளைத் தோழன் வேண்டாமா?" என்றாள் சரோஜா மெதுவாக.

"ஓகோ! அதை மறந்தே போய் விட்டேன், ஸார்! ஆனந்தமாக உங்கள் புது மனைவியுடன் மூதன் மூதலில் இன்பமாகக் கழிக்கப்போகும் உங்கள் தலை தீபாவளிக்கு என் வாழ்த்துக்கள்!" என்றார் ராமநாதன் உற்சாகமாக.

ராகவன் சுரத்தேயில்லாமல் பேருக்குத் தலையை ஆட்டிவிட்டு ரயிலை விட்டு இறங்கினான். மனம் ஒரு நிலை கொள்ளாமல் தத்தளித்தது.

"சாமி! எந்த வண்டிக்குப் போகணுங்க!" என்று கேட்ட கூலியின் குரல் ராகவனை இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது.

"சென்னை போகும் வண்டிக்குப் போகணும்!" என்று ஈனஸ்வரத்தில் விடை பகர்ந்தான் ராகவன்.

ராகவன் திரும்பச் சென்னை வந்த பிறகு நடைப் பிணம் மாதிரி ஆகி விட்டான். எதிலும் உற்சாக மில்லாமல் உறங்கிக் கிடந்தான். அவன் வந்தவுடன் முதல் காரியமாகத் தன் அறையில் மேஜை மீது கண்ணாடிச் சட்டம் போட்டு வைத்திருக்கும் ராதையின் படத்தை உற்று நோக்கினான். ஒய்யாரப் பார்வையுடன் சிரித்த முகமாக நிற்கும் ராதை, "நான் உங்களை ஏமாற்றி விட்டேன், பார்த்தீர்களா! ஏற்கெனவே நான் கண்ணனின் காதலியாக இருந்தவளாக்கும்!" என்று ராகவனை நோக்கிச் சொல்வது போல் தோன்றியது. பெருமூச்சுடன் "வஞ்சகி!" என்று முணுமுணுத்துக் கொண்டே அந்தப் படத்தை எடுத்து உள்ளே வைத்தான்.

ராகவன் தீபாவளிக்கு வராததைக் கண்டு அவன் மாமனாரும் ராதையும் ரொம்பவும் கவலைப் பட்டு வரிந்து, வரிந்து கடிதம் எழுதி யிருந்தார்கள். தான் ஆவலோடு எதிர்பார்த்திருந்ததையும், ஏமாற்றமடைந்ததையும் பற்றி ராதை மூன்று பக்கம் எழுதி யிருந்தாள். ராகவன் ராதையின் கடிதத்தைப் படிக்காமலேயே சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டான். தான் ரயிலில் கேள்விப்பட்ட சமாசாரத்தை யெல்லாம் எழுதி விட்டு இனித் தன்னைக் கனவிலும் நினைக்க வேண்டாம் என்று கடுமையாக எழுதிய ராகவன் ஏதோ நினைத்துக்கொண்டு, அந்தக் கடிதத்தைத் தபாலில் சேர்க்க மனம் இல்லாமல் கிழித்துப் போட்டான். தனக்கு உடம்பு சரியில்லாததால் தீபாவளிக்கு வர முடியவில்லை என்று இரண்டே வரியில் ராதையின் தகப்பனுருக்கு மட்டும் கடிதம் எழுதினான்.

ராதையிடமிருந்து உடம்பு எப்படி யிருக்கிறதென்றும் ராகவனைப் பார்க்கத் தன் தகப்பனாரை அனுப்புவதாகவும் கடிதம் வந்தது. "அக்கறையைப் பார், அக்கறையை!" என்று முணுமுணுத்துக் கொண்டே, காரியாலய விஷயமாக வடக்கே பிரயாணம் செய்யப் போவதாகவும் மூன்று மாதம் கழித்துத்தான் வரப் போவதால் கடிதம் அதுவரை எழுத வேண்டா மென்றும் பச்சைப் பொய்யாகத் தன் மாமனருக்கு எழுதி விட்டு வழக்கம் போல் காரியாலய அலுவல்களைக் கவனித்துக் கொண்டு சந்நியாசி மாதிரி பற்றே இல்லாமல் காலத்தைக் கழித்து வந்தான்.

இரண்டு மாதங்கள் ஒரு விசேஷமின்றிக் கழிந்தன. இந்தச் சமயத்தில்தான் சென்னையில் காங்கிரஸ் கண்காட்சி வந்தது. ராகவனுக்கு உலகமே சூன்யமாக விருந்தது. மனமாறுதலுக்காக வேண்டித் தேனாம்பேட்டைக் காங்கிரஸ் பொருட் காட்சிக்குச் சென்றான்.

இளந் தம்பதிகள் ஜோடி ஜோடியாகச் சிரித்துப் பேசியவண்ணம் கண்காட்சியைப் பார்வையிடும் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்து ராகவன் பெருமூச்செறிந்தான்.

'ராதை மட்டும் தன்னுடன் கூட வந்திருந்தால்...!' ஒரு நிமிஷம்தான் இந்த எண்ணம் தோன்றியது. 'சீ! என்ன சபலம்! கலியாணத்துக்கு முன்பே மற்றொருவனிடம் உள்ளத்தைப்

பறி கொடுத்தவனை மனத்தினால் கூட ஸ்மரிப்பதா!' சிந்தனைச் சக்கரம் பலமாகச் சுழன்றது.

மன மாறுதலுக்காகப் பொருட் காட்சியைப் பார்க்க வந்தும் அவன் மனம் ராதையையே சுற்றிச் சுற்றி வட்ட மிட்டது. எதிலும் கவனம் செல்லவில்லை. கால்போனபடி எல்லாம் நடந்தான்.

மின்சார இலாகாவைப் பார்த்து விட்டுக் கலா மண்டபம் செல்லும் பொழுது அவனை யாரோ தொட்டார்கள். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த பொழுது, என்ன ஆச்சரியம்! ராதையின் சிநேகிதி சரோஜாவும் அவள் கணவன் ராமநாதனும் நின்று கொண்டிருந்தார்கள். ராகவனைத் தொட்டுக் கூப்பிட்டது ராமநாதன்தான்.

"என்ன, ஸார்! இப்படி இளைத்துப் போய் விட்டீர்கள்! உடம்பு ஏதேனும் சரியில்லையா? நீங்கள் இருக்குமிடம் தெரிய வில்லை என்று உங்கள் மாமனார் கவலைப்படுகிறார். தீபாவளிக்குக் கூட நீங்கள் ஊருக்குப் போக வில்லையாமே! எங்களுடன்தான் அவரும் வந்தார் என்று நான் சொன்னேன்: ஏன் நீங்கள் தீபாவளிக்குப் போக வில்லை!" என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினார் ராமநாதன்.

"ராதைக்குக்கூட நீங்கள் கடிதம் போடுவ தில்லையாமே, பாவம்! அவள் எவ்வளவு வேதனைப் பட்டு இளைத்துப் போய் விட்டாள், தெரியுமா!" என்று சரோஜா நேரிடையாகவே ராகவனைக் கேட்டாள்.

ராகவனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந் தது. ஒரு நிமிஷம் தன்னையே மறந்தான். "அவள் எதற்காக அப்படி என்னை நினைத்து உருக வேண் டும்! கண்ணன் ஊரில் இல்லையா!" என்று பட படக்கும் குரலில் கேட்டான்.

"யார் அது கண்ணன்!" என்று ஆச்சரியத் தோடு கேட்டாள் சரோஜா. அர்த்தமில்லாமல் ஏன் இந்தக் கோபம் என்று கேட்கும் பாவனை யாக ராகவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார் ராமநாதன்.

"என்ன, அம்மா! ஒன்றும் தெரியாதவர்களைப் போல் கேட்கிறீர்களே! அன்று ரயிலில் 'கண்ணனின் காதலி' என்று நீங்கள்தானே உங்கள் கணவரிடம் சொன்னீர்கள்! உங்கள் தோழியைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று பரம ரகசிய மாக நீங்கள் சொன்னதை நான் தெய்வாதீன மாகக் கேட்டுவிட்டேன். அதன் பிறகும் அவ ளுடன் வாழ எனக்குப் பைத்தியமா!" என்று ஆவேசம் வந்தவன் போல் ராகவன் சொன்னான்.

சரோஜாவும் ராமநாதனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். சரோஜா சிரிப்பை அடக்க முயன்றாள். அவளால் முடியவில்லை.

"ஓ! என்ன சிரிப்பு! சமய சந்தர்ப்பம் தெரி யாமல்!" என்று ராமநாதன் மனைவியைக் கடிந்து கொண்டார்.

"சீரழிந்தவளைக் கல்யாணம் செய்து கொண்ட தற்காகச் சிரிக்கிறீர்கள் போலிருக்கிறது!" என்றான் ராகவன் ஏகத்தாளமாக.

"இன்னொருதரம் என் ராதையை அந்தமாதிரி சொல்லாதீர்கள். அரைகுறையாக எங்கள் சம் பாஷணையைக் கேட்டு விட்டு அவள் பொன்னான வாழ்க்கையை வீணாக்க இருந்தீர்களே! நல்ல வேளை. இன்று நாம் சந்தித்தது! முழு விவரமும் சொல்கிறேன். அங்கு ஒரு ஓரமாய் உட்காரு வோம்!" என்று சரோஜா சொல்லிவிட்டு ஒரு மரத்தடியை நோக்கிப் போனாள். ராகவனும் ராமநாதனும் அம் மரத்தடியில் உட்கார்ந் தார்கள். சற்றுத் தள்ளிச் சரோஜா உட்கார்ந்து விவரம் சொல்ல ஆரம்பித்தாள்.

"ராதை ரொம்ப நன்ருக நடனம் ஆடுவாள். 'மதுரா நகரிலோ' என்ற பாட்டுக்கு ராதையாக நடித்து நல்ல பெயர் வாங்கிவிட்டாள். அதுமுதல் அவளுக்குக் 'கண்ணனின் காதலி' என்ற பெயர் நிலைத்து விட்டது.

"ஒவ்வொரு வருஷமும் ராதை கண்ணனின் காதலியாக நடித்துக் கரகோஷம் வாங்கு வது வழக்கமாகப் போய்விட்டது. யாரோ சர் நாடகப் பேர்வழிகள் ராதையைக் கலியாணம் செய்து கொள்ளப் பெண் கேட்க வந்தபொழுது அவளுக்கு நடனம் ஆடத் தெரியும் என்ற கார ணத்துக்காகக் குடும்பத்துக்கு லாயக்கில்லை என்று சொல்லி விட்டார்கள். அதனுல் ராதை யின் பெற்ருேர்களுக்குப் பெண்ணுக்குக் கலியா ணம் ஆகாதோ என்ற கவலை வந்துவிட்டது. இனி பெண் பார்க்க வருபவர்களிடம் ராதைக்கு நடனம் ஆடத் தெரியும் என்றே சொல்லக் கூடாது என்று கட்டுப்பாடு செய்து கொண் டார்கள். அன்றைக்கு ரயிலில் ராதையைப் பற்றி நான் இவரிடம் 'கண்ணனின் காதலி' என்று பழைய வழக்கப்படியே இவருக்கு நினைவு வர வேண்டும் என்பதற்காகக் குறிப்பிட்டேன். அதுவும் இவர் கண்ணனின் காதலியாக ராதை நடித்துப் பார்த்திருக்கிறபடியால் சொன்னேன். அந்தக் கண்ணனுக நடித்தது யார், தெரியுமா!" என்று தன் கணவரைப் பார்த்தாள் சரோஜா.

"ஏன்! நான் சொல்லட்டுமா! ஸார், என் அருமை மனைவிதான் கண்ணனுக நடித்தது. நீங்கள் இப்படி விபரீதமாக அர்த்தம் செய்து கொண்டு உங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளப் பார்த்தீர்களே! போனது போகட்டும். இன்றிரவே திருச்சி மெயிலில் ஏறி நீங்கள் உமது மனைவியை அழைத்துக் கொண்டு வந்து சேருங்கள்!" என்ருர் ராமநாதன்.

ராகவன் அப்படியே ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்து விட்டான். அவசரப்பட்டு ராதை யின் மீது வீண் அபவாதமாகச் சந்தேகப்பட்ட தற்குத் தன்னையே நொந்து கொண்டான்.

"ஏன், ஸார்! பேசவே மாட்டேன் என்கிறீர் களே! நாங்கள் விஷயத்தைச் சொல்லாமல் பூடக மாகப் பேசியது எவ்வளவு விபரீதத்தை உண் டாக்கி விட்டது. நீங்கள் இன்றிரவே கிளம்பி விடுங்கள், ஸார்!" என்ருர் மீண்டும் ராமநாதன்.

"வரும் பொழுது ராதையைக் கூட்டிக் கொண்டு வந்து விடுங்கள்!" என்ருள் சரோஜா.

"நான் மடத்தனமாகச் சந்தேகப் பட்டதற்கு வருந்துகிறேன். இனி வீடு பார்த்து விட்டுத்தான் அவளை அழைத்து வரவேண்டும்!" என்ருன் ராகவன் சஞ்சலத்தில்.

"வீட்டைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண் டாம். என் தங்கையின் வீட்டிலேயே ஒரு இடம் தரச் சொல்கிறேன். என் வாயாடித் தனத் தினுல் வந்த விபரீதத்துக்கு இதுகூட நான் செய்ய மாட்டேனு! உடனே, இன்றிரவே அவளை அழைத்து வரப் போங்கள்!" என்ருள் சரோஜா.

அன்றிரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ராகவனைச் சுமந்து கொண்டு சென்றது. தன் மனைவி ராதை யைப் பார்க்க வேண்டும் என்ற அவனது ஆவல் வண்டியின் வேகத்தைவிடப் பன்மடங்கு வேகமாகச் சென்றது.



இன்ப நினைவு

வே. ரங்கராஜன்

"மச்சான், நீங்க உட்காருங்க. இதோ பாருங்க. உங்களுக்காகவே மாவிலே விளாங்காயத்தினை புது வெண்ணெயைப் போட்டுப் பெசஞ்சிருக்கேன். முருக்கிளங் கீரையையும் கோது நீக்கிப் போட்டிருக்கேன். மச்சான், கொஞ்சம் காலாறக் குந்தி, சாப்பிட்டுத்தான் பாருங்களேன்! அப்புறம், 'குட்டி காசாம்பூ கைப்பட்டா எதுவும் தேவாமிர்தம்தான்!' என்று சொல்லுவீங்க" என்று கன்னம் குழைய, சொல்லைத் தேனில் குழைத்து அன்பொழுகப் பேசினாள், காசாம்பூ.

அவள் பேசிய பேச்சிலும் கண்கள் வீசிய வீச்சிலும் சொக்கி நின்று விட்டான், சாமியம்பலம். அவள் தயாரித்துக் கொண்டிருந்த கேப்பைக் கீரை அடையின் மணம் ஒன்றும் செய்யவில்லை. காசாம்பூதான் வண்டை மலர் ஈர்த்து வீழ்த்திக் கொள்வது போல் செய்து விட்டாளே! அவன் அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். தையொரு திங்களில் தாலி கட்டித் தனிக் குடித்தனம் ஆரம்பித்த நாளாக இந்தப் பிரமை சாமியம்பலத்துக்குச் சகஜமாய் விட்டது. அவன் மாமன் மகள் காசாம்பூ ஒவ்வொரு நாளும் ஒரு தனி யழகுடன் அவன் கண்களுக்குப் புலப்பட்டாள்.

காசாம்பூ இயற்கையிலேயே அழகி. அவளது மாந்துளிர் மேனியிலே இளமை துள்ளும். அவள் மூக்கில் இருந்த அந்தக் காசிக் கடை ஒற்றை மூக்குத்தி கூடத் தனி யழகை யளித்தது. அவள் தன் காதில் அணிந்திருந்தது பழங்காலச் சிவப்புக் கம்மல்; அந்தக் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து! அந்தக் கம்மல் கூட அவள் அழகைப் பறை சாற்றிக்கொண்டு மௌன மென்னகை செய்தது. அவள் தன் கூந்தலை அப்படி அலட்சியமாக அள்ளிச் செருகியிருந்தது கூட ஒரு 'நவமான தலை யலங்காரத்தைப் போல் இருந்தது.

உட்கார்ந்து தன் முகத்தையே திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்த கணவன் முன்னால் தையல் இலையைப் போட்டுக் கேப்பைக் கீரை அடையை எடுத்து வைத்தாள், காசாம்பூ. அப்போது அவள் கைவளைகள் குலுங்கின. சாமியம்பலத்தின் மேனி முழுதும் புளகாங்கிதம் பூரித்து எழுந்தது. அவன் சுவைத்துச் சுவைத்து அடையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். காசாம்பூ அதைப் பார்த்துப் புன்முறுவல் பூத்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

அவளுக்குத் தன் கணவன்மீது அவ்வளவு அன்பு. தன் பரந்து விரிந்த மார்பின்மீது

ஒரு நாலு முழச் சேலம் துவாலையை அலட்சியமாகப் போட்டுக் கொண்டிருந்தான், அவன். அதுவே ஒரு தனியழகைக் கொடுத்தது அவனுக்கு. தலைச்சால் பிடித்துத் தழும் பேறிய அவன் கைககள் உருண்டு திரண்டிருந்தன. மாசற்ற பளிங்கின் வெள்ளிடை போல் ஆபாசக் குப்பைக ளற்ற அவன் தூய உள்ளத்தை முகம் பிரதிபலித்தது. ஆகவே காசாம்பூவின் கண்களில் அவன் மன்மதனுகத் தோன்றியதில் சிறிதும் வியப்பொன்றுமில்லை. புத்தனேரி கிராமத்தில் காசாம்பூவும், சாமியம்பலமும் பலருடைய கண்களைக் கவரும் பொருத்தமான ஜோடிகளாக அமைந்து விட்டனர்.

அவன் மனத்துக்கும் குணத்துக்கும் ஏற்றவாறு காசாம்பூ மனைவியாகக் கிடைத்து விட்டாள். அது நாற்றங்கால் களத்து மேட்டு வேம்பின் கீழ் பிரதிஷ்டையாகியுள்ள மதுரை வீரனின் கடாட்சம் என்று சாமியம்பலம் நினைத்துக் கொண்டிருந்தான்.

ஆனால் காசாம்பூ என்னவோ தெய்வத்தின் மேல் முழுப் பொறுப்பையும் போட்டுவிட விரும்பவில்லை. சாமியம்பலம் தன் கணவனுக வாய்த்ததற்குத் தன்னுடைய தந்தை சுடலையம்பலக் காரன்தான் காரணம் என்பது அவளது திடமான நம்பிக்கை. அவன் மட்டும் பிடிவாதமாக இல்லாவிட்டால் காசாம்பூ இப்போது என்ன அவஸ்தையில் கிடக்க வேண்டுமோ! அதை நினைத்த பொழுதே அவள் உடல் சிலிர்த்தது! தன் கழுத்தில் எப்படியாவது தாலி கட்டிவிடுவது என்று ஒற்றைக் காலில் நின்ற தன் தாய் மாமன் பிச்சையம்பலக்காரன்மீது அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

* * *

சுடலையம்பலக்காரனுக்கு உடன் பிறந்த சகோதரிகள் நான்கு பேர் இருந்தார்கள். ஒருத்தி மூத்தவள். மற்ற மூன்று பேரும் கோர் இளையவர்கள். இவர்கள் நால்வரும் உள்ளூரிலேயே வாழ்ந்து வந்தார்கள். அவளுடைய மூத்த சகோதரிக்குப் பிச்சையம்பலக்காரன் ஒரே மகன். அந்தப் புத்தனேரி கிராமத்தில் இவன் குடும்பம் சற்று இயல்பாகத்தான் இருந்தது. ஆனால் இவ்வளமை பிச்சையம்பலக்காரனின் செயல் வன்மையினாலோ அல்லது அவன் தந்தையின் உழைப்பினாலோ உண்டாகவில்லை. அவனுடைய பாட்டன் தேடி வைத்துப் போன சொத்துத்தான் பேரன் போகத்துக்குக் காரணமா யிருந்தது.

புத்தனேரி கிராமத்திலே மைனர் சங்கிலியும், மல்லியரும்பு மீசையும், சிலம்பக் கோலும் கையுமாகத் திரியும் பிச்சையம்பலத்தை எல்லோரும் அறிவார்கள். தன் மகன் இப்படி இருப்பதில் தாய்க்காரிக்கு ஒரு தனிப் பெருமை.

தன் தம்பி மகள் காசாம்பூவை இவனுக்குக் கட்டிப் போட்டுவிட வேண்டும் என்பது இவள் எண்ணம்.

சுடலையம்பலங்கூட அப்போதெல்லாம் அதை ஆமோதித்துக் கொண்டுதான் இருந்தான். ஆனால் தன் தமக்கையின் செல்லப் பிள்ளை வளர்ந்து விளைவித்த 'புகழ்' அவன் செவியுள் துளைத்தது. அவன் மெல்ல மெல்லத் தன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டான். தன் இளைய சகோதரியின் மகன் சாமியம்பலத்தின் மீதே அவன் விருப்பம் திரும்பியது.

இந்தச் சகோதரி என்னவோ கஷ்ட ஜீவனம் செய்து வந்தாள். இவள் மைந்தன் சாமியம்பலத்துக்கு ஐந்து வயது நிரம்பு முன்னரே அவன் தந்தை அவனைக் கை விட்டுச் சென்று விட்டான். களத்தில் இரவுக் காவல் படுத்திருந்த அவனை நல்ல பாம்பு தீண்டி விட்டது. அதன் பிறகு தன் தகப்பன் கைவிட்ட மண் வெட்டியைக் கைப்பிடித்துச் சிறு வயதிலேயே பண்ணை வேலையில் ஈடுபட்டான் சாமியம்பலம். அவனுடைய தாயும் விவசாய வேலைகளில் ஈடுபட்டாள். குடும்பம் ஏழைமை நிலையில் இருந்த போதிலும் உழைப்பில் இன்பம் கண்டு அவர்கள் அமைதியாகக் காலந் தள்ளி வந்தனர்.



நாட்கள் ஓடின. காசாம்பூ பருவம் அடைந்தாள். ஊராருக்கு அதற்கு மேல் சுடலையம்பலத்தால் சமாதானம் சொல்ல முடியவில்லை. அவனுடைய மூத்த சகோதரி 'பிடி பரியத் தாம்பூலத்தை!' என்று வந்து விட்டாள். பிச்சையம்பலம் வேறு மாமாவின் வீட்டையும் காசாம்பூவையும் வளைய வந்தான். மாப்பிள்ளை ஆகிவிட்ட இப்போது அவன் கழுத்தில் டாலர் கோத்த மைனர் சங்கிலி பளபளத்தது. கை விரல்களில் மோதிரங்கள், காதில் வைரக் கடுக்கன், இவைகளுடன் அவன் வளைய வந்தான்.

சுடலையம்பலம் அவன் பேச்சுக் கெல்லாம் தலையசைத்தானே தவிர, அவன் மனத்துக்குள், "இவனுக்கா என் ஒரே பெண் காசாம்பூவைக் கொடுப்பேன்? நான் முழுதும் சேற்றிலும் சகதியிலும் களத்திலுமாக உழைத்தாலும் சாமியம்பலத்தின் குணம் இந்தப் பயலுக்கு வருமா?" என்று எண்ணினான்.

மார்கழி மாதம் பிறந்தவுடனேயே காசாம்பூவின் கல்யாணப் பேச்சுக்கள் மும்முரமாய் ஆரம்பமாகி விட்டன. அவனுடைய பெரிய அத்தை, தினம் ஒரு முறை தன் அண்ணன் வீட்டுக்கு வந்து பேசிவிட்டுப் போய்க் கொண்டிருந்தாள். பேச்சோடு பேச்சாக, "வருகிற தைக்குள் முடித்துவிட வேண்டும்!" என்று சொல்லி வந்தாள். ஆகவே சுடலையம்பலத்துக்கு என்ன செய்வது என்று புலப்படவில்லை. அவன் இளைய சகோதரியோ, சாமியம்பலமோ அவன் வீட்டுப் பக்கம் வருவதில்லை; கல்யாணப் பேச்சையும் எடுப்பதில்லை.

மார்கழி மாதக் கடைசியிலே நிச்சய தாம்பூலத்துக்கு நாள் வைக்கத் தமக்கையும் அவள் புருஷனும் நாட்டாண்மைக் காரரை உடன் அழைத்துக் கொண்டு அவன் வீடேறி வந்து விட்டார்கள். சுடலையால் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. "இந்தாங்க, நாட்டாண்மைக்காரரே, இது எனக்கு ஒரு பெண். அது உங்களுக்குத் தெரியாததல்ல. இது நல்லா வாழணும், கண்ணாலே பார்க்கணும் என்கிறதுதான் என் ஆசை. இப்போ இரண்டு பேர் முறை மாப்பிள்ளைகள் இருக்காங்க. ஒருத்தருக்குக் கொடுத்தால் ஒருத்தருக்குக் கஷ்டம். ஆகையினால் என் மனசுக்குப் பட்டதைச் சொல்லி விடுகிறேன். என் மயிலைக் காளையை இந்தப் பொங்கலுக்கு ஜல்லிக் கட்டுக்கு விட்டுடறேனுங்க. என் மச்சானுவ இரண்டு பேரிலே எவன் அதன் கொம்பிலே கட்டியிருக்கிற மஞ்சள் கயிற்றை அவிழ்த்து வந்து கொடுக்கிறானோ அவனுக்கே காசாம்பூவை முடிச்சுப் போட்டுடலாம்!" என முடிவு கட்டினான்.

சுடலையம்பலம் இப்படிச் சொல்லுவானென்று, யாருமே எதிர்பார்க்கவில்லை. "ரொம்ப சரி, மாமா. அப்படியே செய்யுங்க!" என்று தன் அரும்பு மீசையைத் தடவிய வண்ணம் ஆமோதித்து விட்டான் பிச்சையம்பலம். அதன் பிறகு நாட்டாண்மைக்காரரும் மற்றவர்களும் ஒன்றுமே சொல்லக்கூட வில்லை.

சுடலையம்பலத்துக்குக்கூட இந்த யோசனை தெய்வாதீனமாகத்தான் உதித்தது என்று சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் தனக்கு ஆண் பிள்ளை இல்லையே என்று சுடலையம்பலம் ஏங்கியது உண்டு. அவன் கைப்புல் கொடுத்து வளர்த்த பசுவுக்குத் தலைச்சன் காளைக் கன்று பிறந்தது முதல் அவன் மனம் அக்கன்றின் மேல் லயித்தது. அப்பாவைப் போலவே காசாம்பூவுக்கும் அதன் மேல் கவனம் விழுந்தது. கொஞ்ச நாட்களில் அவ்விளங் கன்று அவளது விளையாட்டுத் தோழனாகவே ஆகிவிட்டது. அவள் தின்பதை எல்லாம் அதற்குக் கொடுத்தாள். கைப்புல் பிடுங்கிப் போட்டு, வடித்த கஞ்சியில் உப்பிட்டுக் காட்டி அதை அன்போடு வளர்த்து வந்தாள்.



இப்படிச் செல்லமாக வளர்த்த அந்தக் காளையை ஏரில் கட்டவோ, ஜோடி சேர்த்து வண்டியில் பூட்டவோ சுடலையம்பலம் விரும்பவில்லை. அதை ஏழுமலையானுக்கென்று பிரார்த்தித்து நீர் தெளித்து விட்டுவிட எண்ணியிருந்தான்.

தன் மனத்துக்குள்ளேயே தெய்வக் காளையென்று அந்த

மயிலையைத் தீர்மானித்த பிறகு, தன் ஒரே மகளின் கல்யாணப் பிரச்னை இக்கட்டாகத் தன் முன் நின்றவுடனே, தெய்வாதீனமான முடிவு உண்டாகட்டும் என்றுதான் சுடலையம்பலம் இந்த ஜல்லிக்கட்டு யோசனையை வெளியிட்டான்.

* * *

சுடலையம்பலக்காரனின் வீட்டில் நடந்த இந்தக் கல்யாணப் பேச்சு வார்த்தை புத்தனேரி முழுதும் பரவி விட்டது. எப்போதும் போலவே பிச்சையம்பலம் சிலம்பக் கோலைச் சுழற்றிக் கொண்டு தான் ஜல்லிக் கட்டில் ஜெயித்து விட்டதாகவே எண்ணி அட்டகாசம் செய்து வந்தான்.

ஆனால் இதைக் கேட்ட சாமியம்பலம் கவலையில் ஆழ்ந்து விட்டான். ஏர் உழுவதிலும் நாற்று நடுவதிலும் விவசாய வேலைகளைக் கவனிப்பதிலுமாக நாட்களைப் போக்கி விட்ட அவனுக்கு இந்த வீரக் களியாட்டம் மலையைப் புரட்டுவது போன்ற பிரமையை உண்டு பண்ணியது.

இந்த இக்கட்டான நிலைமையில் சாமியம்பலத்துக்குத் தன் தந்தையின் நினைவு வந்தது. அவன் தந்தை இருந்தவரையில் வருஷா வருஷம் தைமாத அறுவடைக்கு முன்னால் களத்து மேட்டிலே வீரனுக்குப் பூசை போடுவது வழக்கம். அவன் நட்டுப் போன கல், விபூதி குங்குமம் மங்க இன்னும் இருந்து வந்தது. வரும் மாட்டுப் பொங்கலன்று ஜல்லிக் கட்டுக்குச் செல்வதற்கு முன்னே வீரன் கல்லைப் புதுப்பித்துப் பூசை போட்டு விடுவது என்று தீர்மானித்து விட்டான், அவன். தன் கைப்பட முதல் பூசை ஆரம்பிக்கும்போது களத்து மேட்டு வீரனுக்கு ஒரு நிரந்தரமான இடம் அமைத்துச் சின்னம் நாட்டிவிடுவது என்றும் விரும்பினான்.

சாமியம்பலத்தின் மனத்திலே சிக்கலான பிரச்னைகள் எழும்போதெல்லாம் அவன் தன் ஆத்தாளிடம் சென்று யோசனை கேட்பது வழக்கம். அவள் வாக்கிலே தன் இறந்த தந்தையின் தெய்வீகக் குரலை கேட்டான், சாமியம்பலம். இப்போது அவளும் இந்த யோசனையை ஆமோதித்தாள்.

அவள் தன் மகனுக்குக் காரிய சாத்தியமான ஒரு யோசனையையும் சொன்னாள்: "வீரனுக்குப் புதுக்கல் நட்டு முதல் பூசை பால் பூசையாகப் போட்டு விடுவோம். நீ புதிதாக நடும் கல்லுக்கு மூனு மூழம் பின்னாலே ஒரு வேம்பிளங் கன்று நட்டு வேலி கட்டி விடு. ஜல்லிக் கட்டிலே மஞ்சட் கயிறு உன் கையிலே சிக்கி நீ காசாம்பூவின் கை பிடித்து நம்ம குடிசையிலே குத்து விளக்கேற்றி வைத்து விட்டால் வீரனுக்கு அடுத்த பூசை அமோகமாகச் செய்யலாம்!"

தையும் பிறந்தது. அன்று மாட்டுப் பொங்கல். புத்தனேரி கிராமமே அவ்வூர் ஈசுவரன் கோவிலுக்கு முன்னாலே இருந்த

திடலில் கூடி யிருந்தது. நாட்டாண்மைக் காரர்தான் முக்கிய புருஷராக இருந்தார்.

புத்தம் புது சிவப்புச் சல்லடமும் வலது கைப் புஜத்திலே தங்கத் தாயத்துமாகப் பிச்சையம்பலம் அக் கூட்டத்தின் நடுவிலே இங்குமங்குமாகப் போய்க் கொண்டு ஆர்ப் பாட்டம் செய்தான். தாரை தப்பட்டச் சப்தத்துடன் ஜனக் கூச்சலும் சேர்ந்து விடவே சுடலையம்பலத்தின் மயிலைக்காளை மிரண்டுபோய்த் தறிக்குக் கட்டுப்படாமல் முண்டிக் கொண்டிருந்தது. அப்போது ஈசுவரன் கோவில் பூஜை நடந்து மணி யோசை கேட்டது. உடனே நாட்டாண்மைக் காரர் ஒரு சைகை செய்தார். ஜல்லிக் கட்டு ஆரம்பமாயிற்று.

கொம்பில் சுற்றப்பட்டிருந்த மஞ்சள் கயிற்றுடன் சுடலையின் மயிலைக் காளை மதர்த்து நின்றது. அதன் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. வால் சூலாயு தத்தைப் போல் நிமிர்ந்து குத்திட்டு நின்றது.

முறை மாப்பிள்ளைகள் இரண்டு பேரும் களத்துக்குள் நுழைந்து விட்டனர்.

சாமியம்பலம் காளையை விறைக்கப் பார்த் துக் கொண்டு பிரமித்து நின்று விட்டான். ஜரூராகக் காரியத்தை முடித்து ஜனங்களின் ஆரவாரத்தைப் பெற வேண்டுமென்று பிச்சையம்பலம் எடுத்த எடுப்பில் காளையை நெருங்கி விட்டான். அவன் சிவப்புச் சல்ல டத்தையும் ரௌடிக் கோலத்தையும் கண்டு மிரண்ட காளை கொம்பைக் குவித்து முட்டித் தள்ள முன்னேறியது.

ஜனங்கள் கண் இமைத்து மூடுவதற்குள் வலது கால் துடையில் கொம்பு குத்திய படு காயத்துடன் பிச்சையம்பலம் மயங்கித் தரை யில் சுருண்டு விழுந்தான்.

ஒரு கொம்பில் மஞ்சள் கயிறும் மறு கொம்பில் இரத்தக் கறையுமாக நின்றது காளை. கூட்டத்தில் ஒரே மௌனம் நிலவியது. மயிலைக் காளை சற்று விலக விட்டுப் படு காயமுற்ற பிச்சையம்பலத்தைச் சிலர் வந்து தூக்கிச் சென்றனர்.

கூட்டத்தில் இருந்தவர்கள் கண்கள் எல் லாம் சாமியம்பலக்காரன் பக்கம் திரும்பின. அவன் தன் தலை முண்டாசை அவிழ்த்து இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டான். காளையின் வலப்புறத்திலேயே மெல்லமெல்ல நெருங்கினான். கப்பென்று பாய்ந்து இடது கையை அதன் கழுத்தில் வளைய விட்டு இடுக் கிக் கொண்டு அதன் அடவே சுற்றிச் சுற்றி வந்தான். தன் வலது கையால் கொம்பில் சுற்றியிருந்த மஞ்சள் கயிற்றை அவிழ்த்ததும் காளையை விட்டு மெல்ல அகல முயன்றான். அதேபோல அவன் பிடியினின்றும் விடுபட முயன்ற காளையின் ஆர்ப்பாட்டத்திலே கள மெங்கும் புழுதி புரண்டது.

தலைக் குடுமி அவிழ்ந்து சிகை மார்பு மீதும் தோள் மீதும் புரள, வலது கையில் மஞ்சட் கயிற்றுடன் சாமியம்பலம் நாட்டாண்மைக் காரரை நெருங்கினான். அப்போது கூட் டத்தை முண்டியடித்துக்கொண்டு முன்னே றிய சுடலையம்பலம் தன் மருமகனைத் தாவிப் பிடித்துக் கொண்டான். அவனும் மயக்கமுற் றுத் தன் மாமன் தோள் மீது சாய்ந்தான்.

இப்போது நாற்பது வருஷங்களுக்குப் பிறகு, பழைய சம்பவங்களை எல்லாம் சாமி யம்பலம் நினைத்துக் கொண்டான். இவ்வாறு தனக்குக் கல்யாணம் ஆனபிறகு, காசாம் பூவும் தானும் சேர்ந்து நடத்திய தனிக் குடித் தனம், அவன் கைப்படக் கட்டுக் கொடுத்த கேப்பைக் கீரை அடை, அவனும் அவளும் அப்போது சல்லாபித்த பேச்சுக்கள் எல்லாம் அவன் நினைவுக்கு வந்தன.

இப்போது, அவனுடைய மரணப் படுக்கை யிலே, சாந்தி யளிக்கக் கூடிய நினைவு வேறு எதுவும் அவனுக்கு உண்டாகவில்லை. அவ னுக்கு வாழ்வளித்த வீரன் - கல் - வேம்பு சாவையும் உண்டாக்கும் என்று அவன் எதிர் பார்த்தானா என்ன?

அந்தத் திருமணத் - தை மாதத்திலே தன் கைப்பட நட்ட அவ்வீரன் கல் வேம்பின் மீது அவன் தன் உயிரையே வைத்திருந்தான். அவனுக்குக் கல்யாணம் ஆன பிறகு அவனும் அவன் மனைவி காசாம்பூவுமாகக் குடம் குட மாய் வாய்க்கால் நீரை ஊற்றி அவ் வேம் பைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தார்கள். அது விடும் ஒவ்வொரு கொப்பும் துளிரும் அவர்களுக்கு உற்சாகத்தை விளைவித்தது.

காசாம்பூ கொண்டு வரும் காலைக் கூழை இவ்வேம்பின் கீழே, நிழலில் அமர்ந்து குடிப் பதில் ஒரு தனி புத்துணர்வு கண்டான் சாமி யம்பலம். இப்படியே நாற்பது வருஷங்கள் ஓடி மறைந்தன.

ஆனால் எங்கிருந்தோ வந்தது அந்தப் புயல் காற்று. சோழ மண்டலத்தையே சூன்ய மாக்கிய அச்சூறுவளியிலே சாமியம்பலம் களத்து மேட்டிலே சிக்கிக் கொண்டான்.

முதல் நாள் மாலை தன் ஏர்க் காளைகள் இரண்டையும் களத்து மேட்டு வேம்பின் கீழே கட்டி யிருந்தான். அன்று தொடங்கிய காற்று மழையிலே அவை குளிரால் விறைத் துப் போகாமல் இருக்க வேண்டுமே என்று அவைகளை அவிழ்த்து ஓட்டிச் செல்ல, காற் றையும் மழையையும் பாராது, சாமியம்பலம் களத்து மேட்டை யடைந்து மாடுகளை அவிழ்த்த பொழுதுதான் வேம்பு வேருடன் பெயர்ந்து விழுந்தது. மாடுகள் இரண்டும் கைப்பிடிக் கயிற்றை அறுத்துக் கொண்டு துள்ளியோடித் தப்பின. சாமியம்பலத்தின் உயிர் தப்பிய போதிலும், அவன் வகையாக மரக் கிளைகளினூடே சிக்கிக் கொண்டான். அவனால் எழுந்து வரக் கூடவில்லை. காற்றும் மழையும் நிற்கவுமில்லை. தஞ்சாவூர் சர்க்கார் ஆஸ்பத்திரி படுக்கையில் படுத்துக் கொண்டு மரண அவஸ்தைப்பட்ட அப்பொழுதுதான் சாமியம்பலம் தன் வாழ்வின் வசந்த காலத் தைப் பற்றி எண்ணமிட்டான். இந்த இன்ப நினைவோடு சாவை நெருங்கிக் கொண்டிருந்த போதிலும் அந்த வீரன் கல் வேம்பின் மீது இருந்தஅபிமானம் அவனைவிட்டு நீங்கவில்லை.

கடல்முத்து

சீதா



2. நல்ல காரியம்

அப்பொழுது அந்தத் தெரு வழியாகப்போய்க் கொண்டிருந்த முருகன், கடையில் என்ன கூட்டம் என்று பார்க்க வந்தான். அங்கே அவனுடைய நண்பன் கந்தன் மூர்ச்சையுற்றுக் கிடப்பதைப்பார்த்தான். "ஆ! கந்தா!" என்று அலறி விட்டான். அவன் அலறிய சத்தத்தைக் கேட்டவுடனேயே கந்தனைச் சூழ்ந்திருந்தவர்களிடையே ஓர் தயக்கம் ஏற்பட்டது! அத்துடன் முருகனுக்கும்வழி வகுத்துக் கொடுத்தார்கள். ஒரு கஷ்டமுமின்றிக் கந்தனை நெருங்கி விட்டான்.

முருகன் போட்ட சத்தத்தில், கந்தனுக்குச் சுய நினைவு வந்து விட்டது. "யாரோ என்னைக் கூப்பிட்டார்களே, யார் அது?" என்று கேட்டுக்கொண்டே கண்களை விழித்துப் பார்த்தான்.

முருகன், "நான்தானப்பா! உன்னைக் கூப்பிட்டேன்! என்ன, இங்கே வந்து விழுந்து விட்டாய்?" என்று கேட்டான்.

"முருகா! நான் இந்த முத்தைத் திருடிக் கொண்டு வந்ததாகச் சொல்லுகிறார்கள். என்ன அபாண்டமான பழி பார்த்தாயா?" என்றான் கந்தன்.

"அலை மோதும் கடலிலே, உயிரைத் துரும்பாக மதித்துப் போய்க் கொண்டு வந்தால், இவர்கள் இப்படிப் பேசுகிறார்களா? உழைப்பின் பெருமை தெரியாத இவர்கள், இப்படியும் பேசுவார்கள், இதை விடக் கேவலமாகவும் பேசுவார்கள்! இவர்கள் கூட்டுறவே நமக்கு வேண்டாம். நீ எழுந்திருந்து வா, போவோம்" என்றான்.

பிறகு இருவரும் எழுந்திருந்து வெளியே சென்றனர். கூட்டமும் கலைந்தது. கடைக்காரர் "அடாடா! ஒரு நல்ல முத்தைப் பறி கொடுத்து விட்டோமே! ரொம்பவும் குறைந்த விலைக்குக் கந்தனிடமிருந்து வாங்கியிருக்கலாம்! அதை நல்ல விலைக்கு விற்றுக் கொள்ளை லாபங்கூட அடைந்திருக்கலாம்!" என்று வருத்தப்பட்டார்.

ஆனால் வெளியில் சென்ற கந்தனின் மனசு நிம்மதியாகவே இல்லை. இவ்வளவு பெரிய பண மூட்டை கட்டிக் கொண்டு போக வேண்டும் என்று வந்துவிட்டு, இப்படிப் போக நேர்ந்ததே என்று வருத்தப்பட்டுக் கொண்டே நடந்தான். "என்ன கந்தா, ஒன்றுமே பேசாமல் நடந்து வருகிறாய்! ஏதோ கோட்டையைப் பிடிக்க யோசனை பண்ணுகிறாய் போல் தோன்றுகிறது!" என்றான் முருகன்.

"அதை விடப் பெரிய காரியம். இந்த முத்தை எப்படியாவது விற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான். இது நல்ல விலைக்குப் போகும்; சந்தோஷமாக வாழலாம் என்று என்னவெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தேன்......" என்று ஏதோ சொல்லிக் கொண்டே வந்தான்.

அதற்குள் முருகன், "ஒரு கடையில் நுழைந்து திருட்டுப் பட்டம் கட்டிக் கொண்டது போதாதா! இன்னொரு தடவை நுழைந்து கெட்ட பெயர் வாங்கிக்கொள்ள வேண்டுமோ?" என்று கோபமாகக் கேட்டான்.

கந்தனுடைய காதுகளில் அவன் கூறிய மொழிகள் எதுவும் நுழையவில்லை. இன்

னொரு கடையில் நுழைந்து விற்க வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறி விட்டான்.

அடுத்த கடையில் நுழைந்தார்கள். அந்த முத்தை நன்றாகப் பரிசோதனை செய்து பார்த்தார் கடைக்காரர். பிறகு கந்தனையும் முருகனையும் ஏற இறங்கப் பார்த்தார். "என்ன விலை சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"கடலிலே கிடைத்த முத்துங்க. இதன் மதிப்பெல்லாம் எனக்கு என்னங்க தெரியும்?" என்றான் கந்தன்.

"இந்தாப்பா! இதன் மதிப்பு பத்து ரூபாய் தான்! வேண்டுமானால் வாங்கிக் கொள்" என்றார் கடைக்காரர்.

"பத்து ரூபாயா? பத்து ரூபாயா!" என்று கூறினான் கந்தன் மனமுடைந்து. ஆமாம்; அவன் எதிர்பார்க்கும் இரண்டாயிரம் ரூபாய் எங்கே? பத்து ரூபாய் எங்கே? பிரமை பிடித்தவன்போல் அந்தக்கடையை விட்டு இறங்கி நடந்தான்.

முருகன், "பத்து ரூபாய் கொடுக்கிறேன்னு கடைக்காரர் சொன்னாரே, கொடுத்திருக்கக் கூடாது! உனக்கு இதைவிட யாரு கொடுக்கிறாங்களாம்! வெறும் பைத்தியக்காரனடா நீ!" என்று கந்தனைக் கோபித்துக் கொண்டான்.

மனசு மிகவும் சோர்ந்து கந்தன் தன் இருப்பிடத்துக்குத் திரும்பினான். அவன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வள்ளி, "முத்து நல்ல விலைக்கு விற்றுப் போயிற்றா?" என்று கேட்டாள்.

"இல்லையே, வள்ளி! அந்த முத்தைக் கொண்டு போனால் எங்கேயாகிலும் திருடிக் கொண்டு வந்தாயா என்று கேட்கிறாங்க. இல்லைன்னா என்னையும் என் நடை உடை பாவனைகளையும் பார்த்துவிட்டு ரொம்பக் குறைச்ச விலைக்குக் கேட்கிறாங்க!" என்று மிகுந்த வருத்தத்தோடு சொன்னான்.

"ஆமாம், அப்படித்தான் அவர்கள் சொல்லுவார்கள். நீங்கள் எப்பொழுதும் போல் கடலில் கட்டுமரத்தைப் பாய்ச்சிச் சென்று வாருங்கள். இந்த முத்து வந்ததிலிருந்து உங்கள் மனசு நிம்மதி யிழந்து தவிக்கிறது! அந்த முத்தைக் கண்டாலே எனக்குப் பிடிக்க வில்லை. அந்த முத்து விற்று நிறையப் பணம் வந்தால் கூட மனசுக்கு உழைத்துச் சம்பாதித்துப் பெற்ற பணத்தினால் அடையும் சந்தோஷத்துக்கு ஈடாகாது!" என்றாள்.

இதைக் கேட்டுக் கந்தன் அளவிறந்த கோபங் கொள்வானோ என்று எதிர்பார்த்தாள். அதற்கு மாறாக அவன் பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தான். அது மட்டுமல்ல, அவன் குடிசைக்குள் நுழைந்து பூமியில் பள்ளம் செய்து முத்தைப் புதைத்து வைத்தான். அன்றிரவு ஏதோ யோசித்த வண்ணம் படுத்துக் கொண்டான்! தூங்கி விட்டான்.

விடியற்காலை மணி மூன்றரை யிருக்கும். கந்தன் திடீர் என்று விழித்துக் கொண்டான். வெளியில் எட்டிப் பார்த்தான். வானில் பூரண சந்திரன் நிலவை வீசிக் கொண்டிருந்தான்.

நீலக் கடல் 'ஓ' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தது. கடல் அலைகளின் வெண் நுரையில் சந்திரக் கிரணங்கள் பட்டு, வெள்ளிக் கம்பிகளாக மின்னின.

தூரத்தே யாரோ ஒருவர் நடந்து வருவது தெரிந்தது! கந்தன் உற்றுப் பார்த்தான். அந்த உருவம் நெருங்கி நெருங்கி வரலாயிற்று.

அந்த உருவம் நெருங்கி வரவரக் கந்தனுக்கு வருவது யார் என்பது நன்கு புலனாகி விட்டது!

கந்தன் தன் குடிசையின் வாசலில் நின்று அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த உருவம் கந்தனை நோக்கி வந்தது. கந்தனை நெருங்க நெருங்க அதன் உடலில் ஒரு பதட்டம் ஏற்பட்டது! கந்தனுக்கு ஆறு அடி தூரத்தையடைந்ததும் 'தொப்' என்று அவன் காலில் விழுந்து ஓவென்று கதறியழுதது. அந்த அழுகையின் இடை இடையே 'என்னை மன்னிச்சிடுங்க!' என்ற மொழிகளும் வந்தன.

"என்ன வள்ளி! உன்னை எதற்காக மன்னிப்பது? நீ என்ன குற்றம் செய்தாய்?" என்றான் கந்தன்.

"நீங்கள் அந்தப் பொருளை எங்கேயிருந்து எடுத்தீர்களோ, அதை அங்கேயே சேர்த்து விட்டேன்!"

"என்ன சொல்லுகிறாய், வள்ளி! எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே!"

"நீங்கள் கடலிலிருந்து எடுத்த பொருளைக் கடலிலேயே சேர்த்து விட்டேன். என்னைக் கோபித்துக் கொள்ளாதீங்க!" என்று அழுதாள்.

"இதில் கோபித்துக் கொள்ளுவதற்கு என்ன இருக்கிறது வள்ளி. நீ செய்த காரியம் ரொம்ப நல்ல காரியம். என் மன அமைதியைக் கெடுத்து வந்த அந்த முத்தைக் கடலுக்கே கொடுத்து விட்டது நல்லதாகப் போயிற்று. ஆம், அதைப் போன்ற பரிசுத்தமான பொருளை, ஏமாற்றும், பொய்யும், அழுக்கும் மலிந்த இவ்வுலகத்துக்கு அளிப்பதை விடக் கடலிலிருப்பதே மேல். அதனால் நீ எனக்குப் பெரிய உபகாரம் செய்திருக்கிறாய், அந்த முத்தைக் கடலில் எறிந்து!"

இதைக் கேட்டு வள்ளியடைந்த வியப்பு கொஞ்ச நஞ்சமல்ல. தன்னை உதைத்து அடித்து இம்சை செய்யப் போகிறான் என்று நினைத்து வந்த வள்ளிக்கு இப்படியொரு வரவேற்பு கிடைத்தால் சந்தோஷமாகத்தானே இருக்கும்! (தொடரும்)

தாய்மார்களே !

உங்கள் குழந்தை ஹுமெக்ஸ் பால் உணவைப் பெரிதும் விரும்பும்.



வெளி நாடுகளில் வெகுவாகப் போற்றப்படும் ஹுமெக்ஸ் பால் உணவு இந்திய சீதோஷ்ண நிலைக்கென தனியாகத் தயாரிக்கப்பட்டு இந்தியாவிலெங்கும் இப்போது விற்பனையாகிவருகிறது. புளிப்புத் தட்டாமல் எளிதில் ஜீரணிக்கப்படுவதால் ஹுமெக்ஸ் பால் உணவு குழந்தைகளை நாள் முழுவதும் ஆனந்தத்துடனும், குதூகலத்துடனும் இருக்கச் செய்கிறது.

ஹுமெக்ஸ் பால் உணவு எளிதில் தண்ணீரில் கரைந்து ருசிகரமான பானமாகி உடனே குழந்தைகளுக்கு ஊட்டலாம். இப்படிச் செய்வதனால் உங்கள் நேரம் வீணாகாமலும் குழந்தைகளுக்கு அதி சீக்கிரத்திலும் உணவு தயாரிக்க ஏதுவாகிறது.

மேலும் ஹுமெக்ஸ் பால் உணவு யாதொரு அபாயமற்றது ஏனெனில் ஹுமெக்ஸ் பால் உணவு "டூபர் கொலின் டெஸ்டெட்" பசுக்களின் விடமின் நிறைந்த பாலினின்று தயாரிக்கப்பட்டது. டி.டி. பால்தான் குழந்தைகளுக்கு மிகச்சிறந்ததும், சுத்தமானதுமென்று உங்கள் டாக்டர் சொல்லுவார். இத்தகைய அப்பழுக்கற்ற உணவும் பால் இக்காலச் செலவில் உங்களுக்குக் கிடைக்கிறது.


ஆகையால் இன்றே ஹுமெக்ஸ் பால் உணவை வாங்கி உங்கள் குழந்தைகளை ஆரோக்கியமும், ஆனந்தமும் அடையச் செய்யுங்கள். ஹுமெக்ஸ் பால் உணவு எங்கும் எளிதில் கிடைக்கிறது.

ஹுமெக்ஸ்
பால் உணவு



இதுவே ஹுமெக்ஸ் பாராட்டும் புட்டியைப் பெற வழி: ஹுமெக்ஸ் பால் உணவு டின்களிலுள்ள கூபன்களைச் சேருங்கள். இப்படி மூன்று கூபன் சேர்ந்த பின் அவைகளை ஹுமெக்ஸ் லிமிடெட், பேபி ஃபுட் டிபார்ட்மெண்ட், போஸ்ட் பாக்ஸ் 639, பம்பாய்-1. இவ் விலாசத்திற்கு தபால் மூலம் அனுப்பவும். இவ்விதம் அனுப்பிய பின் மறு தபாலிலேயே உங்களுக்கு ஒரு ஹுமெக்ஸ் பாராட்டும் புட்டி அனுப்பப்படும். இப் புட்டி உறுதியானது. மற்றும் சுகாதார விதிகளை அனுசரித்தது.

உங்கள் குழந்தைகளுக்கு ஹுமெக்ஸ் பால் உணவைக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்.



சங்கரன் அன்று மாலை ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்தபோது வழக்கம் போல் அவன் மனைவி மஞ்சுளா வாசலிலிருந்தபடியே அவனை வரவேற்கவில்லை. சங்கரனுக்கு இது சற்று வியப்பாயிருந்தது. கதவு திறந்திருந்தபடியால் உள்ளே நுழைந்து தன் உடுப்புகளை மாற்றிக் கொண்டான்.

மஞ்சுளா அவன் அறையில் ஜன்னல் பக்கமாக உட்கார்ந்து கொண்டு தீவிரமாக யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவன் வந்ததை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை. சங்கரன் சந்தடி செய்யாமல் குழாயடிக்குப் போய் முகம், கை, கால் கழுவிக் கொண்டு வந்தான்.

"மஞ்சு, என்ன ஓரேயடியாக வானத்தைப் பார்த்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து விட்டாய்! ஒரு வேளை நான் சீக்கிரம் ஆபீஸிலிருந்து வர வேண்டும் என்பதற்காக மூனிற் கூட்டங்களை அழைத்து என்னிடம் தூதாக அனுப்ப உத்தேசிக்கிறாயோ!" என்றான் சங்கரன்.

மஞ்சுளா உடனே சிந்தனை கலைந்து எழுந்திருந்து அவனிடம் வந்து நின்று, "அடாடா! நீங்கள் வந்ததை நான் கவனிக்கவேயில்லையே! தினம் இன்னும் அரைமணி கழித்துத்தானே வருவீர்கள்! இன்றைக்கு ரொம்பவும் சீக்கிரமாகவே வந்து விட்டீர்கள்; இல்லையா!" என்றாள்.

"சதா உன் நினைவாகவே இருக்கும்போது நான் எப்படி ஆபீஸில் வேலை செய்கிறது! அதனால் தான் சீக்கிரமாக வந்து விட்டேன்!" என்றான் சங்கரன் குறும்புச் சிரிப்புடன்.

"ஏது, இவ்வளவு அன்பு என்னிடம் பிறந்து விட்டது! 'உன்னிடம் பேசிக் கொண்டிருந்தால் ஆபீஸ் வேலைகளை எப்படிச் செய்கிறது!' என்று எரிந்து விழுவீர்களே!" என்றாள் மஞ்சுளா, அவனை ஓரக் கண்களால் பார்த்துக் கொண்டே.

"அது கூட மஞ்சு, உன்மீது உள்ள அதிகப் பிரியத்தினால்தான்! ஆபீஸ் வேலையைக் கட்டிக் கொண்டு அவதிப்பட வேண்டியிருக்கிறதே, உன்னிடம் பேசக் கூட அவகாசம் இல்லாமற் போய் விடுகிறதே என்கிற ஆற்றாமை காரணமாகத்தான் எப்போதாவது அப்படிச் சொல்லியிருப்பேன்!" என்றான் சங்கரன்.

"அடேயப்பா, என்ன அன்பு! பாவம், ஆபீஸிலிருந்து களைத்துப்போய் வந்திருக்கிறீர்கள், டிபன்

கூடக் கொடுக்காமல் பேசிக் கொண்டேயிருக்கிறேனே! இதோ வந்து விட்டேன்!" என்று கூறிவிட்டு மஞ்சுளா சமையலறைப் பக்கம் போனாள். மஞ்சுளா உடுத்தியிருந்த நீலப் பட்டுப் புடவையையும் அதற்கு ஏற்ற ரோஜா நிற ரவிக்கையையும், அவள் முதுகுப்புறம் எழில் பொங்க நீண்டு தொங்கிய பளபளப்பான பின்னலையும் பார்த்துச் சங்கரன் சொக்கிப் போனான். அவள் தலையில் நறுமணம் கமழும் கதம்பம் வேறு நாசுக்காக அமர்ந்திருந்தது.



"இந்தாருங்கள். டிபன் சாப்பிடுங்கள். என்ன என் தலையையே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே! கதம்பம் எனக்கு நன்றாயில்லையா!" என்று கேட்டுக்கொண்டே மஞ்சுளா டிபனைக் கொண்டு வந்து வைத்தாள்.

சங்கரன் டிபன் சாப்பிட்டுக் கொண்டே, "மஞ்சு, நன்றாய்க் கேட்டாய், போ. அந்தப் பூவின் அழகில் சொக்கிப் போய்த்தானே நான் உன்னையே பார்த்துக் கொண்டிருந்தேன், இத்தனை நேரமும்! பூக்கடையில் சாதாரணமாயுள்ள கதம்பம் உன் தலையில் அமர்ந்ததும், அடேயப்பா, எத்தனை எழில் பெற்று விடுகிறது! அதன் பாக்கியமே பாக்கியம்!" என்று சொல்லிப் புளகாங்கிதம் அடைந்தான்.

டிபன் சாப்பிட்டுக் கையலம்பிச் சங்கரன் காப்பியைச் சாப்பிட்டுக் கொண்டே மஞ்சுளாவைப் பார்த்தான். அவள் மனம் அச்சமயம் இங்கில்லை என்பது தெரிய வந்தது.

"மஞ்சு, நான் ஆபீஸிலிருந்து வந்ததிலிருந்து பார்க்கிறேன். உன் முகம் ஏதோ ஒரு நினைவில் வாட்ட முற்றிருப்பதாய்த் தெரிகிறது. அது என்ன! என்னிடம் கூடச் சொல்லக்கூடாதா!"

"உங்களிடம் சொல்லக் கூடாத ஒரு விஷயம் என்னிடம் ஏது! ஒன்றும் இல்லை......" என்று மஞ்சுளா கொஞ்சம் தயங்கினாள். அவள் கண்களில் நீர் மல்கியது.

"மஞ்சு, ஏன் கண் கலங்குகிறாய்! என்ன நேர்ந்தது!" என்று ஆதரத்துடன் கேட்டுச் சங்கரன் அவளை நெருங்கித் தன் மேல் துண்டினால் அவள் கண்ணீரைத் துடைத்தான்.

'என் அக்கா விஜயம் கடிதம் எழுதியிருக்கிறாள். அவள் பிரசவத்துக்கு ஊருக்குப் போயிருக்கிறாள். அவள் கணவர்-தியாகு அத்திம்பேர்-இங்கு வந்திருக்கிறாராம். அவரை உங்களுக்கு நினைவு இருக்கிறதா!"

"ஆகா, அவரை நினைவில்லாமல் என்ன! அவருக்கு என்ன இப்போது!" என்று திடுக்கிட்டுக் கேட்டான் சங்கரன்.

"அவருக்கு ஒன்றும் இல்லை. அவர்......இந்த ஊருக்கு ஆபீஸ் வேலையாக வந்திருக்கிறாராம். பத்து நாளைக்கு இருப்பாராம். அவருக்கு உடம்பு சரியில்லாததால் ஹோட்டல் சாப்பாடு இல்லாமல் வீட்டுச் சாப்பாடாயிருந்தால் சௌகரியமாயிருக்கும் என்று அக்கா எழுதியிருக்கிறாள்... கடிதாசைப் பாருங்களேன்!" என்று சொல்லிக்கொண்டே மஞ்சுளா சங்கரனிடம் கடிதத்தைக் கொடுத்தாள்.

சங்கரன் கடிதத்தை வாசித்தான்: "...மஞ்சு, உன் அத்திம்பேருக்கு இந்த ஏற்பாடு பிடிக்காது. 'நான் யாருடைய வீட்டிலும் போய்த் தங்க மாட்டேன்' என்று எனக்கு எழுதியிருந்தார். ஆனால் எனக்கு மனசு கேட்கவில்லை. உன் புருஷரிடம் சொல்லி, ஒரு பத்து நாளைக்கு அத்திம்பேருக்கு உன் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு தங்கியிருக்கச் சௌகரியம் செய்து கொடுத்தால், எனக்கு ரொம்பச் சந்தோஷமாயிருக்கும். அத்திம்பேரின் மனம் பிறர் சிரமப்படுவதைக் காணச் சகிக்காது. அந்தச் சுபாவத்தினால்தான் இதுநாள் வரையில் அவர் உங்கள் வீட்டுக்கு வரவில்லை. 'மஞ்சு சந்தோஷமாயிருக்கிறாள் என்று கேள்விப் பட்டால் அது போதும். நாம் அடிக்கடி போய்ப் பார்க்க முடியவில்லை என்பது வருத்தமாய்த் தான் இருக்கிறது. விஜயம், உலகத்தில் எல்லாவற்றுக்கும் நாம்தான் பொறுப்பு என்று நினைத்து வீணாக மனம் கலங்கக் கூடாது. எல்லாவற்றையும் நம் கடமை என்று நினைத்துச் செய்ய வேண்டும். மஞ்சு எங்கேயாவது சௌக்கியமாக இருந்தால் அது போதும். அவள் உள்ளம் குழந்தையைப் போன்றது; மலரைப் போல் மென்மையானது. நம்மால் அவளுக்குச் சிரமம் ஏற்படக் கூடாது' என்று அத்திம்பேர் அடிக்கடி சொல்லுவார்..."

இதற்கு மேல் சங்கரன் கடிதத்தைப் படிக்கவில்லை. படிக்க முடியாமல் கண்களில் நீர் மல்கி மறைத்தது. தியாகு அத்திம்பேரைப் பற்றிய பழைய நினைவுகள்—ஏழு வருஷங்களுக்கு முன் சங்கரனின் கல்யாணத்தின் போது நிகழ்ந்தவை—அவன் நினைவுத் திரையில் எழுந்தன.

"மஞ்சு, சுத்த அசடாயிருக்கிறாயே! இதை என்னிடம் சொல்ல இவ்வளவு தயங்குவானேன்! தியாகு அத்திம்பேர் பேஷாய் வந்து நம் அகத்தில் தங்கியிருக்கட்டும். நாளைக்கே விஜயம் அக்காவுக்குப் பதில் எழுதி விடு. உன் அத்திம்பேர் இப்போது வந்து தங்கியிருக்கும் ஹோட்டல் என் ஆபீசுக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. நான் இன்று ராத்திரி சாப்பாட்டுக்கே அவரை

இங்கே அழைத்து வந்துவிடுகிறேன். சரிதானே!" என்று கேட்டு மஞ்சுவின் முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான் சங்கரன்.

மஞ்சு அப்போது அவனை நிமிர்ந்து பார்த்த அன்பும் நன்றியும் கலந்த பார்வைக்கு ஈடாக வானத்தையும் வையத்தையும் கொடுத்தால் கூடப் போதாது. அந்தப் பார்வையின் கவர்ச்சியில் சங்கரன் மெய்ம்மறந்து போனான்.


"மஞ்சு, இதற்காகவா ஒரே யோசனையில் ஆழ்ந்திருந்தாய்! என்னத்துக்காக இதை என்னிடம் சொல்ல இவ்வளவு தயங்கினாய்! ஒரு வேளை நான் இதற்குச் சம்மதிக்க மாட்டேன் என்று நினைத்தாயோ!"

"இல்லை. நம் கல்யாணத்திற்காகத் தியாகு அத்திம்பேர் ரொம்பவும் சிரமம் எடுத்துக் கொண்டார். பெண் பெண்ணாகப் பிறந்து விட்ட எங்கள் குடும்பத்துக்கு மாப்பிள்ளை தேடி என் அப்பா ஒருவரால் முடியுமா! என் அக்கா சரசுவுக்கும் மீனாவுக்கும் தியாகு அத்திம்பேர்தான் வரன் தேடி நிச்சயம் செய்தார். உங்களுக்கும் எனக்கும் முடி போட்டுப் பிணைத்ததும் அவர்தான். நம் கல்யாணத்தின் போது அவர் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு, இங்கும் அங்கும் ஓடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டது உங்களுக்கு நினைவு இருக்கும். கல்யாணம் நிச்சயம் ஆகும் தருணத்தில், 'என் கல்யாண விஷயமாக நான் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. எல்லாம் என் மாமாவின் பொறுப்பு. அவர் மாம்பலத்தில் இருக்கிறார்' என்று எழுதி அவரது விலாசத்தையும் குறிப்பிட்டிருந்தீர்கள். பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தரான உங்கள் மாமாவை அத்திம்பேர் எத்தனை தடவை போய்ப் பார்த்திருப்பார், தெரியுமா!

"கல்யாணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பிலிருந்தே அத்திம்பேர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள ஆரம்பித்தார். நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. உங்கள் தாயாருக்கும் அக்காவுக்கும், தியாகு அத்திம்பேர் எல்லா இடங்களிலும் வளைய வந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அவர் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருப்பதால் அவரே தம் காமிராவில் நம்மைப் போட்டோ எடுத்தார். அப்பொழுது காமிராவுக்கு எதிரில் நின்ற நான், அத்திம்பேரைப் பார்த்து, 'சரிதானா' என்று கேட்கிற பாவனையில் தலையை அசைத்தேன். உடனே அவர், 'மஞ்சு, சபாஷ்! ரொம்பஜோர்! அப்படித்தான். அடாடா! புடவையை இன்னும் கொஞ்சம் நாசுக்காய் உடுத்திக் கொள்ளக் கூடாதா! சரி, பாதகமில்லை. உன் அக்கா விஜயத்தினிடம் போய்ப் புடவையைச் சரி செய்து கொள்' என்றார்.

"நான் எழுந்து உள்ளே போனேன். அப்போது தற்செயலாக உங்கள் அம்மாவையும் அக்காவையும் பார்த்தேன். அப்பப்பா! அவர்கள் பார்வையில்தான் என்ன கொடூரம்!

"அதைத் தொடர்ந்து பல சம்பவங்கள் நிகழ்ந்தன. தியாகு அத்திம்பேரைப் பற்றிப் பலவிதமாகப் பேச்சுக்கள் எழுந்தன. அவர் நல்லதென்று நினைத்துச் செய்த ஒவ்வொரு காரியத்துக்கும் மாசு கற்பித்து அவதூறு பேசப்பட்டது. 'என்ன இருந்தாலும், அத்திம்பேர் உறவுக்கும் ஒரு எல்லை இருக்க வேண்டும். எடுத்ததற்கெல்லாம் அத்திம்பேர் தானா!' என்று உங்கள் அக்கா பலமாக ஆரம்பித்தாள். இந்த விஷயம் அத்திம்பேருக்கும் தெரிந்து விட்டது. அவர் உயர்ந்த பண்பாடுள்ளவர். இது பற்றி யாரிடமும் வாய் திறக்க



வில்லை. நம் கல்யாணம் நல்லபடியாக முடிந்தது. நீங்கள் கூட நம் கல்யாணத்தின்போது தியாகு அத்திம்பேரிடம் சரியாக முகம் கொடுத்துப் பேச வில்லை. அத்திம்பேரைப் பார்க்கும்போதெல்லாம் உங்கள் முகம் நன்றாயில்லை......" என்று கூறி மஞ்சு மேலே பேச முடியாமல் நிறுத்தினாள்.

சங்கரன் பிரமித்துப் போனான். "மஞ்சு, இதை நீ எப்படிக் கவனித்தாய்! அடேயப்பா, கல்யாண மாகி இந்த ஏழு வருஷ காலமாக நீ இவ்வளவு நேரம் பேசிப் பார்த்ததே யில்லை. என் அக்காவுக்கும் அம்மாவுக்கும் பயந்துதான் நான் அவரிடம் சரியாய்ப் பேசவில்லை. அதையெல்லாம் நினைத்து நீ இப்பொழுது வருத்தப்படாதே. நான் மாத்திரம் போய்த் தியாகு அத்திம்பேரைப் பார்த்து அழைத்துக் கொண்டு வருவதை விட நீயும் வந்தால் நன்றாயிருக்கும். உடனே திரும்பி விட லாம்" என்றான்.

மஞ்சுவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. "நாம் வந்த பிறகு சமையல் செய்தாகணும். சீக்கிரம் வந்து விட முடியுமா!" என்று கேட்டாள்.

"நீ சீக்கிரம் புறப்பட்டால் சீக்கிரம் திரும்பி விடலாம்" என்றான் சங்கரன்.

"இதோ ஒரு நொடியில் வேறு புடவை கட்டிக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்று கூறிவிட்டு மஞ்சு உள்ளே ஓடினாள்.

சங்கரன் சாய்வு நாற்காலியில் படுத்தான். அவன் மனம் பழைய நினைவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தது.

சங்கரனுக்கு அப்போது பதினாறு வயது இருக்கும். சென்னை திருவல்லிக்கேணியில் ரங்க நாதம் தெருவில், அவனும் அவன் அம்மாளும் குடியிருந்தனர். அப்பொழுது அவன் படித்துக் கொண்டிருந்தான். அவர்கள் குடியிருந்த அதே வீட்டில்தான் விமலாவும் அவள் தாயாரும் குடி யிருந்தனர்.

விமலாவின் தகப்பனார் அவள் மூன்று வயதுக் குழந்தையா யிருக்கும்போதே கண்ணை மூடி விட்டார். நல்ல வேளையாக அந்த வீட்டையும் கொஞ்சம் ரொக்கத்தையும் அவர்களுக்குத் துணை யாக வைத்திருந்தார். அது அவர்கள் இருவரை யும் ஏழைமை என்னும் கொடூரத்திலிருந்து காப்பாற்றியது.

விமலா சங்கரனை விட மூன்று வயது சின்னவள். அவளும் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண் டிருந்தாள். அவள் அழகை எடுத்துக் காட்ட விசேஷமான நகை எதுவும் அணிந்திருக்கவில்லை. ஆனால் அவள் முகம் அதிகாலையில் மலர்ந்த புது மலர்போல் ஒரு தனிச் சோபையுடன் விளங்கியது.

விமலாவும் சங்கரனும் ஒருவரை யொருவர் அறிந்து பழக அதிக நாள் பிடிக்கவில்லை.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் சங்கரன் கலாசாலை யில் சேர்ந்தான். விமலா பருவம் அடைந்து குமாரியாகிவிடவே, உயர்நிலைப் பள்ளி வகுப்போடு அவள் படிப்பு நிறுத்தப்பட்டது.


சாதாரணமாகவே சங்கரனுக்கு வீட்டு வேலை அதிகம். அத்துடன் கடை கண்ணிகளுக்குப் போவதும் அவன் தானே! போதாக் குறைக்கு வீட்டுக்கார மாமியின் குடும்பத்துக்கும் அவன் தான் சாமான்கள் வாங்கி வருவான்.

அடிக்கடி விமலா அவனிடம் வந்து, "உங்களைத் தான் தொந்தரவு செய்ய வேண்டி யிருக்கிறது. புழுங்கலரிசி அரை மூட்டை வேண்டும். நீங்கள் கடைக்குப் போய் அரிசியை ஒரு ஆள் தலையில் வைத்து அனுப்பி விடுங்கள். சிரமத்துக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிக் கொண்டே கோணிப் பையையும் பணத்தையும் அவனிடம் கொடுப்பாள்.

சங்கரன் அவைகளை வாங்கிக் கொண்டு, "விமலா, இது என்ன பிரமாதம்! இதில் எனக்கு ஒரு சிரமமும் இல்லை" என்று கூறி விட்டுக் கடைக்குப் போய் விடுவான்.

புருஷத் துணை இல்லாத விமலாவின் குடும்பத்துக்குச் சங்கரன் உற்ற நண்பனாகவும் உறு துணையாகவும் இருந்தான். விமலாவும் அவள் தாயாரும் சங்கரனிடம் எதையும் கூச்சப் படாமல் சொல்லு வார்கள்; கேட்பார்கள்.

விமலாவின் தாயார் தன் பந்துக்களின் உதவியினால் விமலாவுக்கு வரன் தேட ஆரம்பித்தாள்.



"என்னம்மா, இது! கோவிலில் நிற்கிற மாதிரி எல்லோரும் நிக்கிறீங்களே!"
"ஆமாம்! துணிமணி, புடவைகளை வாங்கின பில் ஐயாவினிடம் ரூபாய் 1500க்கும் போயிருக்கிறது...விசுவரூப தரிசனத்துக்காக எல்லோரும் காத்துக் கொண்டு இருக்கிறோம்!"

அவர்களுடைய முயற்சியில் ஜாதகங்கள் வந்து குவிந்தன.

உள்ளூர் வரன்களைப் பார்க்கவும், வெளியூர் வரன்களுக்குக் கடிதம் எழுதித் தகவல் சேகரிக்கவும் சங்கரனுக்குப் பொழுதுக்கும் சரியா யிருந்தது. கலாசாலை விடுமுறை சமய மாதலால், மேற்படி வேலைகளைக் கவனிக்க அவனுக்கு அவகாசம் இருந்தது.

தினம் சங்கரன் விமலாவின் தாயாரிடம் வரன் சம்பந்தமாகத் தான் சேகரித்த தகவல்களை யெல்லாம் விவரமாகத் தெரிவிப்பான். அவன் முயற்சியின் பலனாக அடிக்கடி பெண் பார்க்க யாராவது அந்த வீட்டுக்கு வந்த வண்ணமாக இருந்தார்கள். அவர்களை யெல்லாம் முறைப்படி வரவேற்று உபசாரணைகள் செய்து சங்கரன் தான் எல்லாவற்றையும் கவனித்தான்.

கடையிலிருந்து திருச்சியிலிருந்து வந்த வரனின் ஜாதகம் விமலா

வின் ஜாதகத்துடன் ஒத்திருந்தது. லௌகிக விஷயங்களும் ஒத்து வரவே, அந்த வரனை முடிவு செய்வதென்று தீர்மானிக்கப் பட்டது.

சங்கரன் விமலாவின் கல்யாண ஏற்பாடுகளை மிகவும் சிரத்தையாகக் கவனித்துக் கொண்டான்.

ஆயிற்று; எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. முகூர்த்தத்துக்கு இன்னும் ஒரு வாரம் தான் பாக்கி யிருந்தது.

விமலா சங்கரனிடம் மிகவும் அன்போடு பேசிக் கொண்டிருந்தாள்.

"...நீங்கள் மட்டும் இல்லை என்றால் இந்தக் கல்யாணமே நிச்சயமாகி யிருக்காது. பாவம், உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று தெரியவில்லை. இன்னும் உங்களுக்குப் பொறுப்பு இருக்கிறதே! இதோடு விட்டுவிட வில்லை......"

"விமலா, ஒருவரோடு பழகி விட்டால் அப்புறம் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த காரியங்களெல்லாம் நம்முடையதாகி விடுகின்றன. அவைகளைப் பொறுப்பேற்று நடத்துவதில் ஒரு தனி இன்பம் இருக்கிறது. எனக்கு இதில் கொஞ்சமும் சிரமம் இல்லை, விமலா!"

"இது உங்களுடைய உயர்ந்த குணத்தைக் காட்டுகிறது. எங்கள் குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்திருக்க வேண்டியவர் நீங்கள்... எங்கள் அம்மாவுக்கு நான் ஒரே பெண். எனக்கு ரொம்ப நாளாக ஒரு அண்ணா இல்லையே என்கிற குறை மனத்தில் இருந்து வந்தது. இனிமேல் அந்தக் குறை..."

"...தீர்ந்து விட்டது, விமலா! சந்தேகம் இல்லை. எங்கள் குடும்பத்தின் குறை தீர நீ என் சகோதரியாகக் கிடைத்து விட்டாய்."

இப்படிக் கூறியதும் சங்கரன் உடம்பு சிலிர்த்தது. விமலாவும் மெய்ம் மறந்து நின்றாள். சங்கரனுடைய மனத்தில் நிறைந்திருந்த தூய அன்பை நினைத்து அவள் வியந்தாள்.

விமலாவின் விவாகம் சங்கரனுடைய ஆதரவில் பிரமாதமாக நடந்தது. மாப்பிள்ளை வீட்டுப் பேர்களைச் சங்கரன் அக்கறையோடு கவனித்துக் கொண்டதில் அவர்களுக்குப் பரமதிருப்தி.

கல்யாணம் முடிந்து மணப் பெண்ணை மாப்பிள்ளை வீட்டார் கிருகப்பிரவேசத்துக்கு அழைக்கும் தினம் வந்தது. சம்பந்திப் பேர்கள் தங்கியிருந்த விடுதிக்குப் பெண் வீட்டாரை விருந்துக்கு அழைத்தனர்.

"நீங்கள் இங்கே தனியாக எதுவும் செய்ய வேண்டாம். சங்கரன் கூட அப்படித்தான் அபிப்பிராயப் படுகிறான். உபசாரத்துக்கு வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய் வழங்கினால் போதும். சாப்பாடு என்னத்துக்கு!" என்று விமலாவின் தாயார் சம்பந்தி அம்மாளிடம் சொன்னாள்.

அதற்கு அந்த அம்மாள், "இல்லை. அதில் ஒன்றும் எங்களுக்குச் சிரமம் இருக்காது. ஒரு வேளை சாப்பாடுதானே! நீங்கள் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கும் சமையற்காரரைக் கேட்டேன். அவர், பணத்தைக் கொடுத்து விட்டால் எல்லாவற்றையும் தாம் கவனித்துக் கொள்ளுவதாகச் சொல்லிவிட்டார்!" என்று கூறி மீண்டும் வற்புறுத்தினாள்.

விமலாவின் தாயார் சற்றுத் தயங்கினாள். ஊருக்குப் புதிதாக வந்திருப்பவர்களுக்கு இந்தச் சிரமத்தைச் சம்பிரதாயம் என்பதற்காக வைக்க அவள் விரும்பவில்லை.

அம்மாவின் தயக்கத்தைக் கண்ட விமலா, மெதுவாக, "அம்மா, எதற்கும் சங்கர அண்ணா வந்து விடட்டுமே. சீக்கிரம் வந்து விடுவதாகச் சொல்லி விட்டுப் போனார். அவரைக் கேட்டுக் கொண்டு சம்மதம் தெரிவிக்கலாமே!" என்றாள்.

விமலாவின் தாயாருக்கு எதிலுமே கொஞ்சம் தயக்கம். யாராவது அவள் பக்கத்திலிருந்து தீர்மானமாகச் சொன்னால்தான் அவளுக்கு மேலே பேச வரும். இப்பொழுது விமலா தனக்குத் துணையாக வந்ததில் அவளுக்குப் பரம திருப்தி.

"......ஆமாம். சங்கரன் வந்து விடட்டும். அவனைக் கேட்டுக் கொண்டு சொல்லுகிறேன்!" என்று சம்பந்தியம்மாளை அனுப்பி வைத்தாள்.

சம்பந்தியம்மாளுக்கு இதில் விருப்பம் இல்லை. 'சங்கரன் யார், தீர்மானம் தெரிவிக்க! எல்லாவற்றுக்கும் அவன் வந்து விடுகிறானே' என்ற நினைவு அவள் மனசுக்குள் எழுந்து புகைய ஆரம்பித்தது. ஏற்கனவே சம்பந்தி வீட்டுப் பேர்களுக்குச் சங்கரனிடம் வெறுப்பு. 'உறவு, ஒட்டு ஒன்றும் இல்லாமல் இவனுக்கு என்ன இந்த வீட்டில் இத்தனை அதிகாரம்!' என்று ஒருவரோடு ஒருவர் 'கசமுச' என்று பலவாறாகப் பேசிக் கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு அப்புறம் அந்தக் 'கசமுச'ப் பேச்சு அதிகமாயிற்று.

கடைசியில், ஒருவாறு கிருகப் பிரவேசம் முடிவுற்றது. விமலாவும் சங்கரனும் சந்தித்தனர்.

"விமலா, நீ புக்ககத்துப் பேர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். அங்கு போன பிறகு நீ எங்களை யெல்லாம் நினைத்து வருந்தக் கூடாது. சமர்த்தா யிரு" என்று நாத் தழுதழுக்கக் கூறினான் சங்கரன்.

"........அம்மாவை நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். அம்மாவின் முகத்தைப்

பார்க்கவே முடியவில்லை என்றால்......" என்று விமலா பொங்கி வரும் கண்ணீருக்கு இடையே கூறி மேலே பேச முடியாமல் தவித்தாள்.

சங்கரன் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டதில் விமலாவின் தாயார் அடைந்த திருப்தி கொஞ்சமல்ல. இன்னும் இரண்டுமாதம் கழித்து விமலாவைப் புக்ககத்துக்கு அழைத்துக் கொள்ளுவதாகச் சம்பந்தி விட்டார் தெரிவித்தனர். சங்கரனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு விமலாவுடன் அவள் புக்ககத்துக்குப் போய் அவளை விட்டு விட்டு வந்துவிடுவது என்று விமலாவின் தாயார் தீர்மானித்திருந்தாள்.

கிருகப் பிரவேசம் முடிந்த கையோடு விமலாவையும் அழைத்துக் கொண்டு போவதாகத் திடீரென்று அவர்கள் தெரிவித்ததும் விமலாவின் தாயாருக்கு ஒன்றும் புரியவில்லை. அத் தீர்மானத்துக்குக் காரணத்தை அவர்கள் சொன்ன போது அவள் பட்ட வேதனை சொல்லி முடியாது.

"தக்க துணையோடு பெண்ணைக் கொண்டு வந்து விடுவது நியாயந்தான். அதற்காக நம்ம குடும்பத்துக்குச் சம்பந்தம் இல்லாத, உங்கள் சங்கரனைத் துணைக்கு அழைத்துக் கொள்ளுவதாகச் சொன்னது எனக்குப் பிடிக்கவில்லை. இந்தக் கல்யாணத்திலே அந்தப் பிரமச்சாரிப் பிள்ளை எல்லாக் காரியங்களிலும் நெருங்கின சொந்தக்காரன் மாதிரி தலையிட்டு வந்தது என் பிள்ளைக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. 'இவன் யாரு அம்மா! பெண் விட்டாருக்குச் சொந்தக்காரன் இல்லையாமே! இவன் வேறு, அவர்கள் வேறு. அப்படித்தான் கேள்விப்பட்டேன். இருந்தாலும் அவன், பழகுகிறமாதிரி நன்றாயில்லை' என்று என் பிள்ளை அப்போதே சொல்லி விட்டான்!" என்று சம்பந்தியம்மாள் சொன்னது விமலாவின் தாயாரின் மனதில் குமுறியது. இதை எப்படிச் சங்கரனிடம் தெரிவிப்பது! சம்பந்திப் பேர்களை இது விஷயத்தில் எப்படித் திருப்திப் படுத்துவது! மேற்படி கேள்விகள் அவள் மனசைக் குழப்பின.

நல்ல வேளையாக, சங்கரன் அந்தக் குழப்பத்தை நீக்கினான். காரணம், சம்பந்தியம்மாளின் பேச்சு முழுவதையும் அவன் கேட்டு விட்டது தான். விமலாவின் தாயாரிடம் சங்கரன் அன்று விடைபெற்றுக் கொண்டவன்தான். அப்புறம் அதைப் பற்றி அவன் நினைப்பதுகூட இல்லை.

இன்று அவன் மனசில் மேற்படி நிகழ்ச்சிகள் கருள் கருளாக விரிந்தன. தியாகு அத்திம்பேரின் நிலை அவனுக்கு இப்போது நன்றாய் விளங்கியது. 'பெண்கள் விஷயத்தில் உலகம் எப்போதும் ஒரு மாதிரியான அபிப்பிராயமே கொண்டிருக்கிறது. அவள் கணவனை நேசிக்கும் அன்பைத் தவிர, மற்ற சகோதர அன்பு, தாய்ப்பாசம், தோழமையின் அன்பு முதலிய எல்லாவற்றையும் இரண்டாம் பட்சமாகக் கருத வேண்டியவள்—இதுதான் அந்த அபிப்பிராயம்' என்று சங்கரன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

"என்ன, தூங்கி விட்டீர்களா! போகலாமா, தியாகு அத்திம்பேரைப் பார்க்க!" என்று சர்வாலங்கார பூஷிதையாக அங்கு தோன்றிய மஞ்சு அவனிடம் கேட்டாள்.

"ஓ, புறப்படலாம், மஞ்சு! தூங்கவில்லை. கொஞ்சம் அயர்ந்தேன். இப்பொழுது விழித்துக் கொண்டு விட்டேன்" என்றான் சங்கரன். ஆமாம். அவன் கூறியது சரிதானே! அவன் இப்போது அடைந்தது புது விழிப்புத்தானே!

மகிழ்ச்சியால் பொங்கும் வதனத்துடன் விளங்கிய மஞ்சுவுடன், நிறைந்த மனத்தோடு சங்கரனும் உற்சாகமாகப் புறப்பட்டான்.

யார் தவறு?



அதிகப்படி தென்பு



நீங்களும் பெறுக

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்



தென்புடன் விளங்குக......... உங்கள் தினசரி போஜனத்துடன் வாட்டர்பரீஸ் காமபவுண்ட் சாப்பிட்டு வருக...... அது சுருசுருப்பூட்டுவதும் ருசிமிகுந்ததுமான ஒரு டானிக். அதிகப்படி தென்பை வளர்க்க உதவுவதில் நிச்சய குணமுள்ளது. வாட்டர்பரீஸ் காம்பவுண்டு உங்களுக்கு அத்யாவசியமான புஷ்டிபதார்த்தங்களை வழங்கி, உங்களுக்கு சோர்வு, ஜலதோஷம், இருமல், எதுவும் ஏற்படாத வர்று எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வயது வந்தவர், இளைஞர் யாவருக்கும் தேக வலிமை பெற இன்றியமையாதது.

WATERBURY'S COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களை தென்புடன் வைத்திருக்கும்

NAS. 89-63

49

8. வெற்றிக்கு வழி

"இந்த நகரம் முழுவதுக்குமே தெரியுமா?' என்று கேட்ட ஜகதீஷ் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். ஜுகல் கிஷோர் சொல்வதன் பொருள் அவனுக்குச் சரியாக விளங்கவே இல்லை. எனவே, "அது எப்படி?" என்று வியப்புடன் கேட்டான்.

"இதைப் படித்துப் பார், எப்படி என்பது தானாகத் தெரியும்!" என்று சொன்ன ஜுகல் கிஷோர் கர்ஜனை பத்திரிகையின் அன்றைய இதழைப் பையிலிருந்து எடுத்து ஜகதீஷிடம் கொடுத்தான்.

தலையங்கம் பிரசுரமாகும் பக்கத்தில் உப தலையங்கம் போல 'எங்கள் உதவியாசிரியர்' என்ற தலைப்புக் கொடுத்து ஒரு கட்டுரை வெளியாகி யிருந்தது. அதைப்பார்த்ததும் ஜகதீஷ் கட கடவென்று வெகு வேகமாகப் படிக்கத் தொடங்கி விட்டான்.



கோகிலா

மொழிபெயர்ப்பு: ரா. வீ

☆ ரமண்லால் வஸந்தலால் தேசாய் ☆

"கர்ஜனை பத்திரிகையின் மிக முக்கியமான நோக்கம் ஒன்றேதான். அதற்கு எந்தக் குறிப்பிட்ட மனிதனும் வேண்டியவன் வேண்டாதவன் இல்லை. உண்மை ஒன்றே தான் அதன் குறிக்கோள். உண்மை ஒன்றுக்காக,ஒருவன் எத்தனைதான் வேண்டியவனாக இருந்தாலும் அவனை அது தள்ளிவைத்து விடும். இந்தப் பத்திரிகைக்காகத் தொண்டு செய்து உழைப்பவர்கள், எத்தனை சிறியவர்களா யிருந்தாலும் சரி, அல்லது எத்தனை தான் பெரியவர்களா யிருந்தாலும் சரி, நடத்தையில் சுத்தமானவர்களாக இருக்க வேண்டும், துளிக்கூட நடத்தைப் பிசகானவர்களாக இருக்கக்கூடாது என்பது இந்தப் பத்திரிகையின் மிகப் பிரதானமான கொள்கைகளில் ஒன்றாகும்.

"நம் பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ ஜகதீஷ் அவர்களின் தன்னலத் தியாகத்தைப் பற்றி வாசக நேயர்கள் அனைவரும் அறிவர். ஆனால் தேசத் தொண்டுக்காக ஏற்கும் விரதம் கூரிய கத்தி முனையில் நடப்பதற்கு ஒப்பானதாகும். எடுத்துக் கொண்ட விரதத்தை நடைமுறையில் நிறைவேற்றுவது என்பது எவ்வளவு கஷ்டமான காரியம் என்பது அத்தகைய மாபெரும் தன்னலத் தியாகியின் நடத்தையே பிசகி விட்டதிலிருந்து தெரிகிறது. தெருவில் சுற்றி யலைந்து கொண்டு, போவோர் வருவோரின் காம இச்சையைத் தூண்டி விட்டுக் கொண்டு திரிகிறவளும், முன்பின் அறிமுகமில்லாதவளுமான அழகிய இளம் பெண் ஒருத்திக்குத் தமது வீட்டில் அவர் அடைக்கலம் அளித்துள்ளார். அதற்கு உண்மையான காரணத்தை நமக்குத் திருப்தி ஏற்படும் வகையில் நம் உதவி ஆசிரியர் அவர்கள் சொல்லாத வரையில் அவருக்கும் இந்தப் பத்திரிகைக்கும் உள்ள தொடர்பு அறுந்து விட்டதாகவே கருதப்படும்.

"நேயர்கள் அனைவருக்கும் தெரிவிக்கும் படியான துயரம் தரும் இந்தக் கடமையை நாங்கள் நிர்ப்பந்தமாக ஏற்க நேர்ந்தது குறித்து மிகவும் மனம் வருந்துகிறோம். ஆனால் உண்மையை உரைக்கும் விஷயத்தில் நாங்கள் யாருக்கும் எந்தவிதமான மதிப்பும் கொடுப்பதில்லை; சலுகையும் காட்டுவதில்லை. எங்களைச் சேர்ந்தவர்கள், எங்களைச் சேராதவர்கள் என்று பாகுபடுத்திப் பாரபட்சம் காட்டும் விஷயத்துக்கே நாங்கள் சிறிதும் இடம் வைத்ததில்லை; வைப்பதும் இல்லை. ஒவ்வொரு உண்மையான பத்திரிகையின் தர்மமும் இதுவே யாகும் என்பதை நேயர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம் இல்லை என்றே நாம் கருதுகிறோம்."

அதைப் படித்த ஜகதீஷ் அப்படியே யோசனையில் ஆழ்ந்து விட்டான். அவன் யோசனையில் ஆழ்ந்து விட்டதைக் கண்ட ஜுகல் கிஷோர் 'கல கல' வென்று கை தட்டி உரக்கச் சிரித்தான். பிறகு, "ஏன்? என்ன யோசிக்கிறாய்? உன்னைப் பார்த்து எத்தனை கைகள் நீ குற்றவாளி, குற்றவாளி என்று சுட்டிக் காட்டுகின்றன என்பது வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டுப் பார்த்தால்தான் தெரிய வரும். எங்கு பார்த்தாலும் இன்று உன்னைப் பற்றியேதான் பேச்சாக இருக்கும். இப்பொழுது கூடத் தெருவில் போகிறவர்கள் வருகிறவர்கள் உன்னுடைய வீட்டில் ஒரு கண் வைத்துப் பார்த்துக் கொண்டேதான் போவார்கள். புரிந்ததா, இப்பொழுது விஷயம்?" என்றான்.

"சாந்திப்பிரியர் எத்தகைய நடத்தை வாய்ந்தவர் என்பதை நான் இப்பொழுதுதான் சரியாகப் புரிந்து கொண்டேன்!" என்றான் ஜகதீஷ். அவன் பேச்சில் கடுகடுப்பும் சிடுசிடுப்பும் தாண்டவமாடின.

"உனக்கு எத்தனையோ தெரியலாம். அதையெல்லாம் கேட்க இங்கே யார் காத்திருக்கிறார்கள்? உனக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் இந்த மரியாதையை எண்ணிப் பார்! இனி உன்னை நிறுத்தி வைத்து யார் மரியாதையுடன் பேச முன் வருவார்கள்? சொல்லேன், பார்க்கலாம்!" என்றான் ஜுகல் கிஷோர்.

"உண்மையை யாருமே கேட்க மாட்டார்களா? அதற்கு மதிப்பே கிடையாதா?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"பத்திரிகாசிரியர்களைக் காட்டிலும் உண்மையைச் சொல்லக் கூடியவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா? என்னைக் கேட்டால் உன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஏதாவது வழி தேடு என்றுதான் சொல்லுவேன். இதில் பிரசுரமாகியிருக்கும் விஷயத்தை எப்படிப் பொய் என்று உன்னால் நிரூபிக்க முடியும்?" என்று கேட்டான் ஜுகல்கிஷோர்.

ஜகதீஷ் மறுபடியும் ஒரு முறை அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்தான். அவன் முகத்தில் அப்பொழுது ஏற்பட்டுக் கொண்டிருந்த மாறுதல்களை ஜுகல் கிஷோர் மிக உன்னிப்பாகக் கவனித்தான்.

அதைப் படித்து முடித்தவுடன் "இதில் எழுதியிருக்கும் ஒவ்வொரு வாக்கியமும் பொய்!" என்று ஒவ்வொரு வார்த்தையிலும் அழுத்தம் கொடுத்துக் கூறினான் ஜகதீஷ்.

"உனக்கு அப்படித்தான் தோன்றும். அதுதான் இயல்புங்கூட. ஆனால் மற்றவர்களுக்கு...? அது கிடக்கட்டும், முதலில்



இதைச் சொல்லு! அந்தப் பெண் வழியில் தடுமாறித் தறிகெட்டுத் திரிந்து கொண்டிருந்தாளா, இல்லையா?" என்று கேட்டான் ஜுகல் கிஷோர்.

"ஆமாம், இதில் பாவம், அந்தப் பெண்ணுடைய குற்றம் என்ன?"

"மறுபடியும் பழைய குருடி என்ற கதையாக ஆரம்பித்து விட்டாயே! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு. நான் கேட்கிற விஷயம் உண்மையா, இல்லையா? சொல்லு" என்றான் ஜுகல் கிஷோர்.

"ஒரு விதத்தில் அது உண்மையான விஷயம்தான். ஒப்புக் கொள்கிறேன்!"

"ஒருவிதத்தில் என்ன? எல்லா விதத்திலும் அதுதான் உண்மை. அது போகட்டும். போவோர் வருவோர்களின் உள்ளத்தைக் கிளர்ச்சி கொள்ளச் செய்து அவள் காம இச்சையைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தாளா, இல்லையா?" என்று ஜுகல்கிஷோர் அடுத்தபடியாக இன்னொரு கேள்வியையும் கேட்டு வைத்தான்.

அந்தக் கேள்வி ஜகதீஷுக்கு முதல் நாள் இரவு அவன் தெருவில் கண்ட அந்தக் காட்சியை நினைவுக்குக் கொண்டு வந்தது.

பெண்மை எத்தகைய இழிநிலையை அடையக் கூடும் என்பதை எடுத்துக் காட்டிச் சமூகத்தை எச்சரிக்கும் வகையில் அவள் காட்டிய அந்தச் சகிப்புத் தன்மை அமைந்து விட்டது. எனவே, இதற்கெல்லாம் பொறுப்பாளி யார்? வேறு வழி தென்படாமல் தன் மானத்தையும் கற்பையும் விலை கூறும் அளவுக்கு வந்து விடும் பெண்ணா? அல்லது அவளை அத்தகைய அவல நிலைக்கு ஆளாக்கிக் கெட்ட வழியில் பிரவேசிக்கச் செய்து விலை பேச முயற்சிக்கும் சமூகமா? இத்தகைய எண்ணங்கள் இருதயத்தில் இடம் பெறவே, "தெரிந்து வேண்டுமென்றா அவள் அப்படிச் செய்தாள்?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"அவள் வேண்டுமென்றே வருவோர் போவோர்களின் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டிப் புயலை எழுப்பினாள் என்று உன் பத்திரிகையில்தான் எங்கே எழுதியிருக்கிறது? சரி, அது போகட்டும். அவள் அழகியா, இல்லையா? சொல்லு!" என்று மறுபடியும் கேட்டான் ஜுகல் கிஷோர்.

அவனது அந்தக் கேள்வியைக் கேட்ட ஜகதீஷ் இலேசாக இளநகை புரிந்தான். அவன் கேள்விக்கு மறு மொழி கூறாமலே மௌனமாயிருந்து அவள் அழகிதான் என்பதையும் அவன் ஒப்புக் கொண்டான்.

ஜனங்கள் கெட்ட கண் கொண்டு தன்னைக் காண்பதை அவள் ஒரு முறை எவ்விதமான எதிர்ப்பு உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் சகித்துக் கொண்டாளே, அது நியாயமா? அவள் நேர்மையும் நெறியும் உள்ள பெண்ணாயிருந்தால் அப்படிச் செய்திருக்கலாமா? செய்திருக்கக் கூடாதுதான்! ஆனால் பசியிலும் தாகத்திலும் தனிமையிலும் துயரத்திலும் அடிபட்டு அலுத்துச் சலித்து ஆய்ந்து ஓய்ந்த பின்னரும்கூட அவள் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கையைக் கடைப்பிடித்து எப்படியாவது வாழ வேண்டும் என்று விரும்பினாள். வாழ வேண்டும் என்ற எண்ணம்தான் அப்படி அவளைக் கடைசி முயற்சி எடுத்துக் கொள்ளுமாறு தூண்டியிருக்க வேண்டும்; அத்தகைய சகிப்புத் தன்மையை அளித்திருக்க வேண்டும். ஜகதீஷ் கண்டது போன்ற இசை கேடான நிலை ஏற்பட்டு விட்டால், பெருமை நிறைந்த



"நீ அவளை உன் வீட்டுக்குக் கொண்டு வந்து வைத்துக் கொண்டாயா, இல்லையா?"

"ஆமாம், கொண்டு வந்து வைத்துக் கொண்டேன். அதனால் என்ன? நான் ஒன்றும் ஒளிவு மறைவு வைத்துக் கொள்ளவில்லையே!" என்றான் ஜகதீஷ்.

"அப்படியானால் உண்மையான காரணத்தை நம்பகமான முறையில் திருப்தி ஏற்படும் வகையில் சொல்லு, பார்ப்போம்!" என்றான் ஜுகல் கிஷோர்.

"உண்மையான காரணத்தைச் சொன்னால் அது திருப்திகரமாகவும் நம்பகமாகவும் தோன்றாது. அதனால் நான் அதைச் சொல்லப்போவதில்லை!" என்றான் ஜகதீஷ்.

"நான் வேண்டுவது இவ்வளவுதான். பத்திரிகைச் செய்தி உண்மையானது, நீ சொல்வது பொய்யானது என்று

பாரதி வாக்கு—5

இங்ஙனம், மனித ஜாதிக்கே பொது இகழ்ச்சியாகவும் பொதுக் கஷ்டமாகவும், இந்தியர்களுக்கு விசேஷ அவமானமாகவும், விசேஷ கஷ்டமாகவும் மூண்டிருக்கும் இந்தவறுமையாகிய நோய்க்கு ஒரு மருந்து கண்டுபிடித்து, அந்த நோயை நீக்கி, இந்தியாவிலும், பூ மண்டலத்திலும் சகல ஜனங்களுக்கும் ஆகார சம்பந்தமாகப்பயமில்லாதபடி அரைவயிற்றுக் கஞ்சியேனும் நிச்சயமாகக் கிடைப்பதற்கு வழிகள் எவை என்பதைப் பற்றி ஒவ்வொரு புத்திமானும், ஆராய்ச்சி செய்தல் இவ்வுலகத்திலுள்ள எல்லா அவசரங்களைக் காட்டிலும் பெரிய அவசர மென்று நான் கருதுகின்றேன்.

தீர்மானிக்க இதைக் காட்டிலும் எனக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ஜுகல் கிஷோர்.

ஜகதீஷ் அதற்கு ஒன்றும் பதில் பேசவில்லை. ஆனால் ஜுகல் கிஷோரின் அந்தச் சொற்களைக் கேட்டதும் அவன் உடல், உள்ளம் எல்லாம் ஒரேயடியாகப் பற்றி எரிந்தது. அவனுக்கோ அந்தப் பெண்ணின் பெயர் தெரியாது. ஊர் தெரியாது. உற்றார் உறவினர் தெரியாது. அந்தரங்கம் தெரியாது. அவள் எத்தகைய குணம் படைத்தவள் என்றும் தெரியாது. அவள் ஏனோ அழுதாள். அவள் அழுகைக்கு இரங்கி அவன் அவளுக்கு அடைக்கலம் அளிக்க முன் வந்தான்; தன் வீட்டில் கொண்டு வந்தும் வைத்துக் கொண்டான். அவ்வளவுதான். அவன் செய்த அந்தக் காரியத்தில் சமூகம் குற்றம் கண்டு பிடிக்கிறது. அவனுடைய அந்தச் செய்கைக்காகத் தண்டனையும் அளிக்க விரும்புகிறது. அதைக் காட்டிலும் அவனுக்கு எரிச்சலை உண்டு பண்ணுவதற்கு வேறு என்ன வேண்டும்?

"இந்தச் செய்தியைப் படிப்பதற்குச் சிறிது நேரம் முன்கூட நீ இப்பொழுதெல்லாம் திருந்தியிருப்பாய் என்றுதான் நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் உன்னைப் பார்த்ததும் நான் எண்ணியது தவறு என்பது எனக்குத் தெரிந்து விட்டது. இன்னும் நீ அந்த பழைய பித்துக்குளியாகத்தான் இருக்கிறாய். உன் மனைவி என்னடா வென்றால் உன்னைக் காட்டிலும் ஒரு படி மேலே போய் விடுவாள் போலிருக்கிறது. அவளைப் போன்ற அசட்டுப் பெண்ணை நான் பார்த்ததில்லை என்று சொல்லும் படியாகத்தான் அவளும் நடந்து கொள்ளுகிறாள். நீங்கள் கணவன்—மனைவி இருவரும் ஒருவருக் கொருவர் கொஞ்சமும் சளைத்தவர் இல்லை, அப்பா!" என்றான் ஜுகல் கிஷோர்.

"ஆமாம், இவ்வளவு தூரம் என்ன என்னவோ சொல்கிறீர்களே! நான் திருந்தியிருந்தால் எப்படி யிருப்பேன், என்ன செய்திருப்பேன்?" என்று கேட்டான் ஜகதீஷ்.

"என்ன செய்திருப்பாயா? லால்ஜியும் அவர் மனைவி விஜயலக்ஷ்மியும் கேட்டுக் கொண்ட விஷயத்துக்கு மறுத்துச் சொல்லியிருக்க மாட்டாய். உன் பத்திரிகையிலே உன்னைப் பற்றிய அவதூறான செய்திகள் வெளி வருவதற்குச் சந்தர்ப்பம் அளித்திருக்க மாட்டாய்!"

"என்னைப் பற்றி இப்படியெல்லாம் எழுத அவருக்கு ஒரு பெரிய காரணமும் சாக்கும் கிடைத்து விட்டன. இல்லா விட்டால் இப்படி யெல்லாம் எழுதுவாரா?"

"அதை யெல்லாம் நான் உன்னிடம் கேட்கவும் இல்லை; நீ என்னிடம் இப்படி மூடி மெழுகிப் பேச வேண்டியதும் இல்லை. உன்னைக் காட்டிலும் சாந்திப்பிரியனை நான் நன்றாக அறிவேன். அது போகட்டும்; மேலே ஆக வேண்டிய காரியத்தைப் பார்ப்போம். இனி நீ என்ன செய்வதாக உத்தேசித்திருக்கிறாய், சொல்லு!"

"என்ன செய்வது என்றுதான் எனக்கு ஒன்றும் விளங்க வில்லை!"

"உனக்குச் செலவுக்குப் பணம் தேவை உண்டா, இல்லையா?"

"தேவை என்றால் சாமான்யப் பட்ட தேவையில்லை. 'ஆவுரி, ஆவுரி' என்ற பறக்கக் கூடிய தேவை. முடையை நினைத்தால் மனத்தை என்னவோ செய்கிறது. உண்மையைக் கேட்டால் என்னைக் காட்டிலும் இப்பொழுது ஒரு பிச்சைக்காரன்கூடப் பணக்காரனா யிருப்பான் என்றுதான் சொல்லுவேன்!" என்றான் ஜகதீஷ்.

"உண்மையின் உதவியைக் கொண்டு இன்றைய உலகத்தில் பணம் சம்பாதிப்பது என்பது முடியாத காரியம், அப்பா! இப்பொழுதாவது என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை உண்டாகிறதா?" என்று கேட்டான் ஜுகல் கிஷோர்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று ஜகதீஷுக்குப் புரிய வில்லை. பேசாமல் மௌனம் சாதித்தான். அவன் மௌனத்தைத் தனக்குச் சௌகரியமாய்ப் பயன் படுத்திக் கொண்ட ஜுகல் கிஷோர், "அதனால்தான் நீயும் என் பகற் கொள்ளையில் இறங்கிவிடக் கூடாது என்று கேட்கிறேன்? சக்தி உள்ளவர்கள் கொள்ளை அடிக்கிறார்கள்; சக்தியில்லாதவர்கள் மகாத்மா வேஷம் போடுகிறார்கள். இதுதான் இன்றைய உலகத்தின் உண்மை நிலையா யிருக்கிறது!" என்றான்.

"யாரைக் கொள்ளை யடித்து மகாத்மா வாக்கப் பார்க்கிறீர்கள்?" என்று இரண்டு கேள்விகளையும் ஒன்றாக இணைத்துக் கேட்டுக் கொண்டு சிரித்தவாறே உள்ளே நுழைந்த கோகிலா, "எத்தனை நாழிகையாகக் காத்

திருக்கிறேன். நீங்கள் இரண்டு பேரும் எழுந்து சாப்பிட வந்தால்தானே?" என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

"உங்கள் வீட்டுக்கு வந்து விட்டால் முதன் முதலில் உங்களுடைய அசட்டுத் தனங்கள்தான் என் கண்களில் படுகின்றன. அப்புறம் சாப்பிட வேண்டும் என்ற நினைவே மறந்து விடுகிறது! எத்தனை பசியோடு ஆவலாகச் சாப்பிட வேண்டும் என்று இங்கே வந்தேன், தெரியுமா? ஆனால் இங்கே வந்ததும்தான் பசி பறந்து விட்டதே!" என்றான் ஜுகல் கிஷோர். பரிகாசத்தையும் புகழுரையாக எப்படிச் சொல்வது என்பதை ஜுகல் கிஷோர் வெகு நன்றாக அறிந்து வைத்திருந்தான்.

கோகிலா இருவரையும் சாப்பிட அழைத்துச் சென்றாள். பீயூஷை அருகில் உட்கார வைத்துக் கொண்ட ஜுகல்கிஷோர் விதம் விதமான விளையாட்டுக்கள் காட்டி அவனைக் கல கல வென்று கை தட்டிச் சிரித்து மகிழச் செய்தான்.

ராதாவும் சற்றுத் தொலைவில்தான் உட்கார்ந்திருந்தாள். சாப்பிடும் பொழுது இரண்டொரு தடவை ஜுகல் கிஷோர் அவள் மீது தன் பார்வையைச் செலுத்தினான். அவனால் அப்புறம் பேசாமல் இருக்க முடியவில்லை. எனவே, மெதுவான குரலில் ஜகதீஷைக் கூப்பிட்டு, "நாடகக் கம்பெனிக்கோ படக் கம்பெனிக்கோ போய்ச் சேர்ந்தால் இவளுக்கு நல்ல சம்பளம் கிடைக்குமே!" என்று ராதாவைப் பற்றிய தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான்.


ஜகதீஷ் அதற்கொன்றும் மறுமொழி கூறவில்லை. உதடுகளில் ஒரு இள நகையை மட்டும் ஓட விட்டு விட்டு ஆழ்ந்த மௌனம் சாதித்தான்.

"ஆனால் இந்த உலகத்தில் தனக்குத் தகுந்த தொழிலாக யாருக்காவது தேடிக் கொள்ளத் தெரிந்தால் தானே?" என்று சொன்ன ஜுகல் கிஷோரும் ஒரு தடவை இலேசாகக் குறுநகை புரிந்தான்.

உணவு அருந்தி முடிந்ததும் ஜகதீஷின் குணதிசயங்களைப் பற்றி ஜுகல் கிஷோர் அலசி ஆராய ஆரம்பித்து விட்டான். ஜகதீஷுக்கு ஊருடன் ஒத்து வாழத் தெரியவில்லை என்று பரிகாசம் செய்தான். உலகத்தின் போக்குத் தெரிந்து அதற்கு ஏற்றவாறு நடந்து கொள்ளத் தெரியாதவன் என்று பட்டம் கொடுத்தான். அவனுடைய உதவாக் கரைத் தனத்தையும் உருப்படாத் தனத்தையும் அக்கு அக்காக எடுத்துக் கூறிக் கேலி செய்தான். அவற்றின் காரணமாக அவன் வாழ்க்கையில் எந்தக் காரியத்தை ஏற்றுக் கொண்டு நடத்த முன் வந்தாலும் வெற்றி காண முடியாது என்பதை உதாரண பூர்வமாக விளக்கினான். அவ்வளவு தூரம் அவனைக் குத்திக் கஷ்டப் படுத்தி மனத்தைப் புண் படுத்திய பின் பாவது பேசாமல் இருக்கலாம் அல்லவா? அதுதான் இல்லை. "ஆமாம், உன் உத்தேசம் என்ன? இவ்வளவு தூரம் நான் கூறியபின் ஒரு முடிவுக்கு வந்திருப்பாயே! என்னிடம் உன் முடிவைச் சொல்லலாம் அல்லவா?" என்று கடைசியாக ஜகதீஷிடம் ஒரு கேள்வியையும் கேட்டு வைத்தான்.

ஆனால் ஜகதீஷும் அவனுடைய அத்தனை பேச்சுக்கும் அசைந்து கொடுப்பவனாக இல்லை. "என் உத்தேசம் வேறு எதுவாக இருக்க முடியும்? தேசத் தொண்டு செய்வது தான் என் உத்தேசம்!" என்று அழுத்தந் திருத்தமாகவே பதில் சொன்னான்.

அதைக் கேட்ட ஜுகல் கிஷோர் ஏளனமாகச் சிரித்தான். "தேசத் தொண்டு செய்வதா? பேஷ், பேஷ்! தேவலையே!... ஆனால் முதலில் என்னுடைய இரண்டொரு கேள்விகளுக்குப் பதில் சொல்லி விட்டு, அப்புறம் உன் முடிவுக்கு வா. உன் தொண்டு தேசத்துக்குத் தேவைதானா இல்லையா என்பது முதல் கேள்வி. அப்படி உன் தொண்டு தேசத்துக்குத் தேவைதான் என்றால் அது எதற்காக என்பது இரண்டாவது கேள்வி. இந்த இரண்டு கேள்விக்கும் சரியான பதில் சொல்லி விட்டால் நீ தேசத் தொண்டில் இறங்கலாம். இந்த இரண்டு கேள்விகளையும் ஒரு புறம் மூட்டை கட்டி வைத்து விட்டுப் பார்த்தாலும், நீ உன் உத்தேசத்தில் வெற்றி காண வில்லை என்றுதான் ஆகிறது. என்னுடைய இந்தக் கேள்விகளுக்கும் உன்னால் பதில் சொல்ல முடியவில்லையென்றால், அவற்றைப் பொறுத்த வரையிலுங்கூட நீ தோல்விதான் கண்டாய் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கும்!" என்றான் ஜுகல் கிஷோர்.



நடுத்தர வயதுக்காரர்......???

"உங்கள் சொல்லில் உண்மை இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்!"

"இதற்குக் காரணம் என்னவென்று எப்பொழுதாவது நீ யோசித்துப் பார்த்திருக்கிறாயா?"

"காரணத்தைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்!"

"காரணத்தைத் தேடித் திரிய வேண்டிய தேவையில்லை. உன் உத்தேசம் பரிசுத்தமானதாயிருந்தாலும், பாவம் தோய்ந்ததாயிருந்தாலும் அதை வெற்றிகரமானதாக்கிக் கொள்ள எந்த எந்தச் சாதனங்களை யெல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அவற்றை யெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் புத்திசாலிகளுக்கு அழகு. கவைக்குதவாத புதுச் சாதனங்களைக் கற்பனை செய்து கொண்டு நிற்பதனால் காரியம் ஆகாது. இது நிச்சயம். நான் சொல்வதை நம்பு!" என்றான் ஜுகல் கிஷோர்.

"நீங்கள் இவ்வளவு பெரிய வேதாந்தியாக ஆகி விட்டீர்கள் என்ற விஷயம் இன்றுவரை எனக்குத் தெரியாமல் இருந்து விட்டதே! ஆனால் நீங்கள் சொல்லும் வேதாந்தம் எனக்குச் சரியாக விளங்கவில்லை. வேதாந்தம் விளங்குவது என்பது சற்றுச் சிரம சாத்தியமான விஷயம்தானே?"

"அப்படியானால் ஒரு உதாரணம் சொல்கிறேன், கேள்! பாரத நாட்டிலிருந்து நாம் ஆப்பிரிக்காவுக்குப் போக வேண்டும் என்று வைத்துக் கொள். கடல் தாண்டுவதைத் தவிர வேறு ஏதாவது வழி இருக்கிறதோ? இல்லை அல்லவா? கடல் தாண்டக் கூடாது என்று நம் தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. கடல் உப்பாயிருப்பதால்தானே இப்படிக் கூறுகின்றன என்று நீ சொல்லலாம். உடனே கடலின் உப்பு நீரை இனிமையாக்கும் முயற்சியில் இறங்கி விட்டால், அப்புறம் நாம் ஆப்பிரிக்கா போன மாதிரிதான்! அலை ஓய்ந்து தான் ஸ்நானம் செய்வேன் என்றால் அது எங்கேயாவது நடக்கக் கூடிய காரியமா?" என்றான் ஜுகல் கிஷோர்.

"நான் எங்கே அப்படிச் சொன்னேன்?"

"நீ சொல்ல வேறு வேண்டுமா? உன்னைப் பற்றி இப்படித்தான் பேசிக் கொள்கிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் அப்படிப் பேசிக் கொள்வதில் தவறில்லை என்றுதான் சொல்வேன். ஏனென்றால், நீ அப்படியெல்லாம் இல்லாவிட்டால், இப்படி உருப்படாத உதவாக்கரையாக இருக்கமாட்டாய்! உனக்கு உன் நண்பர்களே நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகத் தோன்றவில்லை. அரசாங்க அதிகாரிகள் உன் கண்களுக்கு மண்டைக் கர்வம் பிடித்தவர்களாகவும் பெயருக்கும் புகழுக்கும் வீங்கிச் சாகிறவர்களாகவும் தோற்றமளிக்கிறார்கள். உனக்கு உன் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளே விஷம் தோய்ந்தவையாகத் தோன்றுகின்றன. இவையெல்லாம் சரிவரத் திருந்தினால்தான் உன் தேசத் தொண்டு ஆரம்பமாக முடியும். ஏன் அப்பா, பெரிய மனுஷ்யா! இதெல்லாம் இந்த ஜன்மாவில் நடக்கக் கூடிய காரியமா? கொஞ்சம் ஆற அமர யோசித்துப் பார்த்தால் ஒவ்வொரு விஷயத்திலும் நீ எவ்வளவு பின் தங்கி விட்டாய் என்பது உனக்கே தெரிய வரும். சாதனங்களை யெல்லாம் சீர்திருத்திப் பரிசுத்தமாக்கிய பின்னர் தான் தேசத் தொண்டு செய்வது என்று எண்ணினால், பிறப்புத் தொழிலை ஏற்றுக் கொண்டிருக்கும் பிரமன் நான்கைந்து நாட்களாவது நன்றாகத் தூங்கிவிட வேண்டும். அப்பொழுதும் உன்னால் முடியுமோ, முடியாதோ, சந்தேகம் தான்!" என்றான் ஜுகல் கிஷோர்.

"நீங்கள் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று தோன்றுகிறது!"

"நான் என்ன? ஒருவருமே உன்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளவும் முடியாது என்றே எண்ணுகிறேன். கிடைக்கும் சாதனங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற முயல்வதுதான் வெற்றிக்கு வாகான வழி. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்! உன் தலைவன், உன் தேசத் தொண்டன், உன் பத்திரிகைக்காரன் இவர்களோடெல்லாம் சண்டை போட்டுக் கொண்டாயே! உனக்கு என்ன பலன் கிடைத்தது? கிடைத்தற்கரிய சாதனங்கள் உனக்குக் கிடைத்தன. அவற்றைப் பாழ்படுத்திக் கெடுத்துக் கொண்டாய்! வேறு என்ன செய்தாய்?" என்று கேட்டான் ஜுகல் கிஷோர்.

"இனி என்னால் ஆகக் கூடியது என்ன என்பதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். என் பத்திரிகையே என் மானத்தை வாங்கிக் குழி பறித்து என்னைப் புதைக்கவும் பார்க்கிறது. இதை நினைத்தால்......"

"என்னைக் கேட்டால் அது செய்ததுதான் சரி என்பேன்! இது வரை உனக்கு யாரிடம் வெட்கம், மானம் சூடு, சொரணை என்றிருந்தது? இப்பொழுது போய் விட்டது என்று நீ குறை கூற? இனியாவது நான் சொல்வதைக் கேள். நான் சொல்லும் வழியைக் கடைப் பிடித்தால், தேசத் தொண்டு செய்வதெப்படி என்பது தானாகவே தெரிய வரும்!" என்றான் ஜுகல் கிஷோர்.

அதைக் கேட்ட ஜகதீஷ் சிரித்தான். தேசோத்தாரணம் போன்ற புனிதமான காரியங்களும் அதற்கான வழிகளும் இப்படி ஜுகல் கிஷோரைப் போன்ற பெயர் போன போக்கிரிகளின் கையிலா மாட்டிக் கொண்டு தவிக்க வேண்டும்? என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்!

"ரொம்ப சரி! அப்படியானால் நீங்களே எனக்குக் குருவாகி விடுங்களேன்!"

"இன்றிலிருந்து சரியாக ஒரு வாரம் கழித்து என்னை வந்து பார். நான் கூப்பிட்டனுப்புகிறேன். இரவு நேரமாயிருந்தாலும் பயப்படாமல் வா! என்ன?" -என்றான் ஜுகல் கிஷோர்.

"ஏதாவது ஏமாற்றித் திரியும் தொழிலில் இறங்கியாக வேண்டியிருக்குமோ?"

"இந்த உலகத்தில் அதில்லாமல் எந்தக் காரியம் நடக்கிறது? அதை விட்டால் நாம் நமது தினசரி வாழ்க்கையில் வேறு என்ன பிரமாதமாகப் புரட்டி விடுகிறோம்? நாம் தினந்தோறும் செய்யும் காரியங்களையே எடுத்துக் கொள்ளேன்! ஒவ்வொன்றும், வாழ்க்கையை வாழ்வதற்காகவும் வாழும் அந்த வாழ்க்கையில் இன்பம் காண்பதற்காகவும் செய்யும் மோசடி வித்தைகளாகத்தானே நிகழ்கின்றன? இது ஒன்றும் தெரியாத விஷயம் அல்லவே!" என்றான் ஜுகல்கிஷோர்.

அப்புறம் அவன் அங்கே வெகு நேரம் தங்கவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் ஜகதீஷிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். அவன் சொன்னதைக் கேட்ட பின் ஜகதீஷின் நிலை வெகு விசித்திரமானதாகி விட்டது. அவனுடைய மனத்தை ஆட்கொண்ட எண்ணம் கவலையாக உருவெடுத்து வருத்தமாகப்பரிணமித்து விட்டது. அப்புறம் அவன் உள்ளத்துக்கும் உடலுக்கும் துளிக்கூட நிம்மதி உண்டாகவில்லை. அவன் மூளையின் ஒவ்வொரு அணுவும் மின்னல் வேகத்தில் இயங்கத் தொடங்கி விட்டது. அந்த வேகம் அவன் மூளையை ஊசி கொண்டு குத்திக் குடையத் தொடங்கி விட்டது. அவன் ஒரு நிலை கொள்ளாமல் எழுந்து சென்று ஊஞ்சலில் உட்கார்ந்தான். ஊஞ்சலின் குணமே உள்ளத்து உணர்ச்சிகளை இன்னும் அதிகமாகக் கிளர்ச்சி கொள்ளச் செய்து தூண்டிவிடக் கூடியதுதானே? ஆடும் ஊஞ்சல் அவன் உள்ளத்தைக் குலுக்கி எடுக்கும் வெறியாக அமைந்து விட்டது. ஜகதீஷுக்கு உடலை என்னவோ செய்தது. அவனுக்குத் தலைவலி மண்டையைப் பிளக்கத் தொடங்கியது. தலைவலி தாங்க முடியாமற் போகவே, ஊஞ்சலில் ஒரு புறத்தில் இருந்த பெரிய தலையணையைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டு அதில் தலையைப் புதைத்துக் கொண்டான். பிறகு இரு கண்களையும் இறுக மூடிக் கொண்டான்.

கண்களை மூடிக் கொண்டு விட்டதனால் தூக்கம் வந்து விடுமா? அல்லது சிந்தனைகள் தான் கலைந்து விடுமா? கண்களை மூடிக் கொண்டிருந்த பொழுதிலும் அவன் விழித்துக் கொண்டுதான் இருந்தான். கடைசியில் அக்கம் பக்கத்துச் சூழ்நிலையை மறந்து தூக்கத்தின் பொழுது காணும் கனவைக் காட்டிலும் தத்ரூபமாகப் பளிச்சென்று பிரகாசிக்கும் காட்சிகளை விழிப்புற்ற அந்த நிலையிலேயே காணத் தொடங்கி விட்டான். ஜுகல் கிஷோருடன் சேர்ந்து தானும் எத்தனையோ ஏமாற்று வித்தைகளில் இறங்கி விட்டதாகக் கனவு கண்டான். ஆட்சி பீடத்தின் ஆணி வேர், சல்லி வேர் உள்பட எல்லாவற்றையும் அடியோடு பிடுங்கியெறிந்து விட்டதாகக் கனவு கண்டான். தேசத் தொண்டு செய்வதாக வேஷம் போடும் தொண்டர்களைத் தேடிப் பொறுக்கிக் காளான்களைப் போல் களைந்தெறிந்து கட்சியிலிருந்து வெளியேற்றி விட்டதாகக் கனவு கண்டு களிப்பெய்தினான். பொய்யும் புனைசுருட்டுமே உருவான பத்திரிகையாசிரியர்களைப் பிடித்துக் கழுவில் ஏற்றி விட்டதாகக் கனவு கண்டு களிப்புற்றான். பிறகு சமூகத்திலுள்ள மூட்டான்களின் கும்பல்களையே பூண்டோடு ஒழித்து விட்டதாகப் பெரு மகிழ்வு கொண்டான். அவன் அப்படி எத்தனை நேரம்தான் கண் விழித்தபடியே கனவு கண்டு கொண்டிருந்தானோ, அவனுக்கே தெரியாது!

ஆனால் தட தட வென்று கதவு தட்டப்படும் சப்தம் கேட்கவே, அவன் மூடியிருந்த கண்களைத் திறந்தான். பக்கத்திலேயே கோகிலா நின்று கொண்டு மெதுவாக அவனுக்கு விசிறிக் கொண்டிருந்தாள். அதைக் கண்ட ஜகதீஷுக்கு, மென்மை யென்னும் மாபெரும் கடலில் மூழ்கி மூத்துக் குளிப்பது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. கண்களைக் கொட்டாமல், முகத்தில் எவ்வித உணர்ச்சிக்கும் இடம் கொடாமல் அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் தட தட வென்று வாசற் கதவை வேகமாகத் தட்டும் சப்தம் வந்தது. கோகிலா சென்று மெதுவாகக் கதவைத் திறந்தாள். கதவைத் திறந்ததும் கடுகடுப்பே உருவான ஒரு போலீஸ்காரனின் முகம் தெரிந்தது. அவன் கம்பீரமே உருவாக வாசற் படிக்கு மத்தியில் மிகுந்த மிடுக்குடன் நின்று கொண்டிருந்தான். (தொடரும்)

வாலாஜா பாலர் இல்லம்

முருகதாசர்

பசி என்றால் உள்ளம் பதைக்கிறது. ஒரு வேளை ஆகாரம் காலம் தவறி விட்டால் கண், காது வேலை செய்வதில்லை. "மூன்று நான்கு நாளாக உணவு இல்லை ஐயா, பசி காதை அடைக்கிறது" என்று ஒருவர் சொல்லும் போது நமக்கு உடம்பெல்லாம் நடுங்குகிறது.

பசிக் கொடுமையால் எங்காவது ஒருவன் மாண்டால் அது நம் நாட்டுக்கு ஒரு களங்கம். சிலர் மட்டும் அமுதுண்டு வாழ, பலர் கண்டதைத் தின்று பசியால் வருந்தி அழுது மடியும் போது அதைக் கண்டும், கேட்டும் உதவி செய்யாமல் ஒரு சமூகம் இருக்குமானால் அது மன்னிக்க முடியாத ஒரு குற்றம். அதனால் ஏற்படும் கொடிய விளைவை எந்தச் சக்தியாலும் தடுக்க இயலாது. பஞ்சப் பேயைப் பரவ விடுவது பாவம். இந்தப் பரிதாபத்தைத் தடுக்க அனைவரும் சுயநலம் விட்டுத் தம்மால் ஆன உதவியையும், ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டும்.

"ஏழை என்றும் எளியன் என்றும்
எங்குமின்றி நாட்டிலே
பாழையும் உழுது வளம்
பெருகப் பணிகள் செய்வீரே!"

என்று நாட்டு மக்களை அழைக்க வேண்டும். நாட்டின் நிலைமையை நல்லதாக்கிச் சமூகத்துக்குப் பொதுவாக எல்லா நலன்களும் பெருகுமாறும் பரவுமாறும் செய்ய வேண்டும். அதற்கு இரண்டு தீய விரோத சக்திகள் உண்டு. ஒன்று பஞ்சம்; மற்றது சுயநலம். ஞானிகள், மஹாத்மாக்கள், உண்மைத் தலைவர்கள் அனைவரும் சுயநலம் ஒழிவதற்காகவே பாடுபட்டார்கள்.

ஒருவன் கெட்டவன் ஆனால், பலரைக் கெடுக்கத் தயங்க மாட்டான். ஒருவன் எவ்வளவு நல்லவன் ஆனாலும் பசி வந்து அவன் பண்பையும், மனத்தையும் கெடுக்குமானால் பலரைப் பகைத்துக் கொள்வான். அவனது பகை பலருக்குத் தீமை செய்யத் தயங்காது. கொடுமைக்கெல்லாம் காரணம் பசியைக் கிளப்பும் பஞ்சம்.

தொடர்ந்து பல ஆண்டுகள் மழையில்லாததால் வட ஆற்காடு ஜில்லா வறண்டது. பஞ்சம் தோன்றியது. கண்கள் இருண்ட ஏழைகளின் பசிக் கூக்குரல் எங்கும் கிளம்பியது. வாடிய கொடி போல் பசியால் தளர்ந்து பலர் வீழ்ந்தனர். சேய்களும் தாய்களும் பசி, பசி என்று பதறினர். தவம் கிடந்து பெற்ற செல்வக் குழந்தைகளை விலை கூவி விற்றனர். இதுதான் பிரளயமோ! எத்தனை கொடியது பஞ்சம்!


பசியால் துடிக்கும் மக்களின் இனத்தைக் காக்க யாருமே இல்லையா! தெய்வம் உண்டா! அது எங்கே! அது கருணை வடிவம்தானா! எங்களுக்கு இப்பொழுது பசியாறினால் போதும் என்ற இருதயக் குமுறல் புலம்பும் ஓலம் கருணை உள்ளம் படைத்த ஒரு சிலர் காதில் பட்டது. பஞ்சக் கோலம் கண்ணில் தெரிந்தது. கருணை கருத்தில் ஊறியது.

வாழ்நாளெல்லாம் காந்தியத் திருப்பணிக்கே என்று ஈடுபட்ட தொண்டர்களான ஸ்ரீமான்கள் கே. ஆர். கல்யாணராமய்யர், ஆக்கூர் அனந்தாச்சாரியார், பிக்ஷு நிர்மலானந்தா ஆகியவர்கள் கிராமம் கிராமமாக நடந்து சென்றனர். பஞ்சத்தின் கோரத் தாண்டவத்தைப் பார்த்தனர். பசித்த முகங்களைப் பார்த்துக் கண்ணீர் வடித்தனர். பஞ்சத்தில் அடிபட்ட ஏழைகளுக்குக் கஞ்சியும், கூழும் வாரி வழங்கினர். பலர் ஒத்துழைப்பால் மூலை முடுக்குகளிலெல்லாம் ஏழை மக்களுக்குக் கஞ்சி கிடைக்க வழி செய்தனர்.

காந்தி மிஷன் சொஸைட்டி, அன்னதான சிவன் சங்கம், சர்க்கார் இவர்கள் மூலம் பஞ்ச ஒழிப்பும் நிவாரண வேலைகளும் தீவிரமாயின.

சாகும் உயிர்கள் காக்கப்பட்டன. பல ஆயிரம் குழந்தைகள் பால் பருகின. அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது. ஏழைகள் கஞ்சி குடித்துப் பசியாறி வயிறு குளிர்ந்தனர். உடுத்திக் கொள்ள ஒரு முழத் துணிமணிகள் இல்லாதிருந்த ஏழை மக்கள் பலர் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளத் தாராளமாகத் துணிகள் பெற்றனர்.

பாலர் இல்லத்து அனாதைச் சிறுவர்கள்



இதனிடையே தாய் தந்தையர் அற்ற திக்கற்ற குழந்தைகள் யமனோடு போராடிக் கொண்டிருந்த கோரக் காட்சி தொண்டர்களின் உள்ளத்தை உருக்கியது. உடனே அவர்களுக்கு உயிர் அளித்து வாழ்விக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. திட்டம் போடப்பட்டது. இத்தகைய திட்டத்தின் மத்தியில் தோன்றியதே தீனபந்து ஆசிரமம் என்ற பாலர் இல்லம்.

** ** **

ராணிப்பேட்டையில் 2—12—52ல் துவக்கப்பட்டது பாலர் இல்லம். அங்கே மூன்று மாதம் நடந்த பிறகு, வாலாஜா பேட்டையில் பாழடைந்து



சிறுவர்கள் காலைப் பிரார்த்தனை செய்கின்றனர்

இருந்த ஓர் சத்திரம் ஆயிரம் ரூபாய் செலவில் செப்பனிடப் பட்டுச் சகல வசதிகளுடனும் பத்து ஏக்கரா நிலத்துடன் பாலர் இல்லம் நடத்தக் கொடுக்கப்பட்டது. அந்த இடத்துக்குத் தீனபந்து ஆசிரமம் என்று பொருத்தமான பெயர் வைக்கப் பட்டது.

சென்ற ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதி தீனபந்து ஆசிரமத் திருநாளென்று பஜனை செய்யுமாறு தாஸனுக்கு அழைப்பு வந்தது. அதிகாலையில் அங்கு சென்றோம். கேட்பாரற்றுப் பாழடைந்திருந்த சத்திரம் பண்படுத்தப்பட்டு துப்புரவாக இருந்தது.

சுற்றுப்புறமெல்லாம் ஒரே பொட்டல். அருகில் ஒரு குளம். அதில் தண்ணீரே இல்லை. உள்ளே சென்றோம். "ரூபாய் ஆயிரம்வரை செலவுசெய்து சத்திரத்தைப் பண்படுத்தித் தந்த வள்ளல் மேயர் அன்று கம்பெனி ஸ்ரீ மாசிலாமணி முதலியார் இவர்தான்" என்று அறிமுகப்படுத்தினர். பல தொண்டர்கள் அறிமுகப்படுத்தப் பட்டனர். மாலை நேரம் வந்தது. திரளான மக்கள் கூடினர். ஜகஜ்ஜோதியாக மின்சார விளக்குகள் ஒளி வீசின. அழகிய மேடை. உள்ளம் உருக அருமையாகப் பலர் பேசினர். தாஸன் பிரார்த்தனையுடன் ஆரம்ப விழா நடந்து முடிந்தது. மாதங்கள் சில சென்றன. கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் 24-9-53ல் தீனபந்து ஆசிரமத்துக்கு வருகிறார் என்ற செய்தி கிடைத்தது. ஆக்கூர் ஸ்ரீ அனந்தாச்சாரியாருடன் சென்னையினின்று அறுபத்தேழு மைல்கள் பஸ்ஸில் சென்றோம். வாலாஜா நகருக்கு ஒரு மைல் தூரத்துக்கு முன்பிருந்தே கம்பீரமான கோயில் போலும், புதியதோர் குருகுலம் போலும் தீனபந்து ஆசிரமம் என்ற பாலர் இல்லம் கம்பீரமாகக் காட்சி அளித்தது.

உள்ளே சென்றோம்; சுற்றிப் பார்த்தோம். மனிதனின் உள்ளத்தில் கருணையும், ஒத்துழைப்பும் தோன்றி விட்டால் காரியம் எவ்வளவு சிறப்பாகவும், அழகாகவும் செய்ய முடியும் என்று தெரிந்தது. இல்லம் நிறையக் குழந்தைகள். குளம் நிறையத் தண்ணீர். எல்லாப் பக்கத்திலும் நகர மக்களின் கூட்டம். மாலை நெருங்கிச் சூரியன் மறைந்தான். கவர்னர் ஸ்ரீ பிரகாசா வந்தார்.

அழகிய ஆடையணிந்து இரு மருங்கிலும் நின்று மாணவ மாணவிகள் கவர்னரை வரவேற்றனர். இக்காட்சி எங்களுக்கு ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கியது. பஞ்சத்தில் அடிபட்டு, பசியால் துடித்து அழுத குழந்தைகள் மலர்ந்த முகத்துடன் ஆடிப் பாடி விளையாடிய காட்சி மறக்க முடியாத ஆனந்த சம்பவம்.

கவர்னர் எல்லாவற்றையும் விவரமாக விசாரித்தார். அன்பும், ஆர்வமும், செயலாற்றும் திறனும் கொண்ட ஊழியர்கள் அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர். தாசன் பாடிய பிரார்த்தனை பாடல் ஒன்றை கவர்னர் உள்ளமுருகக் கேட்டுக் களித்தார். தீனபந்து ஆசிரமம் ஆராய்ச்சிச்சாலை அல்ல. தொழிலாளர் சங்கம் அல்ல. ஜாதிமதக் கொள்கை கொண்ட கூடமல்ல. ஆனால் ஏழைக் குழந்தைகளைக் காத்து ரட்சிக்கும், நடமாடும் தெய்வங்கள் வந்து போகும் அனாதை இல்லம். இதற்கு அனைவரும் நண்பர்கள். மாற்றாரே இல்லை. கருணையும், உழைப்பும் இரு கையேந்தி ஏற்கப்படும். இதன் தலைவராக, செயலாளராக உழைப்பவர்கள் அன்பையே துணையாகக் கொண்டவர். உழைப்பால் உருகிக் குழைந்தவர். உயிரைக் காக்கும் உயர்ந்த குணம் படைத்த மனிதர்கள்.

** ** **

மீண்டும் சில மாதங்கள் சென்றன. 28-4-54 இரண்டாம் ஆண்டு விழாவுக்கு அன்புடன் அழைப்பு வந்தது. மகிழ்ச்சியுடன் சென்றோம். அங்கு கண்ட காட்சி ஆச்சரியப்படச் செய்தது. என்னே அற்புதம்! சுற்றிலும் பசும் பயிர், காய்கறி நிறைந்த தோட்டம். எல்லாம் குழந்தைகளின் உழைப்பு. குளம் நிறையத் தண்ணீர். எப்பொழுதும் சுறுசுறுப்பு நிறைந்த குழந்தைகளின் நடமாட்டம். அமைதி, கட்டுப்பாடு, ஒத்துழைப்பு ஆகியவைகளைக் கொண்டு இல்லம் வளர்ந்து இரண்டாண்டுகளைக் கழித்திருந்தது. ஆண்டு விழா கொண்டாடுவதால் உழைப்பையே ஊதியமாகக் கொண்ட இல்லத்து நிர்வாகிகளுக்கு உள்ளத்திலே பெருமிதமும், தோற்றத்திலே அடக்கமும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தன.

குழந்தைகள் காய்கறித் தோட்டத்தில் உற்சாகமாக வேலை செய்கின்றனர்



குழந்தைகளின் உடற் கட்டும், புன் சிரிப்பும் அவர்கள் திக்கற்றவர்கள் என்ற எண்ணமே மறந்து பார்ப்பவர்களுக்குப் பரம திருப்தியை அளித்தது. உழவு, தொழில், அறிவு எல்லாம் இங்கு வளர்க்கப்படுகிறது. அருகிலுள்ள பாடசாலைக்குக் குழந்தைகள் அணி வகுத்துச் செல்கின்றனர். ஆசிரமத்தில் பிரார்த்தனை சமயம் விசேஷமானது. தெய்வீகம் இங்கு தாண்டவம் ஆடுகிறது. திருக்குறள் சிறந்த முறையில் போதிக்கப்படுகிறது. நான்கு வயது குழந்தை யொருவன், மழலை மொழியால் திருக்குறளைப் பிழையின்றிச் சொல்லுவான்.

"குழலினிது யாழினி தென்ப தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

என்ற குறள் நம் நினைவுக்கு வந்து விட்டால் அந்தக் குழந்தையை வாரி அணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு மகிழ்வோம்.

இத்தகைய அரும் திருப்பணியைச் செய்வதில் நம்மவரின் ஆர்வம் தீவிரமாக முன்னேற வேண்டும். அரசாங்கமும் சட்டத்தைத் தளர்த்தி உடனுக்குடன் உதவ வேண்டும். தீன பந்து ஆசிரமத்துக்கு அன்பு ஒன்றுதான் ஆதரவு. பிக்ஷா பாத்திரமே அதன் இரும்புப் பெட்டி. பெயரும், புகழும் அதன் நோக்கமல்ல. "இனி ஏழைகளே இல்லாமல் போக வேண்டும்" என்பதே அதன் பிரார்த்தனை. ஏழைமை யுள்ளளவும் இருக்கு உண்டு' ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமன் அவர்கள் தம்முடைய பூரா நேரத்தையும், உழைப்பையும் பாலர் இல்லத்தின் வளர்ச்சிக்காகச் செலவிட்டு வருகிறார் ஸ்ரீமான்கள் பிக்ஷுவும், ஆக்கூர் ஸ்ரீ அனந்தாச்சாரியும் தங்கள் பேராதரவைத் தந்து இவ்வில்லத்தைக் காக்கின்றனர். தமிழ் நாட்டார் அனைவரும் தீன பந்து ஆசிரமத்துக்கு உதவ முன் வரவேண்டும். ஐம்பது குழந்தைகளுக்கு மாதம் 500 ரூபாய்க்கு மேல் செலவாகிறது. பண உதவியும், பொருள் உதவியும் உடனே தேவை. அன்புள்ளம் படைத்தவர் அனைவரும் இதைத் தங்கள் கடமை யெனக் கொள்ள வேண்டும். உள்ளத்தைக் கவர்ந்து அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான இந்தத் தீனபந்து ஆசிரமத்தைப் பற்றித் தெரிந்து கொண்டால் போதாது. ஒரு முறை வாலாஜாவுக்கு விஜயம் செய்து அந்த பாலர் இல்லத்தைப் பார்க்க வேண்டும். அந்தக் குழந்தைகளைப் பற்றிய நினைவை மறக்கவே முடியாது.

இந்தப் புனிதத் தொண்டுக்கு உதவி செய்ய விரும்புவோர் ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமன், செயலாளர், காந்தி மிஷன் பாலர் இல்லம், வாலாஜாப் பேட்டை, வட ஆற்காடு ஜில்லா என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள். ஆசிரமத்துக் கணக்குகள் சர்க்கார் தணிக்கைக்கு உட்பட்டது. எல்லாக் காரியங்களும் ஒழுங்காக உள்ளது.

படித்துப் பாருங்கள்!

முருகவேள் திருமுறை

(பாகம்—2, 3) (திருப்புகழ் உரை)

தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான் மீது எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் தீந்தமிழ்ப் பாமாலை புனைந்து மனம் உருகித் துதித்திருக்கின்றனர். அவர்களுள் தலை சிறந்த பக்த மணியான அருணகிரி நாதர் அகங் குழைந்து இயற்றிய திருப்புகழ்ப் பாடல்கள் அருமையான சந்தங்களில் அமைந்திருப்பதால் தனிச் சிறப்பு வாய்ந்தவை. திருப்புகழ்ப் பாடல்கள் ஓசை நயமும், பொருள் நயமும் கொண்டு முருகனடியார்களின் உள்ளங்களை எத்தனையோ காலமாகக் கனிய வைத்து வருகின்றன.

மேற்படி திருப்புகழ் பாடல்களுக்கு உரை யெழுதும் ஒப்பற்ற நற்பணியை மேற் கொண்டு தணிகை மணி வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ அவர்கள் தொண்டாற்றிவருகிறார்கள். வ. சு. செங்கல்வராயப் பிள்ளையவர்கள் முருகனிடம் மாறாத நேயம் பூண்டவர்; தொன்மையான தமிழ் நூல்களும் பயின்றவர்; ஆராய்ச்சிப் புலமை மிக்கவர். அத்தகையவர் எழுதிய உரை சிறப்பியல்போடு விளங்குவதில் வியப்பில்லை யல்லவா!

உரையாசிரியர்: தணிகை மணி வ. சு. செங்கல்வராயப் பிள்ளை எம். ஏ., பதிப்பாளர்: ஸ்ரீமதி மீனாக்ஷி கல்யாண சுந்தரம், 2, இரண்டாம் தெரு, வடக்கு கோபால புரம், சென்னை 6; விலை: தொகுதி—2. ரூ. 7-8-0; தொகுதி—3. ரூ 6-0-0.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்

அறுபத்து மூன்று நாயன்மார்கள் சரித்திரத்தையும் அறிவிக்கும் பெரிய புராணத்தை இயற்றித் தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் பெருந் தொண்டாற்றிய சேக்கிழார் அப் புனித நூலின் தொடக்கத்தில் கடவுள் வணக்கமாக "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்ற பாடலை இயற்றி யிருக்கிறார். அப் பாடலின் விரிவுரையாக இந் நூல் அமைந்துள்ளது. பாடலின் பதங்களைத் தனித் தனியாகப் பிரித்து, ஒவ்வொரு பதத்தையும் ஒரு பகுதியாகக் கொண்டு இந் நூல் வெளிவந்திருக்கிறது.

சைவ சித்தாந்தம், உருவ வணக்கம், சைவத்தின் முடிவான கொள்கை, எழுவகைத் தோற்றம், ஆன்மா, மனித உடலின் தத்துவங்கள், ஆன்றோர் அருளிய ஆதாரம் என்று இன்னும் பல விஷயங்கள் பற்றி இந் நூலாசிரியர் பழமையான தெய்வ நெறியை ஆதாரமாகக் கொண்டு சைவ நெறியை ஆராய்ந்திருக்கிறார். இந் நூலாசிரியர் கடல் கடந்து பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வருபவர்; பிறை சூடிய பெருமான் பால் பெரு நேயம் பூண்டு ஒழுகுபவர்; தமிழ் கூறும் நல்லுலக மெல்லாம் சைவ நெறி பரவ வேண்டும் என்னும் ஆர்வம் மிக்கவர்; இக் கொள்கையைப் பல தமிழ் நூல்கள் எழுதி விளக்கியுள்ளார்; தென் ஆப்பிரிக்காவில் சுமார் முப்பது ஆண்டுகளாகத் தமிழ்க் கல்விக்கும் சைவ சமயத்துக்கும் நற்றொண்டு புரிந்து வரும் நல்லன்பர்.

நூலின் முகப்பில் காணப்படும் 'இரண்டாம் குலோத்துங்க சோழன் வரலாறு' என்னும் பகுதி, தமிழக வரலாற்று ஆராய்ச்சிகளை யொட்டி அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிடப்பட வேண்டும்.

பல படங்களுடன் நல்ல தாளில் அழகாக அச்சிடப்பட்டிருக்கும் இந் நூல் சைவப் பெருமக்களின் ஆதரவைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

எழுதியவர்: கோ. இராமசாமி; பிரசுரம்: யுனைடெட் அச்சுக்கூடம்; 27, போன்டு தெரு, டர்பன், நெட்டால், தென் ஆப்பிரிக்கா.

இதோ! உங்களுடைய ரேடியோவிற்கு ஏற்ற அற்புதமான,

புதிய ரேடியோ பாட்டரி

சக்தி நிறைந்தது

விலை குறைவானது
நம்பிக்கைக்குகந்தது
நீடித்து உழைக்கக்கூடியது



பாட்டரி தயாரிப்பதில் முற்றிலும் புதிய முயற்சியின் பயனாக 'எவரெடி' 'மினி-மாக்ஸ்' ரேடியோ பாட்டரி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த பாட்டரியின் உள்ளே ஒவ்வொரு கன அங்குல இடத்திலும் மற்றெந்த பாட்டரிகளையும் விட அதிகப்படியான, வேலை செய்யக்கூடிய பொருள்கள் பொருத்தப்பட்டுள்ளன. தட்டையான செல்கள் அமைக்கப்பட்டிருப்பதால் இதன்பரிமாணமும் கனமும் குறைவாயிருக்கின்றன. ஆயினும் இது முழு சக்தியை அளித்து, வெகு நாள் நீடித்து உழைக்கக்கூடியது. இதுவே உங்களுடைய ரேடியோவிற்கு ஏற்ற பாட்டரி!

EVEREADY

MINI-MAX


'எவரெடி' 'மினி-மாக்ஸ்'
ரேடியோ பாட்டரிகள்

உங்கள் பணத்திற்கு அதிக மதிப்பு... நீங்கள் செலவழிக்கும் பணம் சக்திக்காக——பாக்கிங் வஸ்துக்களுக்காக அல்ல!

'எவரெடி' 'மினி-மாக்ஸ்' ஏன், எவ்வாறு, இதர பாட்டரிகளை விட நன்றாக வேலை செய்யக்கூடியது என்று உங்களுடைய ரேடியோ வியாபாரியிடம் கேளுங்கள்.

ஒரு நாஷனல் கார்பன் தயாரிப்பு

NCM 3908



பசும் பொன்

பூவை

"சேது! ஏ, சேது!"

"ஸார்... எசமான்...!"

"மூடிங்க போச்சுதா!"

"ஆயிடுச்சுங்க, எஜமான். மருந்துப் பையை நீங்க உட்காரும் இடத்துக்குப் பக்கத்திலே யிருக்கிற பெட்டியிலே வைச்சிருக்கேன். இனி நீங்க காரை எடுத்துக்கிட்டுப் புறப்பட வேண்டியது தான் ஸார் பாக்கி!"

"சரி!" என்று சொல்லிவிட்டு டாக்டர் காரில் ஏறிக் கொண்டார். கார் புறப்பட்டுச் சென்ற திக்கையே இமை பாவாமல் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தான் சேது.

"சேது!"

"அம்மா!" என்று சொல்லிக் கொண்டே கூடத்துக்குள் பாய்ந்து சென்று நின்றான். அவன் மூச்சு மேலும் கீழும் இழுத்தது.

"ஐயா போயிட்டாங்களா, டிஸ்பென்சரிக்கு!"

"ஆமாங்க, அம்மா."

"சரி. அதோ பார், ராஜா உனக்காக முகாரி பாட ஆரம்பித்து விட்டான். ராஜாவுக்கு ஆனந்த பைரவி கத்துக் கொடேன் சேது!"

"நொடியிலே பாருங்க அம்மா! நம்ம ராஜாவை அப்படியே சிரிக்கப் பண்ணி விடுகிறேன்!"

"சேது, முதலில் உன் வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொண்டுவிடு. அப்புறம் ராஜா உன்னை விட்டு அப்பால் நகரவே சம்மதிக்க மாட்டான். சமையல் உள்ளில் இட்டிலி, காப்பி எல்லாம் எடுத்து வைத்திருக்கேன். ஓடு, சாப்பிடு!"

"ராஜா அழுகிறப்போ, எனக்கு எப்படி அம்மா சாப்பிடத் தோணும்! முதலிலே ராஜாவைச் சமாதானப் படுத்திவிட்டு ஒரே ஓட்டமா ஓடி வந்து விடுகிறேன்......சரிதானுங்களா!"

"உனக்கு என்ன இருந்தாலும் வைராக்கியம் அதிகம் சேது! சீக்கிரம் வந்துவிடு."

"ஹி...ஹி..." என்று சிரித்தான் சேது.

கைநொடிப்பொழுது சென்றது; கூடத்திலிருந்து ராஜாவின் கள்ளமில்லாச் சிரிப்பும் சேதுவின் களங்கமில்லாத வெள்ளைச் சிரிப்பும் கைகோத்து எதிரொலித்துக் கொண்டிருந்தன.

பார்வதியின் உதட்டுக் கோணத்தில் புன்னகைப்பூ மூகை யவிழ்ந்து கொண்டிருந்தது.

★

அன்றையப் பகல் கழிந்தது.

இரவின் இருட்டடிப்பில் உலகம் பயங்கரப் பூதமாகக் காட்சி யளித்துக் கொண்டிருந்தது.

டாக்டர் சுந்தரேசன் அப்பொழுது படுக்கையில் போய்ப் படுத்தார்; அப்பொழுதென்று வாசலிலிருந்து 'அவசர மணி' அலறியது; டாக்டர் வேகமாகச் சென்றார். யாரோ ஒருவன் தன் மனைவியுடன் ரிக்ஷாவிலிருந்து இறங்கினான். அவள் நிறை மாசக்காரி. கணவன், மனைவிக்குள்ள வேதனையையும் குறைபாடுகளையும் ஒப்புவித்தான். பரிசோதனை நடந்தது.

"ஐயா, நானே உங்கள் மனைவிக்குச் சுகப் பிரசவம் ஆகிவிடும்...என் நர்ஸிங் ஹோமிலேயே சேர்த்து விடுங்கள் உங்கள் மனைவியை. எதற்கும் முன் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. தலைப் பிரசவமல்லவா!..." என்றார் டாக்டர்.

"சரி" என்று சொன்னான் வந்தவன்.

டாக்டருக்கு ஓர் இன்ப நினைவு படர்ந்தது. 'ஆகா! என் பார்வதிக்கும் இதுதானே மாதம்! இதுதானே தலைப் பிரசவம்! என் மனைவிக்கும் சுகப் பிரசவமாகிவிடு மல்லவா!......நல்ல சேதி கிட்டுமல்லவா! பகவானே!...' என்று நினைத்துக் கொண்டார்; பெருமூச்சு விட்டார்.

இரவுக்கென்று, சோதனை போல பார்வதிக்கும் பிரசவ வேதனையும் வலியும் எல்லை மீறி விட்டது.

சுந்தரேசன் சோதித்துப் பார்த்தார்; பயமில்லை என்று அவருக்கு நாடிப் பரிசோதனையும் 'ஸ்டெத்தாஸ்கோப்' பரீட்சையும் விளைவு சொல்லியுங்கூட, அவர் மனம் அடித்துக் கொண்டது; சக டாக்டர் நண்பரை மிக அவசரமாக அழைத்து வரச் சேதி அனுப்பினார்.

அப்பொழுது "ஐயா, ஐயா, ஐயா உங்கள் வீட்டில் திருடன்...திருடன்..." என்று அலறியடித்துக் கொண்டு யாரோ ஒரு சிறுவன் நின்றான். டாக்டர் சுந்தரேசன் தலை நிமிர்ந்துப் பையனைப் பார்ப்பதற்குள், பையன் திருடனைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொண்டான்.


பார்வதிக்கு ராஜா பிறந்தான்!

டாக்டர் அந்தச் சிறுவனைத் தன்னுடனேயே, தன் இல்லத்திலேயே இருந்து விடுமாறு சொன்னார். பையன் கால் வைத்த வேளை, பார்வதிக்குச் சுகப் பிரசவமாயிற்று; திருடனிடமிருந்து தன் பணம் பிழைத்தது என்ற நன்றியுணர்ச்சி டாக்டருக்குப் பெருகி வளர்ந்தது.

சேது ஆஸ்பத்திரியில் ஆபீஸ் பையன்; வீட்டில் வேலைக்காரப் பையன்! அவர்களுக்கு அவன் வலது கைபோல!

சேதுவின் கதையைப் பற்றி ஒரு நாள் தம்பதிகள் இருவரும் கேட்டார்கள்.

"எனக்கு அம்மா இல்லே. அம்மா இருந்திருந்தா, அம்மா சாப்பிடுற கஞ்சியிலே பாக்கம் பாதி கிடைக்கும். அப்பா செத்து விட்டாங்க. அப்பா மட்டும்தான் இருக்காரு. அவர் உயிரோடே இருக்கிறதும் இல்லாததும் எனக்கு ஒண்ணுதான். பெற்ற பிள்ளையாச்சே என்கிற அக்கறை, பாசம் துளிகூட இருக்கல்லே அவருக்கு ... சோறு கண்ட இடம் சொர்க்கம் அவருக்கு. நாளைக்கு எட்டு ஊர் சுற்றி அலைந்து திரிந்து வயிற்றை நிரப்பிக்கிடுவாரு ...... ஆனால் எனக்கு ஏனோ அப்படி வாழ மனசு இடம் தரவில்லே. அன்றைக்கு உங்க வீட்டுக்கு முதன் முதல்லே வந்தப்போ, நீங்க சோறு போட்டு, நான் சாப்பிட்டேனே ...... அது நாலு நாள் பட்டினிக்கப்புறம் கிடைத்த அன்னமுங்க. உழைக்கணும்; உழைச்சுச் சாப்பிட்டாத்தான் மனசுக்கு நிம்மதியின்னு எங்க வாத்தியார் ஐயா பாடம் சொல்லியிருக்கார்! ஆனால் என் அப்பா போல ஒரு நாளும் நான் இருக்கவே மாட்டேன்" என்றான் சேது. அவன் கண்களில் அருவி நீர் போல் கண்ணீர் வழிந்தது.



சிறுவனின் பொறுப்புணர்ச்சி, நேர்மை வாழ்வு, உழைப்பில் கொண்டுள்ள நம்பிக்கை எல்லாவற்றையும் கண்ட தம்பதிகள் மலைத்துப் போனார்கள். பத்து வயதுச் சிறுவன் என்றாலும், பழுத்த பழம் போல் அல்லவா 'வாழ்க்கை' அவனுக்குப் பாடம் ஆகி விட்டிருக்கின்றது!

காலம் வளர்ந்து கொண்டிருந்தது.

சோற்றுக்கும் துணிக்கும் மட்டும் வேலைக்கமர்ந்த சேதுவுக்குச் 'சம்பளம்' கொடுத்தார் டாக்டர் சுந்தரேசன். ஐந்து ரூபாய்!

குழந்தை ராஜாவுடன் குதூகலித்துக் கொண்டிருந்த சேதுவுக்கு இது கனவென்றுதான் பட்டது. முதலாளியின் பெருந்தன்மையைக் கண்டு சிறுவன் ஆனந்தக் கண்ணீர் விட்டான்.

"எசமான், என்னுடைய அப்பா விலாசம் சொல்றேன். அவருக்கு இந்தப் பணத்தை அனுப்பி வைக்கிறீங்களா '......அவர் கைச் செலவுக்கு இது ரொம்ப ஒத்தாசையா யிருக்கும்."

"ஆகட்டும் சேது" என்று தட்டிக் கொடுத்தார் அவனுடைய டாக்டர் எஜமானர்.

பார்வதிக்குச் சேதுவின் பொறுப்புணர்ச்சியும் கடமையும் கண்ணீர் வரச் செய்து விட்டது.

"சேது! எனக்குக்கூட ஒரு யோசனை தோணுகிறது. உன் அப்பாவையும் ஒரு நாள் ஊருக்குப் போய் அழைத்துக்கொண்டு வந்து விடு. அவரும் நம் வீட்டிலேயே ஏதாவது வேலை வெட்டியைப் பார்த்துக்கொண்டு இருந்து விடட்டுமே. உனக்கும் மனசுக்கு அமைதியாக யிருக்குமே அப்படியே செய். சேது!......"

மனைவியின் பிரேரணைக்குக் கைதூக்கி ஆமோதித்தார் டாக்டர் சுந்தரேசன்.

"யோசிச்சுச் சொல்றேனுங்க, அம்மா! உங்க ரெண்டு பேருடைய அன்பும் ஆதரவும் எனக்குக் கிடைக்கிறதுக்கு நான் போன ஜென்மத்திலே ரொம்ப ரொம்பப் புண்ணியம் செய்திருக்க வேணுமுங்க. எல்லாம் எங்கள் குல தெய்வம் சங்கிலிக் கருப்பண்ணசாமி கிருபை......!"

★

அவனுடைய ஆசைப் பிரகாரம் தன் தந்தைக்குப் பணம் அனுப்பிவிட்டசெய்தியை டாக்டர் கூறக் கேட்டதிலிருந்து சேதுவுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. மகத்தான சாதனை புரிந்து விட்டதாக அந்தப் பிஞ்சு நெஞ்சிலே பெருமிதம் ஊறி வழிந்தது. சேது தன் அப்பாவை மனக் கண்முன் கொணர்ந்தான்; மெலிந்து வாடிய உடல்; முகமெங்கும் வறுமையின் தாண்டவம்: பொலிவிழந்த தோற்றம்! மேலே அவனால் எண்ணக்கூட முடியவில்லை.

அன்று டாக்டர், தன்னுடன் தன் தந்தையையும் அழைத்து வந்திருக்கச் சொன்ன யோசனையையும் நினைவுக்கு வந்து அவனுக்கு மெய்ச் சிலிர்ப்பைத் தந்தது. ஆனந்தக் கூத்தாடினான்!

அதற்குள் குழந்தை ராஜா தவழ்ந்து வந்து விட்டான். கண்ணோரத்தை விரல் நுனியால் துடைத்து விட்டவனாகக் குழந்தையைத் தூக்கி யெடுத்து முத்தம் கொடுத்தான்.

★

இரவு வளர்ந்து கொண்டிருந்தது!

பார்வதி வட்டிலில் பிசைந்த பிடி சோற்றுடன் வந்தாள். சேது பாடிய பாட்டில், ராஜா ஒவ்வொரு சோறாக ரசிக்கத் தொடங்கி விட்டான்.

"சேது..."

"ஸார்!"

"நீ கொடுத்த உன் அப்பாவின் விலாசம் சரி தானே!" என்று கேட்டார் டாக்டர்.

"ஆமாமுங்க; ஏனுங்க, எசமான்!"

"அனுப்பிய மணியார்டர் திரும்பி வந்து விட்டது. விலாசதார் இல்லையாமே!"

பொம்மை சாயலில் நின்றான் சேது. கண்ணீர் முட்டிக் கொண்டு புறப்பட்டது.

"அழாதே தம்பி! உன் அப்பாவைத் தேடிப் பார்க்க ஆவன செய்கின்றேன். போ. போய்ச் சாப்பிடு" என்றார்.

நடுச்சாமத்துக்கு மேலிருக்கலாம்.

"திருடன், திருடன்!" என்று அலறிக் கூப்பாடு போட்டாள் பார்வதி. சேது வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்.

குழந்தையின் கழுத்தில் கையைத்திருந்த திருடனைக் கையும் களவுமாகக் கணக்காகப் பிடித்து விட்டார் டாக்டர் சுந்தரேசன். இடது கைப் பிடிப்பில் திருடனைப் பற்றியவாறு, வலது கையால் கூடத்து விளக்கின் 'ஸ்விச்சை'ப் போட்டார்.

"சேது......முன்னொருதரம் நம் வீட்டில் திருட வந்த கள்ளனை நீ வசமாகத் தண்டித்தாயே, அதைக் கொஞ்சம் இந்தத் தடியனுக்குச் சொல்... பாவம், திருடன் புதுசு போலிருக்கிறது...அந்தச் சவுக்கினால் கொஞ்சம் கவனி இவனை..." என்று பணித்தார் டாக்டர்.

திருடனை ஏறிட்டுப் பார்த்தான் சேது. மறு கணம் சிலையானான். சித்தம் சுழன்றது.

அடுத்த நிமிஷம் சவுக்குடன் வந்தான் சேது. சவுக்கை வீசினான். "ஐயோ!" என்று அலறிக் கொண்டு சிறுவன் தரையில் சாய்ந்தான். திருடன் பின் சும்மாவா இருப்பான்!

திருடன் தப்பித்துக் கொள்ளப்போன சமயத்தில், திருடன் கைகளில் விலங்கு சிரித்துக் கொண்டிருந்தது. சமயோசிதத்துடன் தம் மனைவி '93'க்கு போன் செய்ததைப் போற்றினார் டாக்டர்.

குழந்தையின் நகைகள் பத்திரமாயிருப்பதறிந்து சுந்தரேசன் நிம்மதி பெற்றார்.

"பாவிப் பயல் சேதுவைத் தள்ளிவிட்டானே, அவனைப் பாருங்கள்" என்றாள் பார்வதி.

சேதுவுக்கு நெற்றியில் ஊமைக் காயம்; டாக்டர் அவனை டிஸ்பென்சரிக்கு அழைத்துச் சென்று காயத்துக்குக் கட்டுப் போட்டார்.

இரவு சேது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டான். ஆனால் பொழுது புலர்ந்து பார்த்தால் சேதுவை வீட்டில் காணவில்லை. அவனுக்குப் பதில் அவன் எழுதி வைத்துச் சென்ற ஒரு நீண்ட கடிதம் மட்டும்தான் இருந்தது!

"அன்பான என் எஜமான், எஜமானி அவர்களுக்கு, உங்கள் வேலைக்காரப் பையன் சேது எழுதிக் கொண்டது:

நான் முன் ஜென்மத்தில் செய்த பாக்கியம் தான் உங்களிடம் வேலைக்கு இருக்கும் நல்ல அதிர்ஷ்டம் கிடைத்தது. ஆனால் அந்த அதிர்ஷ்டத்தையும் என் அப்பா பறித்துக் கொண்டு விடுவார் என்று நான் கனவில்கூட எண்ணவில்லை. நேற்று உங்கள் வீட்டில் திருட வந்த கள்ளன் என் தகப்பன்தான். விதி இப்படிப்பட்ட சோதனையைச் செய்யுமென்று துளியும் நினைக்கவில்லை. ஒரு திருடனின் மகனாக — அதுவும் எனக்கு உப்பிட்ட வீட்டிலேயே கன்னம் வைக்கத் துணிந்த என் அப்பா—அந்தத் திருடனின் மகனாக இனியும் நான் தங்கள் வீட்டில் வேலை செய்ய என் மனம் மறுத்து விட்டது; ஒரு நிமிஷம் இனியும் அங்கிருந்தால் எனக்குக் கிறுக்குப் பிடித்து விட்டிருக்கும். ஆனால், நான் உங்கள் அருமை ராஜாவைக் காணாமல் இனி கட்டாயம் பித்துப்பிடித்துத்தான் சுற்றப் போகிறேன். என் தலைவிதிக்கு நான் என்ன செய்யப் போகிறேன். என்னை உங்கள் பிள்ளையைப்போல வளர்த்த உங்கள் அன்பை இந்த ஏழைச் சிறுவன் ஈரேழு பிறப்புக்கும் மறக்கவே மாட்டான். போய் வருகிறேன், கால்போன போக்கில். இப்படிக்கு,

தங்கள் ஊழியன் சேது."

"சேது! சேது!" என்று வாய் விட்டுக் கதறி விம்மினார்கள் டாக்டர் தம்பதிகள்.

"அம்மா, சேது!" என்று அடம் பிடித்துக் கதறத் தொடங்கினான் பாலகன் ராஜா.

★

டாக்டர் சுந்தரேசனின் வீடு அன்றையத் தினம் அமளிப்பட்டது; டாக்டர் கதறினார்; அவரின் உயிர்த் துணைவி கதறினாள்.

"ஐயோ ராஜா! எங்கேடா கண்ணு அகப்பட்டு விழிக்கிறே! ஐயோ! அறியாத பருவமாச்சே. காட்டுக் கொன்று மேட்டுக் கொன்றாய் பள்ளமும் பாதாளமும் நிரம்பிக் கிடக்குதே. கண்ணே! உன் முகத்தைக் கண்டு நாலு மணியாச்சுதே ராஜா!" என்று புலம்பினாள் பெற்றவள்.

நாற்காலியில் கன்னத்தில் பதித்த கைகளுடன் வீற்றிருந்தார் சுந்தரேசன். எல்லாம் அவருக்குப் புதிராக இருந்தது. மகனின் மோகன பிம்பம் அவர் மனத் திரையில் ஆலவட்டம் சுற்றியது.

"ராஜா!" என வாய் விட்டுக் கதறினார்.

"டாக்டர் ஸார்! உங்கள் ராஜா இதோ,



பாருங்கள்—கண்டு பிடித்து விட்டோம்" என்று சொல்லியவாறே 'சல்யூட்' அடித்து நின்றனர் இரண்டு போலீஸ் ஜவான்கள்.

"ஆ, ராஜா!" என்று பெற்றோர்கள் இரண்டு பேரும் போட்டி யிட்டுக் கொண்டு ஓடினார்கள்.

"அம்மா, இதோ சேது!" என்று குழந்தை ராஜா எதிரே கையை நீட்டித் தேம்பினான்.

எதிரே திரும்பினார்கள். சேது நின்றான்.

"சேது!" என்று ஒரே சமயத்தில் அழைத்தார்கள் தம்பதிகள் உணர்ச்சிப் பெருக்குடன்.

"ஸார், இந்த வாண்டுப் பயலை மட்டும் நாங்கள் கண்டு பிடிக்க ஒரு கணம் தாமதமா யிருந்தால் குழந்தையின் நகைகள் அத்தனையையும் திருடி விட்டுக் கம்பி நீட்டி யிருப்பான், ஸார். இப்போதே பயலைக் கம்பி எண்ண வைத்தால்தான் புத்தி வரும்" என்றான் ஒரு ஜவான். 'ஆமாம்' பாட்டுப் பாடினான் அவனுக்குத் தோழன்.

"என்ன, சேதுவையா நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள்! சேது தங்கக் கம்பியாச்சே. அவன் எங்கள் வீட்டுப் பிள்ளையாச்சே! ஆ, சேது! உன் உடம்பெல்லாம் ஏது இத்தனை ரத்தக் கீறல்கள். ஐயோ! காரணம் இல்லாமல் கடைசியில் உன்னைத் தண்டித்து விட்டிருக்கிறார்களே இந்த போலீஸ் ஜவான்கள்! பார்வதி, நம் சேதுவை முதலில் கவனி! ஐயோ, பாவம்!" என்று மனம் கசிந்து கூறினார் டாக்டர்.

"ஐயா, என்னை மன்னிப்பீர்களா! உங்களிடம் விடை கேட்காமல்கூட ஓடிவிட்டேன். என்னால் ராஜாவைப் பிரிந்து ஒரு நிமிஷங்கூட இருக்க முடியவில்லை. கிறுக்குப் பிடித்துவிடும் போலே யிருந்தது. ஓடோடியும் வந்தேன். வந்ததும் ராஜாவைத் தூக்கிக்கிட்டுப் பூங்காவுக்குப் பக்கம் போய் உட்கார்ந்தேன். ராஜாவோடே கொஞ்சிக் கிட்டிருந்ததிலே நேரம் போனதே தெரியல்லே. ஆனா ராஜாவை நான் உங்ககிட்டே சொல்லாமல் தூக்கிப் போனது இவ்வளவு விபரீதமாயிடும் என்று நினைக்கவே யில்லை ஐயா! போலீஸ்காரங்க சொன்னாங்களே, அது கணக்கிலே நீங்களும் என்னைத் திருட்டுப் பயல் என்று முடிவு கட்டுவீங்களா! என் அப்பனைப் போல நானும் திருடன்னுதான் பட்டப்பேர் எடுக்க வேண்டி வருமா!......ஐயா,......அம்மா......ராஜா."

"சேது, நீ பத்தரை மாற்றுப் பசும் பொன் அல்லவா! அழாதே...!" என்றார் டாக்டர்.

சேதுவின் அழுகை நிற்கவில்லை. அதற்குள் "சேது, மகனே!" என்ற குரல் எதிரொலித்தது.

போலீஸ்காரர்கள் இருவரின் சூழலில் அங்கு சேதுவின் தந்தை நின்றார்.

சேது ஒரு தரம் நிமிர்ந்து தந்தையைப் பார்த்தான்; மேனி முழுமையும் நடுங்கியது.

"என்ன, மறுபடியும் எதுக்கு இங்கே வந்தீங்க! என்னுடைய அப்பனா நீங்க! ஐயோ, நீங்க எனக்கு எமன்!" என்று சீறினான் சேது.

"சேது, நான் திருந்தி விட்டேன். நான் இனி புது ஏழுமலை! உன் எஜமான்தான் நமக்குக் கண் கண்ட தெய்வம். அவர்தான் என்னை ஜாமீனில் விடுதலை பண்ணியிருக்கிறார். என்பேரில் சாட்டிய குற்றத்தைக் கூட வாபஸ் வாங்கி, என்னைக் காப்பாற்றி யிருக்கிறார். சேது, நீ என்னை மன்னித்து விடு. இத்தனை நல்ல புத்தியுள்ள உன்னை நான் மகனாகப் பெற்றது என் பாக்கியம்தான்!" என்றான் ஏழுமலை, கண்களில் நீர் வழிய.

"நிஜமாகவா!" என்று அதிசயித்து நின்ற சேது, ஓடிப் போய் டாக்டரின் பாதங்களில் மண்டியிட்டுக் கதறிக் கொண்டிருந்தான்!

ராஜம் சகோதரர்களின் கச்சேரி

ஈ. கிருஷ்ணய்யர்

சங்கீதத்தில் பாடகருக்குத் தக்கவாறு பாணியும் அமையும். நாம் கச்சேரி மேடைகளில் கேட்கும் பலவகைப்பட்ட பாடல் வழிகளை இரு வகையாய்ப் பிரிக்கலாம். நன்றாய்ச் செப்பனிடப்பட்ட ராஜ பாட்டையில் ஒழுங்காயும் நிதானமாயும் சவாரி செய்வது போலிருப்பது ஒன்றாகும். குருவிடமிருந்து கற்றதை இலக்கணம் வழுவாது பாடுவதே அவ்வழி. அசாதாரணப் பாதைகளில் இறங்கிப் பிறரை வியக்கும்படி தைரியமாய்ப் பல அபூர்வ வேலைப்பாடுகளைச் செய்து காட்டுவது மற்றொரு வழியாகும்.

ஜூன் 27ல் ரஸிக ரஞ்சனி சபாவில் கேட்ட பி. ராஜமய்யர், கிருஷ்ண மூர்த்தி சகோதரர்களின் சங்கீதம் முதல் வகையைச் சேர்ந்தது. முன்னவர் அரியக்குடி ராமானுஜய்யங்காரிடம் பல வருஷங்களாகக் கலை பயின்றவர். பின்னவர் சென்னைக் கர்னாடக சங்கீத கலாசாலையில் கற்றுப் பட்டம் பெற்றவர். இருவருக்கும் நயமும் மதுரமும் கொண்ட சாரீரம். சின்னவருடைய குரலில் சற்று எடுப்பான காத்திரம்கூடச் சேர்ந்திருந்தது. கல்யாணி, தோடி, அமிர்கல்யாணி, சங்கராபரணம் முதலிய ராகங்களைக் கிருதிகளுக்கு முன் முறையாக ஆலாபித்தார்கள். பைரவியைப் பல்லவிக்கான ராகமாய் வழங்கினார்கள். ராகங்களும், கிருதிகளும், பின்னவைகளில் அமைத்த நிரவல் ஸ்வர ப்ரஸ்தாரங்களும் இலக்கணம் வழுவாது கச்சிதமாயும் ஒழுங்காயு மிருந்தன. 'அம்ப நனுப்ரோவ' 'சங்கராசார்யம்' 'ஸரஸிஜநாப ஸோதரி' கிருதிகளும் வனப்பாயிருந்தன. 'ரங்கபுர விஹார' என்ற கிருதி தீக்ஷிதர் முறையில் தனி உருக்கொண்ட பிருந்தா வன சாரங்கா' ராகத்தில் அமைந்தது. அன்று திருப்பாற்கடல் வீர ராகவனின் வயலின் பக்கவாத்தியம் சிறப்பா யிருந்தது. கும்பகோணம் சிவராமன் மிருதங்கத்திலும் பாலக்காடு சுந்தரம் கடத்திலும் நன்கு ஒத்துழைத்தார்கள். மொத்தத்தில் அன்றையக் கச்சேரி, சுருதி சுத்தமாயும் ஒழுங்காயும் மதுரமாயும் இருந்தது. சபையோரிடம் உணர்ச்சியை யெழுப்பிக் குதூகலம் கொடுப்பதற்கான விசேஷ அம்சங்களை இச் சகோதரர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏராளமான வித்வான்கள் முன்னணிக்கு வருவதற்காகப் போட்டி யிடும் இக்காலத்தில் அத்தகைய விசேஷ அம்சங்களின் அவசியத்தைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. சகோதரர்களின் ஞான பாவத்தையும் தேர்ச்சியையும் கவனிக்கும் போது வசீகரிக்கும் விசேஷ அம்சங்களும் சேர்ந்தால் விரைவில் முன்னுக்கு வருவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அரியக்குடியின் சீடரான மூத்தவர் தமது குழைவான குரலில் காத்திரத்தையும் சற்று அதிகரித்துக் கொள்ளலாம்.

யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரசாமி

24. ஆஸ்துமாவும் மருந்தும்

ஆஸ்துமாவுக்கு ஹார்மோன் மருந்துகளாகிய பிட்யூடரின், அட்ரினேலின் மட்டுமல்ல. மற்றும் எத்தனையோ வித மருந்துகள், மருத்துவங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க இந்த மருந்துகளைப் பற்றி மட்டும் இவ்வளவு ஆராய்ச்சிகள் ஏன்? மற்ற மருந்துகள், மருத்துவங்களைப் பற்றி ஒன்றும் காணோமே எனலாம்.

நமது நாட்டு வைத்தியங்களாகிய ஆயுர்வேதத்தில் அநேக மருந்துகள் இருக்கின்றன. சித்த வைத்தியத்தில் பல மருந்துகள் இருக்கின்றன. யூனானி வைத்தியத்தில் பல மருந்துகளிருக்கின்றன. இவைகளி லெல்லாம், வேர்கள், இலைகள், பல தாது உப்புக்கள், வீரம், பூரம், பாதரசம் போன்ற விஷ வஸ்துக்களைக் கொண்டும் தயாரித்த பல மருந்துகளும் இருக்கின்றன, இவைகளெல்லாம் தொன்று தொட்டு நமது நாட்டில் செய்துதான் வந்திருக்கிறார்கள். மேலை நாட்டு வைத்தியம் இங்கு புகாத நாட்களில் மக்கள் என்ன மடிந்தா போய்க் கொண்டு இருந்தார்கள்? அப்பொழுதும் வாழ்ந்து கொண்டுதான் வந்தார்கள். அரசர் முதல் ஆண்டி வரை அந்த நாட்களில் நமது நாட்டு வைத்தியத்தைத்தான் நம்பியிருந்தார்கள்.

ஆனால் அதில் விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் தற்போது போலச் சரியான அளவு கிடையாது. எந்தெந்த மருந்தில் எந்தெந்த வஸ்து எவ்வளவு சேர்க்கப் படுகின்றது என்பதை யாரும் அறியார்கள்; செய்கின்றவர்களும் மர்மமாய் வைத்திருப்பார்கள். இப்பொழுது செய்வது போல் மருந்துகளை உரிமைப் பதிவு செய்வதில்லை. போகர் 7000த்தில் சொல்லப் பட்டிருக்கின்றதென்று வீரம், பூரம், முதலியவைகளைக் கொண்டு யார் வேண்டுமானாலும் மருந்துகளைச் செய்வார்கள். வீரம், பூரம் முதலியவைகள் கொடிய பாஷாணமாகும். இவைகளின் சரித்திரம்கூட அறியார்கள். அவைகளைச் சுத்தம் செய்யும் முறை பாடலில் விளக்கப் பட்டிருக்கும்.

அதற்கு ஒரு அர்த்தமிருக்க இவர்கள் ஒரு அர்த்தம் செய்து கொண்டு மருந்தைச் செய்வார்கள். கடைசியில் மருந்து சித்தித்தாலும் சித்திக்கும், அல்லது மண்ணாய்ப் போனாலும் போகும். அப்படி மண்ணாய்ப் போய் விட்டாலும் பரவாயில்லை. மனிதனின் உயிரே போய் விட்டால் என்ன செய்வது! எனவே முற்றும் அறிந்தவர்கள்தான் மருந்துகளைச் செய்ய வேண்டுமேயல்லாது கண்டவர்கள் செய்யக் கூடாது.

ஆங்கில மருந்துகள் அப்படியல்ல. அவர்கள் முறைப்படி செய்யும் மருந்துகளை முதலில் பல சோதனைகள் நடத்துகின்றார்கள். வைத்திய சங்கங்களில் அவைகளை வெளியிடுகிறார்கள். அவர்களின் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. உரிமையுடன் மருந்துகளைத் தயார் செய்கிறார்கள். எதுவும் மூடு மந்திரம் கிடையாது. எனவே அவர்களின் மருந்துகள் என்றால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்றது. தவிர, அவர்கள் மேலும் மேலும் விஞ்ஞான முறையில் வெகு விரிவாய் ஆராய்ந்து அறிஞர்கள் ஒப்புக் கொள்ளும் வண்ணம் நடந்து கொள்ளுகிறார்கள். லாபமும் அடைகிறார்கள்.

சுதந்திரமடைந்த நம் நாட்டில் நாமும் அவ்வாறு நமது மருத்துவங்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். எத்தனையோ அற்புத மருந்துகள் இருக்கின்றன. இந்தக் காலத்திலும் பல ஔஷதங்கள் இருக்கின்றன. மேல் நாட்டு விஞ்ஞான முறைகளையும் நமது மருந்துகளில் கையாண்டு மேல் நாட்டவர்களும் நமது மருந்துகளை ஒப்புக் கொள்ளும்படி செய்யலாம்.

மருந்துகளுக்காக மட்டும் நமது நாட்டிலிருந்து ஒரு வருஷத்துக்கு 16 கோடி ரூபாய் வெளி நாடுகளுக்குச் சென்று விடுகிறது. நூற்றுக்குத் தொண்ணூறு சத விகித மருந்துகள் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி யாகின்றன. பத்து சத விகிதந்தான் நமது நாட்டில் தயார் ஆகின்றன. பொருளாதார முன்னேற்றம் வேண்டுமென்று சொல்லுகிறோம். இவ்வளவு ரூபாய் நாட்டை விட்டுப் போனால் எப்படி வாழ்க்கை நிலை உயரும்! ஒரு குடும்பத்தில் நூறு ரூபாய் வருமானமென்றால், ரூ. 20 வைத்தியத்துக்காகச் செலவு செய்தால், அது, வாழ்க்கை நிலை உயர்ந்ததற்கு அடையாளமாகுமா? கிடைக்கும் வருமானமோ வயிற்றுக்கும்போதாது. வறுமையால் வாடி, நோய்கள் மலிந்து வைத்தியத்துக்காகக் கட்டாயம் செலவு செய்ய நேரிடுகின்றது. எனவே ஒருவர் செய்யும் வைத்தியச் செலவைப் பார்த்து அவர் வாழ்க்கைத் தரத்தை மதிப்பிடுதல் கூடாது. அது அவர் குடும்பத்தின் நோயின் தரத்தை எடுத்துக் காட்டுகிறதே அன்றி வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் காட்டுவதல்ல.

நமது நாட்டு வைத்தியங்கள் முன்னேற்றமடைந்தால் நமது பணம் நாட்டில் தங்கும். நம்மவர்கள் பிழைப்பார்கள். ஆனால் அதுவரை மற்ற நாட்டு முறைகளைப் பகிஷ்கரிக்கவும் முடியாது. உயிரைக் கையில் பிடித்து ஊசலாடும் நோயாளிக்குச் சொந்த நாட்டுச் சரக்கு, வெளி நாட்டுச் சரக்கு என்று பார்க்க முடியுமா? எதுவாய் இருந்தாலும் அந்தச் சமயத்துக்கு நம்பிக்கையுடன் சுகமளிப்பதைத்தான் நாடுவார்கள். அந்த முறையில் இன்று ஆங்கில வைத்தியம் நம்மிடையே இருக்கிறது. ஆகவே அதைப் பற்றியே சொல்ல வேண்டியிருக்கின்றது.

அட்ரினேலும், பிட்யூடரினும் நுரை ஈரலை ஊக்குவித்து அதன் காற்றுக் குழாய்களின் இறுக்கத்தைத் தளர்த்துகின்றன. அதைப் போல மற்ற ஏனைய மருந்துகளில் இருக்கக் கூடிய இரசாயனச் சரக்குகளும் இத்தகைய மாறுபாடுகளை நுரை ஈரல்களில் உண்டாக்கக் கூடியதாய் இருக்கும். அதனால் அவைகளும் ஓரளவுக்கு வேலை செய்வதாய் இருக்கலாம். ஆக ஆஸ்துமா மருந்துகளின் முடிவு, தன்மை, வேகம் நுரை ஈரலை ஊக்குவிக்கவும் காற்றுக் குழாய்களின் இறுக்கத்தைத் தளர்த்தவும் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நோயாளிக்கு ஆஸ்துமாவிலிருந்து விடுதலை கிடைக்கிறது என்று தெரிகிறது.

ஒரு வேளை மருந்தைச் சாப்பிடுவதால் உண்டாவதல்ல. பல தடவை பல நாட்களுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். சிலருக்கு எப்பொழுதும் உபயோகிக்க வேண்டும். வாயின் மூலமாக உட்கொள்ளும் மருந்துகளைவிட ஊசி மூலமாக நேரடியாக இரத்தத்தில் செலுத்தும் மருந்தின் சாரம் சீக்கிரமாக வேலை செய்வதால் இன்று ஊசி மூலம் செலுத்தும் மருந்துகளுக்கு முக்கியத்துவம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

காரணம் புரியவில்லை!

ஜூன் மாதம் 20ம் தேதி இதழில் "ஒரு மார்க்கினால் உடைந்த உள்ளம்" என்ற தலையங்கத்துடன் கோவை ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்கள் எழுதியிருந்ததைப் படித்தேன்.

எனது சகோதரி எஸ். எஸ். எல் ஸி. தவறிய மாணவர்களில் ஒரு மாணவி. அவள் மார்க்குகள் பின்வருமாறு. தமிழ் முற்பகுதி 50; இரண்டாம் பகுதி 45. கணக்கு 52; சமூக நூல் 40; விஞ்ஞானம் 40; எல்லாவற்றிலும் 40க்கு மேல் வாங்கியிருக்கிறாள். ஆங்கிலத்தில் 36 மார்க்குகள் வாங்கியிருக்கிறாள். அப்படியும் தேறவில்லை.

ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களுக்கோ 35-க்கு 1 மார்க்கு தேவை. ஆனால் 35க்கு மேல் 1 மார்க்கு வாங்கியும் எனது சகோதரி தேறவில்லை. இதன் காரணம் என்ன என்பது புரியவில்லை.

வேலூர்
28—6—54
எல். ஸி. விஜயா

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அளிக்கப்படுகிறது. தவிர, இம்மாதிரி ஹார்மோன் மருந்துகள் வாயின் மூலம் உட்கொண்டால் ஜீரண உறுப்புக்கள் பாதிக்கப்படுகின்றதாம். அதனால் நேரடியாக ஊசியின் மூலம் இரத்தத்தில் செலுத்தி விடுகிறார்கள்.

நம் உடலில் சென்ற மருந்து எப்பொழுதும் உடலிலேயே தங்கி விடுவதில்லை. ஒரு பெட்டியில் ஒரு வஸ்து போட்டால் அது என்றைக்கும் அப்படியே இருக்கும். ஆனால் நமது உடலில் சென்ற எந்த வஸ்துவும் சில மணி நேரம் பொறுத்து வெளியில் வந்தே தீர வேண்டும். இல்லையானால் உயிருக்கே ஆபத்து ஏற்படும். நாம் சாப்பிடும் உணவு மலமாக வெளியேறாமல் உள்ளுக்குள்ளேயே இருந்தால் என்ன நடக்கும்! அழுகி, அதிலிருந்து பல விஷங்கள், விஷ வாயுக்கள் ஏற்பட்டு இரத்தம் கெடும்; நரம்புகள் கெடும். அதனால் மயக்கமுண்டாகும். பசி இருக்காது. வயிற்று வலி, தலைவலி முதலியன உண்டாகும். நாம் சாப்பிட்ட உணவு ஜீரணமாகி உடல் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு வேண்டாததைக் கழிப்பதால் தான் நாம் சுகமாய் உயிர் வாழ முடிகிறது.

அதைப் போல்தான் மருந்தும். வாயின் மூலமாக உட்கொண்டால் அது ஆகாரப் பைக்குச் சென்று பின் சிறு குடலுக்குச் சென்று அங்கு மருந்து கிரகிக்கப்பட்டு இரத்தத்துடன் கலந்து எல்லா அவயவங்களுக்கும் பின் இரத்தம் பாய்கிறது. அப்படிப் பாயும்போது மந்தப் பட்டிருக்கும் இடம் இந்த மருந்தின் வேகத்தினால் ஊக்கமடைகிறது.

இம்மாதிரி ஊக்கின மருந்து இரத்தத்துடனேயே கலந்து பிரயாணம் செய்ய வேண்டியிருப்பதால் அது இரத்தம் எங்கெங்கு செல்லுகின்றதோ அங்கெல்லாம் மருந்தும் பிரயாணம் செய்கின்றது. இரத்தம் இருதயத்தால் அடித்துப் பாய்ச்சப்பட்டு சரீரம் பூராவுக்கும் செல்லுகிறது. இவ்வாறு ஒரு தடவை அடித்து அனுப்பப்பட்ட இரத்தம் உடல் பூராவுக்கும் பிரயாணம் செய்து மறுபடியும் 23 விநாடிக்குள் இருதயத்துக்குள் வந்துவிடுகிறது. உடல் பூராவுக்கும் சென்று வரும்போது மலினமடைந்து கெட்ட இரத்தமாக மாறுகிறது. போகும் வழியில் குண்டிக்காய்கள் அதிலிருக்கும் வேண்டாத நீர்களையும், வஸ்துக்களையும் வடிகட்டி சிறு நீராகச் சிறுநீர்ப்பைக்கு அனுப்பி விடுகிறது. நாம் வாய் மூலமாகவோ ஊசியின் மூலமாக நேரடியாக இரத்தத்தில் சேர்ப்பதின் மூலமாகவோ செலுத்தின மருந்தும் இரத்தத்துடன் இந்தக் குண்டிக்காய்களுக்கு வரும்போது குண்டிக்காய்கள் அம் மருந்தையும் மற்ற வேண்டாத உப்புக்களையும் நீரையும் பிரிப்பது போல் பிரித்துச் சிறுநீர்ப்பைக்கு அனுப்பி விடுகிறது. பிறகு இரத்தம் நுரையீரலுக்குச் சுத்தமடையவும் பிராண வாயுவினால் போஷணை அடையவும் வருகிறது. குண்டிக் காய்கள் ஒரு தடவையில் மருந்தைப் பூராவையும் வடிகட்டி விடாது. பல தடவை சுழன்று சுழன்று இரத்தம் தன்னிடம் வரும்போது வடிகட்டும். இம்மாதிரி குண்டிக் காய்களில் மருந்து வடிகட்டிவிடப் படுவதனால் இரத்தத்தில் மருந்தின் சக்தி குறைந்து சில மணி நேரத்தில் மறைந்து விடும். இவ்வாறு மறைவதனால்தான் மருந்தை மணிக்கொரு தரமும், இரண்டு மணிக்கொரு தரமும் ஒரு நாளைக்கு மூன்று வேளை நான்கு வேளை என்றும் உட்செலுத்த வேண்டியிருக்கிறது.

இவ்வாறு அடிக்கடி செலுத்தி வருவதனால் நோயாளிக்குச் சுகம் உண்டாகிறது. சிலருக்குச் சில நாளில் சுகம் உண்டாகும். சிலருக்குச் சண்டி மாட்டுக்குத் தார் போடுவதைப் போல எப்பொழுதும் என்றும் மருந்துகளை உபயோகித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும்.

என்ன வாழ்க்கை! சதா எக்காலும் மருந்தின் துணை கொண்டு வாழ்வது ஒரு வாழ்வாகுமா! அம்மாதிரி வாழ்பவர்கள், தம் ஆயுளைப் பூரணமாய் அனுபவிக்க முடியும் என்பது என்ன நிச்சயம்! மனிதர்கள் நோயினால் சாவதை விட மருந்துகளினால் அதிகம் சாகின்றார்கள் என்று மருத்துவ விஞ்ஞானிகளே சொல்லுகின்றனர்.

மருந்து நோய் உள்ள பாகத்தை ஊக்குவிக்கும்போது மற்ற பாகங்களும் மருந்தின் சக்தியால் ஊக்கமடையத்தான் செய்கின்றன. எனவே மற்ற பாகங்களும் தன் இயற்கைக்கு மாறாக அதிகமாய் வேலை செய்கின்றன. நுரையீரலையும், காற்றுக் குழாய்களையும் ஊக்குவிக்கும் மருந்து முக்கிய உறுப்புகளாகிய மூளை, நுரையீரல் இருதயம், குண்டிக்காய், கோளங்கள் ஆகியவைகளைத் தூண்டாமல் இருக்குமென்பது என்ன நிச்சயம்! அப்படி இவைகள் சதா மருந்துகளினால் தூண்டப்பட்டுக் கொண்டே இருந்தால் இதன் வேலைகள் கெடுவதைப் பற்றிக் கேட்க வேண்டுமா!

தவிர, இம்மாதிரி ஹார்மோன் மருந்துகள் கொடுக்க வேண்டுமானால் மனிதனுக்கு மனிதன் மாறுபட்ட அளவில் கொடுக்க வேண்டும். இல்லையானால் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதற்கு ஒப்பாகும். ஹார்மோன் மருந்துகள் அளவுக்கு மிஞ்சினால் சிலருக்கு மூளைக் கலக்கம், இருதயக் கோளாறுகள், மயக்கம், புத்தி சுவாதீனமிழத்தல் போன்றவை உண்டாகி விடும் என்று விஞ்ஞானிகளே சொல்லுகின்றனர். சிலருக்குக் குரல் மாறுபடும். சிலருக்கு முகம் வீங்கி விடும். சிலருக்கு இனம் தெரியாத பயம் உண்டாகி விடும். சிலருக்குப் பெருமூச்சு உண்டாய் விடும். இம்மாதிரி பல சொல்லுகிறார்கள்.

எனவே, இம்மாதிரி மருந்துகளையெல்லாம் வைத்தியர்களின் மேற்பார்வையில் உட்கொள்ள வேண்டியது முக்கியமாகும். ஆஸ்துமாவிலிருந்து என்னமோ உடனே விடுதலையுண்டு, சுகமுண்டு. ஆனால் ஆபத்தும் உண்டு என்பது இதனால் நன்றாகத் தெளிவாகிறது. (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20. Dr. Guruswamy Mudaliar Road Kilpauk. Madras 10.

REGISTERED No. M. 4392

Registered as a newspaper in Ceylon

